Registered as a Newspaper

PUMP
with
Standard Accessories
Select

NEWTONE
Water Pumps

# சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூபா 4-00

மலே: 4 யாழ்ப்பாணம் சுக்கில ஹூ வைகாசி மீ 03 உ. சனிக்கிழமை ஹிஜ்ரி 1409 ஷவ்வால் பிறை 12 (17-06-89) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்: 59

தரமான
உதிரிப்பாகங்களை
கொண்டு பாரிக்கப்படும்

நியூரோன்
வாட்டர் பம்புகளை
வாங்குங்கள்

# இந்திய படை திரும்புவதை விட வேறு பேச்சுக்கே இடமில்லை!

## பிரேமா நாட்டுமக்களுக்குச் செய்தி

கொழும்பு, ஜூன் 17

"எதிர்வரும் ஜூலை 29இற்கு முன்னர் இந்திய அமைதிப்படை வாபஸ் பெறுமாறு இந்திய அரசாங்கத்திடம் நாம் கோரியுள்ளோம். அதற்கு அவர்கள் இணங்குவார்கள் என எதிர்பார்க்கிறோம். இந்த விடயத்தில் வேறு பேச்சுக்கே இடமில்லை."

— இலங்கை ஜனாதிபதி திரு. ஆர் பிரேமதாஸா நாட்டு மக்களுக்கு நேற்று விடுத்த விசேட செய்தியில் இப்படித் தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதியின் விசேட செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

உள்நாட்டில் எமக்குள் ஏற்பட்ட கருத்துவேறுபாடுகள், குழப்ப நிலைகள் காரணமாக அமைதிப்படையைத் திருப்பி அனுப்புவதற்கு பெரிய தடைகள் ஏற்பட்டன.

அமைதிப்படையைத் திருப்பி அனுப்ப தடையை ஏற்படுத்தக் கூடிய செயல்களைப் புரியாமல் இருப்பது நாட்டுப் பற்றுள்ளவர்களின் கடமையாகும்.

அமைதிப்படையை கூடிய விரைவில் அனுப்பிவிடவேண்டும். இதுபற்றி கருத்துவேறுபாடு எதுவுமில்லை.

அமைதிப்படை வந்தபின்னரும் வடக்கு - கிழக்கில் அமைதி திரும்பவில்லை. அதன்

(4-ஆம் பக்கம் பார்க்க)

## புத்துவெட்டுவான் பகுதியில் இடம்பெற்ற மோதல்!

கிளிநொச்சி, ஜூன் 17

கிளிநொச்சி புதுவெட்டுவான் காட்டுப் பகுதியில் கடந்த புதனன்று இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் பல அமைதிப்படை ஜவான்கள் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

புதன்கிழமை காலை கொக்காவில் அமைதிப்படை முகாமில் இருந்து ரோந்து சென்ற ஜவான்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

சம்பவத்தைத் தொடர்ந்து இந்தப் பகுதியில் ஷெல் தாக்குதல்களு, ஹெலித் தாக்குதல்களும் இடம்பெற்றன.

இந்த மோதலில் அமைதிப்படையினர் 14பேர் உயிரிழந்ததாக பி. பி. சி. வானொலி அறிவித்தது தெரிந்ததே. [உ 76]

சுபநேரம்
17—06—1989
சனிக்கிழமை
சுபநேரம்:
02.53 முதல் 04 23 வரை
ராகுகாலம்:
08.53 முதல் 10.23 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

## வாகன பாஸ் வழங்குதல் வாரத்தில் 3 நாள் மட்டுமே

யாழ்ப்பாணம், ஜூன் 17

வாகனங்களுக்கான பாஸ்கள் வாரத்தில் மூன்று தினங்கள் - திங்கட்கிழமை, புதன்கிழமை, சனிக்கிழமை-காலை 8மணி முதல் காலை 10 மணி வரை நகர கமாண்டன்ற் அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும்.

யாழ் நகர கமாண்டன்ற் அலுவலகத்தில் இருந்து வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் இத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. [உ-எ-3]

## யாழ் தபால் பகுதிக்கு புதிதாக 5 வாகனங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 17

யாழ் பிரதம தபால் அலுவலகத்துக்கு புதிதாக ஐந்து வாகனங்களை உடனடியாக வழங்குவதற்கு தபால் அமைச்சு அனுமதியளித்திருக்கிறது.

அடுத்தமாதம் அளவில் மேற்படி வாகனங்கள் யாழ்ப்பாணம் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்படி ஐந்து வாகனங்களும் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்ததும், பஸ் மூலமான தபால் சேகரிப்பு நிறுடத்தப்பட்டு, இந்த வாகனங்கள் மூலமே தபால் சேகரிப்பு நடைபெறும் என தபால் திணைக்கள உயதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-10)

## மருந்து, எரிபொருள்கள் நேற்று ரயிலில் வந்தன

நேற்று வந்த சரக்கு ரயிலில் மருந்துப் பொருள்களும், எரிபொருள்களும் எடுத்து வரப்பட்டன.

தென் பகுதி அசம்பாவிதங்களினால் வீதிப் போக்குவரத்து பாதிக்கப்பட்டதை அடுத்து, வடபகுதியில் மருந்து மற்றும் பெற்றோலிய பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படலாம் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டது.

இதனை அடுத்தே விசேட ஏற்பாட்டின்படி ரயிலில் மருந்துப் பொருள்கள் எடுத்து வரப்பட்டன.

நேற்று வந்த ரயிலில் பெற்றோலியப் பொருள்கள் தாராளமான அளவில் எடுத்து வரப்பட்டது. என்றும் எரிபொருள்களை ஏற்றிக்கொண்டு சரக்கு ரயில் ஒன்று இங்கு வர ஏற்பாடாகியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-9-3)

## தமிழ்ப் படங்கள் இனிமேல் வடக்கு, கிழக்கில் மட்டும்

யாழ்ப்பாணம், ஜூன் 17

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புதிய இந்திய தமிழ்ப் படங்கள் தொடர்ந்து திரையிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்பகுதி திரையரங்குகளில் இந்தியப் படங்கள் திரையிடக்கூடாது என ஜே. வி. பி. இயக்கம் தடை விதித்துள்ளதினால் தெற்குக்குப் பதிலாக வடக்கு, கிழக்கு பகுதிகளில் தமிழ்ப் படங்களைத் தொடர்ந்து திரையிட திரைப் படக் கூட்டுத்தாபனம் முடிவு செய்திருக்கிறது.

திரைப்படக் கூட்டுத்தாபனம் தமிழ்த் திரைப்படங்களின் இரண்டு பிரதிகளை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்வது வழக்கம்.

இனிமேல் இந்த இரண்டு பிரதிகளும் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் ஒரே நேரத்தில் திரையிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

## பிரேமதாஸாவின் கடிதத்திற்கு ராஜீவ் காந்தி பதில் அனுப்புவார்!

### கல்கத்தாவில் அவரே தகவல்

கொழும்பு, ஜூன் 17

அமைதிப்படையை விலக்கக் கோரி இலங்கைஜனாதிபதி பிரேமதாஸா எழுதிய கடிதத்திற்கு இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி பதில் எழுதுவார்.

இந்தத் தகவலை பிரதமர் ராஜீவ் காந்தியே நேற்று வெளியிட்டார். கல்கத்தா விமான நிலையத்தில் வைத்து செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் இருந்து அமைதிப்படையை விலக்கிக் கொள்வது சம்பந்தமாக இந்தியாவின் நிலையைத்தெளிவுபடுத்தி இலங்கை ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு விரைவில் கடிதம் எழுத இருக்கிறேன்.

இது தொடர்பாக ஜனாதிபதி பிரேமதாஸாவின் கடிதம் நேற்று எனக்குக் கிடைத்தது. இந்திய அரசின் நிலைமை மிகத் தெளிவாக உள்ளது.

இலங்கையில் இருந்து அமைதிப் படையினரை விலக்கிக் கொள்வதில் இந்தியா தயக்கம் காட்டுகின்றது என்பதை நான் மறுக்கின்றேன்.

இது சம்பந்தமாக இந்தியா, இலங்கை ஆகியஇரண்டு நாடுகளுக்கும் இடையே சில கடமைகள் உள்ளன.

— இப்படி பிரதமர் காந்தி சொன்னார். (உ-எ)

## முஸ்லிம்கள் - தமிழர் கலவரத்தை ஏற்படுத்த அரசாங்கம் சதி முயற்சி!

### அரியாலைக் கூட்டத்தில் முதலமைச்சர் உரை

யாழ்ப்பாணம், ஜூன் 17

வடக்கு, கிழக்கு மாகாணங்களை நிரந்தரமாகப் பிரித்து, கல்முனை, மூதூர் போன்ற இடங்களில் முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்குமிடையே கலவரத்தை ஏற்படுத்த இலங்கை அரசாங்கம் சதிமுயற்சிசெய்து வருகிறது.

அரியாலையில் நேற்று நண்பகல் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையில் வடக்கு, கிழக்கு மாகாண முதல்வர் திரு. அ. வரதராஜப் பெருமாள் இவ்வாறு கூறினார்.

அரியாலை இந்திய அமைதிப் படை முகாமில் இந்தக் கூட்டம் நடைபெற்றது. பொது மக்கள் இக் கூட்டத்தில் பங்கு பற்றினர்.

இந்தியஅமைதிப்படையைச் சேர்ந்த பிரிகேடியர் என். எஸ் ஜில்லும் இந்தக் கூட்டத்தில்

(4-ஆம் பக்கம் பார்க்க)

### சின்னப்புதுக்குளம் சம்பவம்:

## படை அதிகாரிகளைச் சந்திக்கவென சென்றவர்களே கொலையுண்டனர்

### மரண விசாரணையில் பாலகுமாரன்

வவுனியா, ஜூன் 17

வவுனியா, சின்னப்புதுக் குளத்தில் சடலங்களாக மீட்கப்பட்ட அறுவரையும், வவுனியாவில் உள்ள இந்திய அமைதிப்படை அதிகாரிகளைச் சந்திக்கத் தாம் கடிதம் கொடுத்து அனுப்பி இருந்ததாகவும் —

திங்கட்கிழமை யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டவர்கள் புதன்கிழமைவரை திரும்பி வரவில்லை என்றும்—

ஈரோஸ் இயக்கத்தின் பிரமுகர் திரு. வே. பாலகுமாரன் மரண விசாரணையின்போது தெரிவித்தார்.

சின்னப்புதுக்குளம் கரையில் கண்டெடுக்கப்பட்ட அறுவரின் சடலங்களும் வவுனியா அரசினர் ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருந்தன.

தமது சகாக்கள் சிலருடன் அங்கு வந்த திரு பாலகுமாரன், ஆறு சடலங்களும் தமது இயக்க முக்கியஸ்தர்களினுடையவை என்று, திடீர் மரண விசாரணை அதிகாரிக்கு அடையாளம் காட்டினார்.

(4-ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் வீடியோ கசட்டுகள் இனிமேல் உடன் கிடையா

கொழும்பு ஜூன் 17

இந்தியாவில் வெளிவரும் புதிய தமிழ், ஹிந்தி சினிமாப் படங்களின் வீடியோ கசெட்டுகள் உடனுக்குடன் இங்கு கிடைப்பதில் தடங்கல் ஏற்பட்டிருக்கிறது.

இந்தியப் பொருள்களைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்ற ஜே. வி. பியின் பிரச்சாரம் கொழும்பில் முடுக்கி விடப்பட்டிருப்பதை அடுத்தே இந்நிலை ஏற்பட்டிருக்கிறது.

இந்தப் பிரச்சாரத்தை அடுத்து வீடியோப் படங்களை

[4 ஆம் பக்கம் பார்க்க]

## கடல் அலைக்கு இருவர் பலி!

குருநகர், ஜூன் 17

கடலில் குளித்துக்கொண்டு நின்ற இருவர் பெரு அலை வந்து அடித்துச் சென்றதில் நீரில் மூழ்கி மரணமாகினார்கள்.

இச்சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 00 மணியளவில் பூநகரி மண்ணித்தலைக் கடலில் நடைபெற்றது.

சுழியில் சிக்கி இறந்தவர்களில் நவரட்ணராஜா பியூட்டி [வயது 13] என்பவரது சடலம் நேற்றுப் பிற்பகல் எடுத்து வரப்பட்டு திருச்சிலுவைக் கன்னியர் வைத்திய சாலையில் வைக்கப்பட்டிருந்தது.

இராசக்கோன் செல்வின் [வயது 14 என்பவரின் சடலம் நேற்று மாலை வரை கிடைக்கவில்லை. (அ-51)

## இந்தியதூதரக அதிகாரியின் உதவியாளருக்கு மிரட்டல்!

கொழும்பு, ஜூன் 17

தனது வீட்டுஉதவியாளரை இனந்தெரியாத மூன்று பேர் பயமுறுத்தியதாக கொழும்பில் உள்ள இந்திய தூதரக அதிகாரி திருமதி பிரிம்ரோஸ் சர்மா பொலீஸாரிடம் முறையிட்டிருக்கிறார்.

திருமதி சர்மாவின் வீட்டு வேலையை விட்டுச் செல்லும்படி அந்த உதவியாளர் பயமுறுத்தப்பட்டாராம்.

திருமதி சர்மாவின் வீட்டுக்கு நெருப்பு வைக்கப்போவதாகவும் இனந்தெரியாத அந்த நபர்கள் பயமுறுத்தினர். (உ-எ)

## வவுனியாவிலும் ஊர்வலம்

இந்திய அமைதிப்படை வடக்கு, கிழக்கிலிருந்து வெளியேறக் கூடாது எனக் கோரி நீண்ட ஊர்வலம் ஒன்று வவுனியாவில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

வவுனியா நகர வீதிகள் ஊடாகச் சென்ற இந்த ஊர்வலம் மன்னார் வீதியில் உள்ள அமைதிப்படை முகாமில் சென்று முடிவடைந்தது.

இந்தியப் படைகள் இங்கு இருந்து வெளியேறக் கூடாது, மாகாண சபைக்குரிய அதிகாரங்களை இலங்கை அரசு வழங்க வேண்டும். தமிழ் முஸ்லிம் மக்களின் ஐக்கியத்தைக் குலைக்கும் முயற்சிகளுக்குத் துணைபோகக் கூடாது எனக் கோரும் பலதரப்பட்ட பதா

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ● இப்படியும் தண்டனை

இனந்தெரியாத சிலர் ஐந்து இளைஞர்களை நிர்வாணமாக்கி ஊர்வலமாக அழைத்துச் சென்றனர் என்று கொழும்புச் செய்தி ஒன்று தெரிவித்தது.

இந்த இளைஞர்கள் இந்திய உற்பத்தியான உடைகளை அணிந்து இருந்ததே இத் 'தண்டனை' வழங்கப்பட்டதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

### விலை கிடு கிடு உயர்வு

## திருமலையிலிருந்து லொறி மூலம் மா தருவிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 17

யாழ்ப்பாண மாவட்டத்தில் கோதுமை மா, பாண் ஆகியவற்றின் விலைகளை தனியார் வியாபாரிகள் கண்டபடி அதிகரித்து விற்கின்றனர். நாளுக்கு ஒரு விலை, பொழுதுக்கு ஒரு விலை என்று அவற்றின் விலைகள் கிடு கிடுவென உயர்த்தப்பட்டு வருவதாகப் பாவனையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

67 கிலோ கொண்ட ஒரு மூடை மாவின் விலை 536ரூபாவிலிருந்துநேற்று700ரூபாவாக உயர்த்தப்பட்டது. தனியார் கடைகளில் சில்லறைக்கு கிலோ ஒன்று 12 ரூபாவரை விற்கப்பட்டது. பாணின் விலையும் கடைக்குக் கடை வித்தியாசமாகவே உள்ளது.

மா, பாணின் விலைகள் உயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து தேனீர்க் கடைக்காரர் ஏனைய பலகார வகைகளின் விலைகளையும் உயர்த்திவிட்டனர்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் இப்போது கோதுமை மா கையிருப்பில் இல்லை.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சடலங்கள் ஒப்படைப்பு

வவுனியாவில் கொலையுண்ட ஈரோஸ் முக்கியஸ்தர்களின் சடலங்களும் பிரேத பரிசோதனை, மரணவிசாரணை ஆகியவற்றின் பின்னர் வெள்ளியன்று உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன-

வன்னிப் பிராந்திய செயலாளர் குணபாலன், கனகராயன் குளம் பொறுப்பாளர் மங்களேஸ் (ஐயா) ஆகியோரது சடலங்களை இறுதிக் கிரியைகளுக்காக உறவினர்கள் கனகராயன்குளத்திற்கு எடுத்துச் சென்றனர்.

வேலாயுதம் நாகரட்ணம் (மாமா), ராமச்சந்திரன் (சாம்) நாகலிங்கம் வன்னி, நா. சிவபாலன் (செல்வம்) ஆகியோரது இறுதிக்கிரியைகள் வவுனியாவில் நடைபெற ஏற்பாடாகியிருந்தது. (அ-164)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனை

நல்ல நிலையிலுள்ள எனது சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கணேசன் ஆசிரியர், விங்க் (Vink) ஒழுங்கை, அளவெட்டி வடக்கு. (784)

மரஅரிவு மெசின் விற்பனைக்கு உண்டு. சீரியல் நம்பர் 1566 மொடல் S.S.P 18 மெசின் பெயர் சொனெக்ஸ். உற்பத்தி இந்தியா. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: அலுமினியத் தொழிற்சாலை, மாவிட்டபுரம். பார்வையிடும் நேரம் காலை 8.30மணி தொடக்கம் 12மணி வரை. ஞாயிற்றுக்கிழமை தவிர ஏனைய நாட்களில் பார்வையிடலாம். (11272)

நல்ல நிலையிலுள்ள A 40 EY மூன்று இலக்சம் உடைய கார் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- T. சந்திரன், 30/2 சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம். (778)

Honda C. G. 125 DE Luxce உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: Rohan Rajoo Kachchai Road, Chavakachcheri. (770)

நல்ல இன ஒரு வயதுக் காளைக்கன்று உண்டு. இல.11 (29), செட்டித்தெருஒழுங்கை, நல்லூர். (11279)

இறக்குமதிபாக இருக்கும் [Holland Ornk] விதை உருளைக்கிழங்குதேவைப்படுவோர் எம்மிடம் தொடர்பு கொள்ளவும்; பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 259, காங்கேசன் துறை வீதி. யாழ்ப்பாணம். [753]

புத்தம் புதிய வீடியோ கமெரா Panasonic S-VHS Movie N.V-MSI Hitachi VK-C870E J.V.CGZ-S5 ஆகிய மொடல்கள் விற்பனைக்கு உண்டு. கே.கே. எலக்ரோனிக்ஸ், 27, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி/2862)

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காய விதை விற்பனைக்கு உண்டு. Country of Origin Holland பிள்ளையார் 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [756]

## உடன் விற்பனைக்கு

புத்தம் புதிய அச்செழுத்துக்கள் புத்தம் புதிய கேஸ்கள் மற்றும் அச்சக உபகரணங்கள் உடன் விற்பனைக்குண்டு. நேரில் வரவும் முகாமையாளர் மலரகம் ஏழாலை வடக்கு, ஏழாலை. [772]

## காணி விற்பனை

யாழ்ப்பாணம் 49/4 கோவில் வீதியில் ஒருபரப்பு வெறும் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: J. R. A. செபஸ்ரியன், டேவிட் வீதி, யாழ்ப்பாணம். (781)

## SAAI RAAM

பாவித்த தளபாடங்கள், T.V' Fridge, Singer தையல் மெசின்கள், Cycles Oven, Antana Pipe மற்றும் புதிய தளபாடங்கள் மலிவு விலையில் Saairaam 3ஆம் கட்டை, பருத்தித்துறை வீதி, கல்வியன் காடு. (11280)

## சமூகக்கல்வி

O/L ஆண்டு 10, 9 வகுப்புகளுக்கான 'அரசியல் யாப்பு' கைநூல் குறிப்புகள், வினக்களை உள்ளடக்கி வெளிவந்து விட்டது. கிடைக்குமிடங்கள்: சிறீலங்கா, பூபாலசிங்கம் புத்தகசாலைகள், யாழ்ப்பாணம்; புத்தெழில் அச்சுவேலி. துர்க்கா ஸ்ரேஷனல், சுன்ஞகம். [11243]

## கோழிக்குஞ்சு விநியோகம்

Hisex, Golden comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள், Hyline வெள்ளை, கறுப்பு, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், Hybro புரொயிலர் குஞ்சுகள் கறுப்பு சேவற் குஞ்சுகள் முன்கூட்டியே பதிவுசெய்து ஒவ்வொரு வாரமும் பெற்றுக் கொள்ளலாம். சற்குணராஜா & பிரதர்ஸ், பிரம்படிலேன், கொக்குவில். [549]

## தேவை

பெண் விற்பனையாளர் (Sales Girl) தேவை. தொடர்பு: ஏசியன் ரெக்ஸ்ரைல்ஸ் பலாலி வீதி, திருநெல்வேலி. [775]

சைவச் சிறுவர்கள் இல்லத்தில் பணிபுரிய தொண்டு மனப்பான்மை உடைய நிரந்தரமாக இருந்து பணியாற்றக் கூடிய இரு உதவி மேற்பார்வையாளர் தேவை; 19-6-89 காலை 9 மணிக்கு சான்றிதழ்களுடன் நேரில் வரவும். உணவு, உடை, தங்குமிடம் வழங்கப்படும். நிர்வாகச் செயலாளர் சைவச் சிறுவர் இல்லம், கைதடி. [774]

கேகாலை மாவட்டத்தில் உள்ள ஏட்டியர் தோட்ட (பாமஸி) ஓய்வு பெற்ற தராதரம் உள்ள Qualified Pharmacist பாமஸிட்ஸ் ஒருவர் தேவை. தனியாக வந்து தங்கியிருக்கக் கூடியவருக்கு முன்னுரிமை வழங்கப்படும். எம்.எச்.எம். அன்ஸார் 16 முஸ்லிம் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம். [11261]

## காசாளர் தேவை

சங்கானையில் உள்ள ஸ்ரூடியோ நித்ய சித்ராவில் காசாளராக பணிபுரிவதற்கு பெண்கள் தேவை. அண்மையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. கல்வித்தகைமையுடன் விண்ணப்பிக்சவும் தொடர்பு ஸ்ரூடியோ நித்ய சித்ரா, சங்கானை. (773)

## மணமகன் தேவை

யாழ் இந்து வேளாளகுலம் ஒரே மகள் ஆங்கில ஆசிரியை 22 வயது உயரம் 5' 6'' டாக்டர் என்ஜினியர், கணக்காளர், விரிவுரையாளர் போன்ற துறையில் மணமகன் தேவை. 543, C/o உதயன். (782)

யாழ்ப்பாண இந்து வேளாளர் 29 வயது 12இல் செவ்வாயுள்ள Accountant பெண்ணுக்கு சிங்கப்பூர், மலேசியா, அவுஸ்திரேலியாவை விரும்பும் Accnntant Engineer தேவை போதிய சீதனம் தரப்படும். மங்களஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். Srilanka. (779)

## மணமகள் தேவை

இந்து கோவிய வகுப்பைச் சேர்ந்த பெற்றோர்கள் கணக்காளராயிருக்கும் மகனுக்கு 30 வயது வரையிலுள்ளவரும் அழகும், இனிய சுபாவமும் உள்ள பெண்ணைத் தேடுகின்றார்கள். ஆங்கிலத்தில் நல்ல தேர்ச்சி அவசியம். பட்டதாரி ஆசிரியை, கணக்காளர் [Partiy Qualified] மருந்தாளர் விரும்பத்தக்கது. சம்பந்தப்பட்ட முழுவிபரங்களை சாதகக்குறிப்புடன் முதற்கடிதத்திலேயே தரவும். 542, C/o உதயன், யாழ்ப்பாணம் (771)

யாழ். உயர் இந்து வேளாள குல பொறியியலாளர் மணமகனுக்கு அழகிய படித்த, விரிவுரையாளர், கணக்காளர் அல்லது பொறியியலாளர் மணப்பெண்ணை பெற்றோர் தேடுகின்றனர். மணப்பெண் 38 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும். சாதகப், சீதன விபரத்துடன் விண்ணப்பிக்கவும். 540, C/o உதயன். [759)

## வாடகைக்கு

வெள்ளவத்தையில் மூன்று அறைகளைக் கொண்ட வீடு வாடகைக்கு - குத்தகைக்கு விடப்படும். வாடகை 2500 ரூபா. மூன்று வருட முற்பணம் செலுத்த வேண்டும். தொடர்பு:- அரியலொஜ், மானிப்பாய் ரோட், உடுவில். (பெரியமதவடி) (783)

## தபால் மூலம் கல்வி

தபால் மூலம் ஆங்கிலம் பேச, வாசிக்க அல்லது இலக்கணத்துடன் பயில பயிற்சிகள் நடைபெறுகின்றன. சுயவிலாசமிட்ட முத்திரை ஒட்டிய தபாலுறை அனுப்பி விபரங்களை அறியலாம். இம்பீரியல் இன்ஸ்ரிரியூட், 25 மாட்டின்லேன், யாழ்ப்பாணம். (713)

## Typewriter

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும், தமிழ், ஆங்கில ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்; Fudo Enterprises, 39/17 மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி/2833]

## Spoken English

கசட் மூலம் ஆங்கிலப் பேச்சுப் பயிற்சி உங்கள் வீட்டிலேயே இருந்து மிகவும் இலகுவாகவும் விரைவாகவும் ஆங்கிலம் பேசப் பழகுவதற்கு உள்ள கசட் தட்டுக்களைப் பெற்றுக்கொள்ளலாம். மூன்று கசட் 150 ரூபா. தொடர்பு: ஸ்பென்சர் (Spencer), அரிய லொஜ், மானிப்பாய் ரோட், உடுவில். (மதவடி) (777)

## Matrimonial Services

Marriages are arranged for Sri Lankan Boys and Girls Here and abroad Mangala Agency Koiyathoddam, Jaffna, Sri Lanka. (780)

# கருவாட்டின் விலையை 25 வீதம் குறைக்க பணிப்பு

கொழும்பு, ஜூன் 17 கருவாட்டின் விலையை 25 சத வீதத்தினால் குறைக்கும்படி கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்துக்கு வர்த்தகம் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் ஏ. ஆர். எம். மன்சூர் உத்தரவிட்டார்.

விலைக்குறைப்பு உடனடியாக அமுலுக்குக் கொண்டுவரப்படவேண்டும் என்றும் அமைச்சர் பணித்திருக்கிறார்.

பாவனையாளர்களின் கஷ்டங்களை நீக்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

வேறு சில அத்தியாவசிய உணவுப்பொருள்களின் விலைகளும் குறைக்கப்படவிருப்பதாக தெரியவருகிறது. (உ-எ)

# நிரந்தர அபிவிருத்தி தரும் புனர்வாழ்வுத் திட்டம் அவசியம்

## அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 17 நிவாரணம் என்பது புனர்வாழ்வின் முதல்படி. இன்று எம் சமுதாயத்தில் நிவாரணம் வாழ்வின் ஓர் அங்கமாகி விட்டது. விடாமுயற்சி என்ற தமிழனின் பாரம்பரியம் நிவாரணத்தால் பின்தள்ளப்படுகிறது. இந்நிலை மாறி நிரந்தர அபிவிருத்தி தரத்தக்க புனர்வாழ்வுத் திட்டங்களே எம் சமூகத்துக்கு இன்று அவசியமாகின்றன.

அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் மேற்கண்ட கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

84ஆம் ஆண்டில் இருந்து பல்வேறு அமைப்புகள் மூலம் நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது. இது தொடர் கதையாக அமையக்கூடாது.

வடக்கு - கிழக்கு மக்களின் இரு பிரதான மூலவளமாக இருக்கும் விவசாயம், மீன்பிடி ஆகியவற்றை விருத்தி செய்யத்தக்க திட்டங்கள் செயல்படுத்த வேண்டும்.

இந்த அமைப்பு விதவைகளுக்கு சுய வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது. அத்துடன் தடுப்புக்காவலில் இருந்து வெளியேறிய தமிழ் இளைஞர்களுக்கு வீடமைத்துக் கொடுத்துள்ளோம்; கல்வித் துறையில் பல வேறுபட்ட பணிகள் செய்துள்ளோம். பல வேறுபட்ட சிறு தொழிலாளர்களுக்கும் உதவியுள்ளோம்;

இப்படி அறிக்கை கூறுகிறது (இ-3)

# வெண்கலப் பதக்கம் பெற்றார்

வலைபந்தாட்ட மத்தியஸ்தர் பதவிக்கான வெண்கலப் பதக்கம் நல்லூர் விளையாட்டு அதிகாரி ந. யசோதாவுக்கு வழங்கப்பட்டது.

கடந்த 18 ஆம் திகதி நடைபெற்ற வைபவமொன்றின் போது கேகாலை செ. ஜோன்ஸ் கல்லூரியில் வைத்து அகில இலங்கை வலைபந்தாட்டச் சங்கத்தினால் இப்பதக்கம் இவருக்கு அளிக்கப்பட்டது.

இதுவரை இப்பதவிக்கான தங்கப்பதக்கத்தை அகில இலங்கை ரீதியில் இருவர் மட்டுமே பெற்றுள்ளனர். வெண்கலப் பதக்கத்தைப் பெறும் முதலாவது யாழ்மாவட்டத் தமிழ்ப்பெண்மணி இவராவர்.

நடைப்போட்டி, எல்லே பட்மின்டன் ஆகிய போட்டிகளுக்கான மத்தியஸ்த்தர் தகுதிசளையும் பெற்றுள்ள இவர் ஒரு சிறந்த பட்மின்டன், ஹொக்கி, வலைப்பந்து வீராங்கனையாவார்.

வடமத்திய மாகாணத்தில் தொடர்ந்து 8 வருடங்கள் பட்மின்டன் சம்பியனாகத் திகழ்ந்த இவர் அகில இலங்கைப் போட்டிகளிலும் கலந்து கொண்டார். [உ- 6]

# பாடசாலைகளுக்கு மலசலகூடம்

யாழ்ப்பாணம், ஜூன் 17 யாழ் - மாவட்டத்தில் மலசலகூடம் இல்லாத பாடசாலைகளில் அவற்றை அமைத்துக்கொடுக்க முடிவுசெய்யப்பட்டிருக்கிறது.

இதை தொடர்ந்து மலசலகூடம் அமைக்கப்பட வேண்டிய பாடசாலைகளின் விவரங்களை யாழ். கல்வித்திணைக்களம் பாடசாலை அதிபர்கள் மூலம் சேகரித்து வருகிறது. (உ-3)

# அம்பாளின் சத்தி

**எடுப்பு**

அம்பாளின் சத்தி எமை ஆண்டுகொண்ட சத்தி
ஆனந்தக் களிப்பூட்டி அணைத்தருளும் சத்தி
(அம்)

**தொடுப்பு**

நம்வாழ்வில் கண்டுவக்கும் நாதாந்த சத்தி
நாகம்மாள் எனும் எங்கள் நயினையுறை சத்தி
(அம்)

**முடிப்பு**

தென்பான சத்திபல திசைபோற்றும் சத்தி
தெய்வீகசத்தி மிகு சிவஞான சக்தி
அன்பான சத்தியது அகிலாண்டசத்தி
அருளான சத்திமிகு தெளிவான சத்தி
(அம்)

நயினைக் கவிஞர் - நாக சண்முகநாதபிள்ளை

இன்று 17-6-1989 நயினைதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன்கோவில் 13 ஆம் திருவிழா.

# கசிப்பு உபகரணங்கள் நொறுக்கப்பட்டன

யாழ்ப்பாணம், ஜூன் 17 இருபாலையில் கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்ட ஒருவரின் வீட்டில் இருந்த உபகரணங்கள்பொதுமக்களினால்அடித்து நொறுக்கப்பட்டதாக அறியவருகிறது.

வியாழன் காலை 10.30 மணி அளவில் கோப்பாய் பழைய பொலீஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள ஒருவரின் வீட்டிலேயே இச் சம்பவம் நடைபெற்றது.

எனினும் உரிமையாளர் தலைமறைவாகி விட்டதன் காரணமாக அவருக்கு இளைஞர் குழு ஒன்று எச்சரிக்கை விடுத்துள்ளதாகத் தெரியவந்தது.


# உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான கம்பியூட்டர் கல்வி

DIPLOMA IN DATA PROCESSING AND COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE

ஆரம்பம்: 24-06-89 (சனி, ஞாயிறு) வகுப்புகள்

பயிற்சிக் காலம்: 3 மாதம்

சேரும்போது செலுத்தவேண்டியது 500 மாத்திரம். O/L படித்த இருபாலாரும் சேரலாம். குளிரூட்டப்பட்ட அறையில் கூடியநேர செய்முறைப்பயிற்சி IBM (COMPATIBLE) கம்பியூட்டரில் வழங்கப்படும். பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். குறிப்பிட்ட தொகை மாணவ, மாணவியரே சேர்க்கப்படுவார்களாகையால் விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுப் பதிவுசெய்து கொள்ளவும்.

விண்ணப்ப முடிவு திகதி: 23-06-89




UNIKCO COMPUTER CENTRE

No. 5, மின்சார நிலைய வீதி,
2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(உபதபாற் கந்தோர் அருகாமை)
(சி/2865)


# போலந்துக்கு பிரான்ஸ் நிதி உதவி

போலந்து நாட்டுக்கு பொருளாதார உதவிகளை வழங்க பிரான்ஸ் முன் வந்து உள்ளது.

ஜனநாயக சீர் திருத்த நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ள போலந்துக்கு நிதி உதவி அளிக்க முன் வந்திருக்கும் முதலாவது மேற்கு நாக் பிரான்ஸ் ஆகும். (எ)

# சொற் சிலம்பம் இல. 101

**பரிசு பெற்றவர்கள் விபரம்:**

**முதலாவது பரிசு:**
திரு., அ. சிவஞானம்,
கந்தரோடை வட்டாக்கை,
சுன்ஞகம்.

**இரண்டாவது பரிசு:**
திரு. எஸ். இராமநாதன்,
பண்டத்தரிப்பு.

**மூன்றுவது பரிசு**
திரு. வ. மயில்வாகனம்,
அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## செல்லத்துரை பிறநீசன்

அன்னையின் மடியில்: 28 - 07 - 1966
ஆண்டவன் அடியில்: 18 - 05 - 1989

பொறுமையின் உருவமே!
அமைதியின் வடிவமே!
வீணர்கள் கைப்பட்டு
விண்ணுலகம் சென்றுயோ!
மாருது உன் நினைவு!
தீராது நம் துயரம்!

குடமியன்;
வரணி.

உன் நினைவால் வாடும்;
அம்மா, அப்பா, சகோதரர்கள்,
உறவினர்கள், நண்பர்கள்:
[11281]

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## உயர் திரு சு. குமாரசாமி அவர்கள்

தோற்றம்: 18 - 06 - 1917
மறைவு: 28 - 06 - 1988

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்ப்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்''

இன்று (17-6-89) எமதில்லத்தில் நடைபெறும் ஆண்டுத்திதிக் கிரியைகளில் கலந்து கொள்ளும்படி உறவினர்களையும், அன்பர்களையும் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

35, சுப்பிரமணியம் வீதி,
அரியாலை.

திருமதி குமாரசாமியும்,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகளும்.
(11262)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியப் பொருள்களை இறக்க துறைமுக ஊழியர்கள் மறுப்பு

## வியாழனன்று கொழும்பில் சம்பவம்

கொழும்பு ஜூன் 17
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட — பம்பாய் வெங்காயம் உட்பட — பெருமளவு உணவுப் பொருள்களை கப்பலில் இருந்து இறக்குவதற்கு துறைமுக ஊழியர்கள் மறுத்துவிட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் கொழும்பு துறைமுகத்தில் இடம்பெற்றது.

கூட்டுறவு மொத்த விற்பனவு நிறுவனம், பணத்தைச் செலுத்தி இந்த உணவுப் பொருள்களைத் தருவித்திருக்கிருந்தது.

''மேற்கிளிபர்'' என்ற கப்பலில் இந்தப் பொருள்கள் வந்திருந்தன.

இந்தப் பொருள்களை இறக்க துறைமுக ஊழியர்கள் மறுத்ததையடுத்து, பொருள்களுடன் கப்பல் துறைமுகத்தில் காத்துக் கிடக்கிறது. இந்தச் சம்பவத்தை அடுத்து பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

இதேவேளை, தற்போது எழுந்துள்ள சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு. இனிமேல் இந்தியாவிலிருந்து உணவுப் பொருள்களைத் தருவிப்பது இல்லை எனவும்—

உணவுப் பொருள்களை கொள்வனவு செய்ய வேறு நாடுகளுடன் தொடர்பு கொள்ள முடிவு செய்யப்பட்டிருக்கிறது என்றும்—

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபன உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதே சமயம் நான்கு மாதங்களுக்குத் தேவையான பம்பாய் வெங்காயம் கையிருப்பில் இருப்பதாகவும் அந்த அதிகாரி சொன்னார். (உ)

# குடிமக்கள் தொண்டர்படை குறித்து அமைதிப்படை அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 17
குடிமக்கள் தொண்டர் படை பற்றி இந்திய அமைதிப்படையின் யாழ்ப்பாணம் நகர கமாண்டன் அலுவலகம் விடுத்த செய்திக் குறிப்பு வருமாறு;

குடிமக்கள் தொண்டர் படை தமிழர் நலன்களைப் பாதுகாக்க உருவாக்கப்பட்ட ஒரு நடுநிலையான அரசியல் சார்பற்ற சக்தியாகும்.

இதன் அமைப்பைப் பற்றி சில ஊகங்கள் எழுந்துள்ளன.

தற்போதைய குடிமக்கள் தொண்டர் சபையில் ஆயிரத்து 532 தமிழர்களும், 305 முஸ்லிம்களும், 148 கிறிஸ்தவர்களும், 43 சிங்களவர்களும் உள்ளனர்.

தற்போதுள்ள படையில் உள்ள தொண்டர்கள் எந்தக் கட்சியுடனும் குறிப்பான தொடர்பு இல்லாதவர்கள்; நடு நிலையாளர்கள்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள சுதந்திரமான குடிமக்கள் தொண்டர்படை நிலையங்களில் இவர்கள் பணிபுரிய அமர்த்தப்பட்டுள்ளனர். இப்படைக்கு சொந்தமாகத் தலைமைக் காரியாலயம் உண்டு. முறையான ஆணைக் கட்டமைப்பும் இதற்கு உண்டு. திறமையும் சுறுசுறுப்பும் அனுபவமும் வாய்ந்த தமிழரான திரு. ரி.ஈ. ஆனந்தராஜா இப்படையை வழி நடத்துகிறார்.

குடிமக்கள் தொண்டர் படையின் அரசியல் சார்பற்ற தன்மை படையில் பல இனங்களைச் சேர்ந்தவர்கள் அங்கம் வகிப்பதால் நன்கு நிரூபிக்கப்பட்டுள்ளது. உள்ளத்தில் பொதுச் சேவை உணர்வு, அர்ப்பணிக்கும் மனப்பான்மையை மனதில் கொண்டு, கொடுக்கப்பட்ட பணியை அச்சமின்றி, பாகுபாடு காட்டாது சேவை புரியக்கூடிய சகல படித்த, உடல் உறுதியுள்ளவர்களை சேர்த்துக் கொள்ள குடிமக்கள் தொண்டர்படை தயாராக இருக்கிறது.

குடிமக்கள் தொண்டர் படை, அண்மைக்காலத்தில் தான் உருவாக்கப்பட்டிருந்தும் கூட, பாதுகாப்பான சூழலை நிலைநாட்டி, கலவரங்களைத் தடுத்தும் அடக்கியும் பொதுச் சொத்துக்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்தும் அளப்பரிய சேவையை ஆற்றி வருகிறது.

இப்படி நகர கமாண்டன்ற் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நவில்ட் பாடசாலை பழைய மாணவர் ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 17
நவில்ட் செவிப்புலனிழந்தோர் பாடசாலை (கைதடி) பழைய மாணவர் சங்கத்தின் 22 ஆவது ஆண்டு விழா இன்று காலை 8 - 30 மணி தொடக்கம் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

பாடசாலையின் பழைய மாணவர்கள் அனைவரையும் படிவிழாவில் கலந்து கொள்ளும் பழைய மாணவர் சங்கத் தலைவர் திரு. அ. பாலநாயகம் வேண்டுகிறார். (அ - எ)

## தேர்த் திருவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 17
வட்டுக்கோட்டை கிழக்கு துறட்டிப்பனை ஸ்ரீ முத்துமாரியம்மாள் தேர்த் திருவிழா இன்று காலை 6 மணிக்கு கும்ப பூசையுடன் ஆரம்பமாகும். காலை 8 - 30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் காலை 10 மணிக்கு தேர்ப்பவனியும் இடம் பெறும். (உ)

★ ★★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 17
யாழ்ப்பாணம் வீரமாகாளியம்மன் ஆலய ரதோற்சவம் நாளை காலை எட்டு மணிக்கு நடைபெறும். (உ)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 17
கொக்குவில் மேற்கு சனசமூக நிலையத்தினரால் இன்று நடத்தப்படவிருந்த சைவ சமயப்போட்டி தவிர்க்க முடியாத காரணங்களினால் பிற்போடப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## வவுனியா கொலைகளை ரெலோ கண்டிக்கிறது

ஈரோஸ் உறுப்பினர்கள் ஆறு பேர் வவுனியாவில் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) வன்மையாகக் கண்டித்திருக்கிறது.

இப் படுகொலைகளை அறிந்து நாம் மிக அதிர்ச்சியும் கவலையும் அடைகின்றோம். இப்படிப்பட்ட கொலைகளினால் எமது இளைஞர் சமுதாயம் அழிவது எமக்கு மிகுந்த மன வேதனையைத் தருகின்றது.

நாட்டில் உள்ள மக்கள் யாவரும் அமைதிக்கும் சமாதானத்துக்கும் ஏங்கி எதிர்பார்க்கும் இந் நேரத்தில் இக்கொலைகள் நடந்திருப்பது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.

கொலைகளை புரிபவர்கள் யாராக இருப்பினும் அவர்கள் அச்செயல்களை உடன் நிறுத்துவது எமது தமிழ்ச் சமுதாயத்துக்கு செய்யும் பேருவியாகும்— இப்படி ரெலோ இயக்கத்தின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் திரு. வை. கி. செந்தோழன் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## பூமியதிர்ச்சி காரணமா?

அண்மையில் தென்பகுதியில் ஏற்பட்ட மலைச் சரிவுக்கு பூமியதிர்ச்சி தான் காரணமா

கடந்த இரண்டாம் திகதி கேகாலை மாவட்டத்தில் மட்டும் 300 மலைச்சரிவுகள் ஏற்பட்டன அதற்குகாரணம்பூமி அதிர்ச்சிதான் என்று கூறப்படுகிறது.

வானிலை அவதானிப்பு நிலையம் இதனை ஊர்ஜிதம் செய்யவில்லை. [அ-எ]

## வெளியுறவு அமைச்சு கவலை தெரிவித்து அறிக்கை

கொழும்பு, ஜூன் 17
இந்திய அமைதிகாக்கும் படை இலங்கையில் தொடர்ந்து நிலைகொண்டிருப்பதற்கு ஆதரவாக உள்நாட்டிலும் வெளி நாடுகளிலும் பொறுப்பற்ற ரீதியான அறிக்கைகள் வெளிப்பட்டிருப்பது குறித்து கொழும்பில் வெளியுறவு அமைச்சு கவலை தெரிவித்துள்ளது.

இந்திய அமைதிப் படையை வருகிற ஜூலை இறுதிக்குள் வாபஸ் வாங்க வேண்டும் என்று ஜனாதிபதி பிரேமதாஸ பத்தரமுல்லையில் நிகழ்த்திய உரையை வெளியுறவு அமைச்சு நேற்று விடுத்த அறிக்கையில் சுட்டிக் காட்டியிருக்கிறது.

இந்திய அமைதிப்படை தொடர்ந்தும் இலங்கையில் இருக்க வேண்டும் என்றும் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வெளியிடப்படும் அறிக்கைகளினால் மக்கள் மனதில் தவறான அபிப்பிராயம் ஏற்படுவதாகவும் வெளியுறவு அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியப்படை இங்கிருப்பது குறித்து இலங்கை ஜனாதிபதியே முடிவு செய்வார் என்ற நிலைப்பாட்டில் மாற்றம் இருக்கமுடியாது. அதனை அடிப்படையாக வைத்தே ஜனாதிபதியின் பத்தரமுல்லைப் பேச்சு அமைந்ததாகவும் அந்த அறிக்கை கூறுகிறது. (அ - எ)

## நவாலியில் தந்தையர் தினம்

யாழ்ப்பாணம். ஜூன் 17
70 வது வருட தந்தையர் தின விழா நவாலி திருச்சபை ஓய்வு நாள் பாடசாலையின் ஆதரவில் நாளை நவாலி திருச்சபைக்குரு மறைத்திரு. வி. என். தர்மகுலசிங்கம் தலைமையில் விசேட ஆராதனையுடன் ஆரம்பமாகும்

தந்தையர்களைக் கனம் பண்ணும் விசேட நிகழ்ச்சிகள் ஓய்வுநாள் பாடசாலை மாணவரால் காண்பிக்கப்படும்.

மறைத்திரு. தா. இரா. அம்பலவாணர் விசேஷ அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி அன்னாரின் நற்கருணையுடன் நிகழ்ச்சிகள் முடிவடையும். (ச)


வட்டுக்கோட்டை
யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நுட்ப நிறுவன
பழைய மாணவர் சங்கப்
பொதுக்கூட்டம்

மேற்படி நிறுவன பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை (18-6-89) காலை10; 00 மணிக்கு கல்லூரி ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெறும். சகல அங்கத்தவர்களையும் தவறாது சமூகம் தருமாறு வேண்டுகின்றேன்.

T. KANDIAH,
செயலாளர்.
(939)



ஆங்கிலம்
பேச வேண்டுமா?

கூச்சமின்றி சரளமாக ஆங்கிலத்தில் பேச வேண்டுமா? பிறரைப்போல் நீங்களும் ஆங்கிலம் சரளமாகக் கூச்சமின்றிப் பேச ஆசைப்படுகிறீர்களா? கவலையை விடுங்கள்! புதுமையான முறையில் தபால் மூலம் தமிழில் ஆங்கிலம் படியுங்கள். எளிய அஞ்சல் வழிப் பயிற்சி. தமிழ் தெரிந்த யாவரும் சேரலாம்.

Bright Training Centre இல்
படித்த மாணவர்களின் கருத்து

''தங்களது பயிற்சிநெறியும் அணுகுமுறையும் விளக்கங்களும் மிகவும் சிறந்தன. என்னைப் பொறுத்தவரை முடிந்த இரண்டுமாதகால பயிற்சியே பெரும் விளைவை ஏற்படுத்திவிட்டது. எல்லா வற்றுக்கும் தாங்கள் கையாண்ட உளவியல் ரீதியான பயிற்சிகளும் உத்தியுமே காரணமாகும்.

செல்வி ஜெமீனா ரொஷான்
538/1 பிரதான வீதி, நிந்தாவூர்.

''உங்கள் பாடத்திட்டம் எனக்கு இலகுவில் விளங்கி கற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கின்றது''

செல்வி கலைமகள் சிவசுப்பிரமணியம்
வட்டு கிழக்கு, வட்டுக்கோட்டை.

''உங்களின் பாடங்களை செய்வது மூலம் இலகுவில் பேசும் பயிற்சியை கொண்டதாக இலகு தன்மை பாடங்களில் தெரிகின்றது''

செல்வி ராஜானு கணபதிப்பிள்ளை
இல: 1 கொலனி, மாங்குளம்.

இதுவரையில் கற்ற பாடங்களை கொண்டு ஆங்கிலம் பேசக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது ஆங்கிலத்தில் பேசமுடியவில்லையே என்ற மனக்கவலைக்கு ஆறுதல் கிடைத்துள்ளது.

இரா. ஜெகநாதன்
112, அகலவத்தை வீதி, மத்துகம.

எமது கல்வித்திட்டம் பற்றி மேலதிக விபரங்கள் அறிய முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க.

BRIGHT TRAINING CENTRE
P. O. Box 162, COLOMBO.
(C/2806)



★ அபுதாபி ★
நாட்டிற்கான
வேலை வாய்ப்புகள்

| | | |
|---|---|---|
| 1. | மெயின்டேனன்ஸ் கிளீனேர்ஸ் | — 7,600/- |
| 2. | ஹெவி வேக்கிள் இகியூப்மென்ட் ஒப்பரேட்டஸ் | — 12,000/- |
| 3. | எலக்றிசன் | — 7,600/- |

பயணம் 10 நாட்களிற்குள்
பாஸ்போட், 10 போட்டோக்களுடன்
தொடர்பு கொள்ளவும்.

● எம்மிடம் ஹொங்கொங் நாட்டிற்கான வேலை வாய்ப்புகளும் உண்டு

விபரங்களுக்கு
மியூனிஸ்ட் என்ரபிறைசஸ்,
56, 1 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
(வேம்படி மகளிர் கல்லூரி முன்பாக)



சிங்கர்*
களிப்பு நிறைந்த
குளிரூட்டிப் போட்டி

2ஆவது மாதாந்தச் சீட்டிழுப்பு
1989 மே 31இல் சதாம் வீதி
காட்சியறையில் நடைபெற்றது.

வெற்றியீட்டிய 25 அதிஷ்டசாலிகள்

முதற் பரிசு:
திருமதி சிவகுணம், ஆதியம்பதி ஒழுங்கை, சாவகச்சேரி.
எச். ஏ. பிரேமதிலக, பள்ளியபிட்டி, துனகஹா.

இரண்டாம் பரிசு:
வி. நமசிவாயம், மாதாவடி ஒழுங்கை, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
அத்துல பட்டபதிகே, சுஸந்த இல்லம் பெந்தோட்டை, அளுத்கம.
பி. எம். மஹ்ரூப், 10, எஸ். எம். ஒழுங்கை, தர்கா நகர், அளுத்கம.

மூன்றும் பரிசு:
எஸ். ஏ. டபிள்யூ ஜயசிறி, மாபோதல வீதி, ஹொரகஸ்முல்ல, திவுலப்பிட்டி.
ரி. ஏ. ஆரியதாச, இலங்கை வங்கி, திவுலப்பிட்டி.
எம். ஏ. சி. மதநாயக்க, 44, அம்பகமுவ வீதி, கினிகத்தேனை, ஹட்டன்.
ஆர். எம். வீரதிலக, இ. போ. ச. டிப்போ அருகில், திவுலப்பிட்டி.
ஸ்ரீயானி பெர்னாண்டோ, வேரப்பிட்டிய, தர்கா நகர், அளுத்கம.
எம். எம். எஸ். நஸீர், 149/3, மீரானியா வீதி, கொழும்பு-12
ஆர். டி. கன்னங்கர, 577, மகாவத்தை, மகா இந்துருவ, அளுத்கம.
எம். ஜயசிங்க, 'பிரியவாசா' கடன்கொட, குருவிட்ட.
டபிள்யூ. எம். ஜீ. விக்கிரமரத்ன, 315, ஹிங்குராகமுவ, பதுளை.
ரி. எஸ். தங்கும்பர 9, சீதாகம, அவிசாவளை.
எச். சீலாவதி, 259/2, ஒவிற்றிகம, மீகொட.
எம். ஜயவர்தன, தும்ரிய நகர், கெக்கிராவ,
பி. எம். சூரியபண்டார, விஜய புத்தகக் கடை, பிங்கிரிய.
ஓ. வெலிகும்புர, 160, அம்பகமுவ வீதி, நாவலப்பிட்டி.
ஆர். எம். கே. சரத்சந்திர, நக்காவத்தை,
எஸ். நவரத்தினம், 87, பிரதான வீதி, இறக்குவானை.
ஈ. சி. வீரப்பெரும, 'சந்தனி' ஹெல ஹல்பே,
எஸ். எச். வனசிங்க, 104, பிற்றவெல, மனிக்கின்ன.
எஸ். என். இலகரத்ன, 'திருனி' 623/12, 2ஆம் ஒழுங்கை, அனுராதபுரம்.
யூ. ஜீ. ஆர். ரூபசிங்ஹ, உதய செவன, 2 ஆம் மைல் கட்டை, கண்டி வீதி, கனிக்குளம், அனுராதபுரம்.

சிங்கர்*
மாசற்ற மேன்மை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சிக்கனமே சிறந்த செல்வம்'




சிக்கன சலவைக்கு நுரைவளம் கூடிய மில்க்வைற் பார்சோப்பை வாங்கி உபயோகியுங்கள்.
**சிறிய பார்சோப் விலை ரூ. 10/- மட்டுமே.**
பாவித்த 10 பார் சோப் மேலுறைகளை அனுப்பி உள்ளூர் கைத்தறியினலான
**அழகிய கைலேஞ்சி ஒன்றை**
பரிசாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.

# சஞ்சீவி

17 - 06 - 1989 சனிக்கிழமை

"வியாபாரிகளுக்கு விசேட பரிசு"

மில்க்வைற் தயாரிப்புகளான நீலசோப் 72, 36 கட்டிகள், மில்க்வைற் பெரிது, சிறிய பார்சோப் 12 கட்டிகள், மில்க்வைற் அரைக்கட்டி துண்டு சோப் 50 கட்டிகள் சுற்றி வரும் பெரிய ரூப்பர்களைச் சேகரித்துக் கொடுத்து
**அதி உயர்ந்த பரிசுகளைப்** பெற்றுக்கொள்ளுங்கள்.

**"மில்க்வைற்"**
**யாழ்ப்பாணம்.**

## முத்துஜயன்கட்டுப் பகுதியில் தேடுதல் நடவடிக்கை தீவிரம்!

ஒட்டுசுட்டான், ஜூன் 17
முத்தையன்கட்டுப் பகுதியில் நீண்டநாட்களின் பின்னர் நேற்றுமுன்தினம் மீண்டும் தேடுதல் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்றன.

முத்தையன்கட்டு, ஒட்டுசுட்டான் பகுதியில் உள்ள இந்திய அமைதிப்படையினர் முகாம்களை விட்டு வெளியேறி முத்தையன்கட்டு வலதுகரை கற்சிலைமடு, பேராறு ஆகிய இடங்களில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை மாங்குளம், கனகராயன்குளம் பகுதியில் மேலதிக துருப்புக்கள் தரையிறக்கப்பட்டிருப்பதாகவும் ஒரு செய்தி தெரிவித்தது [உ- 113- 10]

### நூலகம் மூடப்பட்டிருக்கும்

யாழ். மாநகரசபையின் நல்லூர் நூலகம் இன்று சனிக்கிழமை முதல் அடுத்த வாரம் சனிக்கிழமை வரை மூடப்பட்டிருக்கும் என யாழ். மாநகரசபை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

நூலகத்தில் இருப்பு எடுப்பு நடைபெற இருப்பதன் காரணமாகவே நூலகம் மூடப்பட்டிருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-10)

### கொழும்பு ரயிலில் 1,210 பயணிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 17
யாழ் நகருக்கு நேற்று சரக்கு ரயில் ஒன்றும் பயணிகள் ரயில் ஒன்றும் வந்தன.

பயணிகள் ரயிலில் யாழ் நகருக்குமட்டும் ஆயிரத்து210பயணிகள் வந்திருந்தனர். இந்த ரயில் இன்று காலை இங்கிருந்து புறப்படும். (உ-9)

## 12 பதவி வெற்றிடங்களுக்கு 5 ஆயிரம் பேர் விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 17
யாழ் - கிளிநொச்சி சுகாதாரத் திணைக்களத்தில் 12 சமயாசமய எழுதுவினைஞர்களுக்கான வெற்றிடங்களுக்கு 5 ஆயிரம் பேர் விண்ணப்பித்துள்ளனர்.

மேற்படி 5 ஆயிரம் விண்ணப்பங்களும் பரிசிலனை செய்யப்படுவதாகவும் அடுத்தவாரமளவில் நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவானோருக்கு அதுபற்றி அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## கட்டுக்குருந்தவில் விமானநிலையம் விஸ்தரிப்பு

கொழும்பு, ஜூன் 17
கட்டுக்குருந்த விமானநிலையம் சர்வதேச விமானநிலையமாக விஸ்தரிக்கப்படவுள்ளது.

உயர் மட்ட அரசு அதிகாரி ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

அவசர சமயங்களில் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இருந்து விமானங்களை கட்டுக்குருந்தைக்கு திசை திருப்பி விட இத்திட்டம் உதவும் என்று கூறப்படுகிறது.

தற்சமயம் விமானங்கள் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலயத்தில் இறங்க முடியாத சூழ்நிலையில் சென்னை விமான நிலயத்துக்கே திசை திருப்பி விடப்படுகின்றன. [க-எ]

## மரண அறிவித்தல்கள்

### திரு. ம சூசைப்பிள்ளை இராஜசிங்கம்

கரம்பொன் மணியகாரன் வீதியைச் சேர்ந்த மனுவேற்பிள்ளை சூசைப்பிள்ளை இராஜசிங்கம் 15-6-89 இல் காலமானர்.

அன்னர் நீற்ருவின் அன்புக் கணவரும், நிகார் (கனடா), குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், சித்திரா, பாமா ஆகியோரின் மாமனுரும் ஆவார். அன்னரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக 18-06-89 ஞாயிறுக்கிழமை காலை 9.00 மணியளவில் கரம்பொன் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்ரூர், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**A. GERARD.**
கரம்பொன்,
ஊர்காவற்றுதுறை. [11287]

### சேதர் ஆறுமும் கந்தசாமி (ராசு)

நேற்றைய உதயனில் வெளியானதன் பிரகாரம் அன்னரின் பூதவுடல் இன்று (17-06-89) சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னரின் இல்லத்திலிருந்து திருநெல்வேலி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்ரூர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வி. இரத்தினகுமார்.
பத்திரகாளி கோவிலடி,
திருநெல்வேலி. [11289]

## இந்தியப்படை---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
பின்னர் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் அமைதியற்ற தன்மை ஏற்பட்டது

இலங்கை ஜனதிபதி கேட்டுக்கொள்ளும் எந்த நேரமும் அமைதிப்படையை வாபஸ் வாங்க இந்திய அரசு தயாராக உள்ளது என்றே நங்களுக்கு இந்தியா அடிக்கடி கூறிவந்தது.

இந்தியாவில் உள்ள பெரிய அரசியல் கட்சிகளும் அமைதிப்படை விலக்கப்படவேண்டும் என்று கேட்டுள்ளன.

நமது பிரச்சினையை நாம் தீர்த்துக் கொள்ளத் தவறியதால்தான் இன்றைய அவல நிலை ஏற்பட்டது.

நமது பிரச்சினைகளும் தீர்க்கப்படாமலே இருக்கின்றன.

தன்னுதிக்க ள்ள எமது நாட்டில் வெளிநாட்டுப் படை வந்திறங்கியதால் நமது இறைமைக்கு அவமதிப்பு ஏற்படுவதை கண்ணுற்பார்க்கும் துர்ப்பாக்கிய நிலை நமக்கு ஏற்பட்டுள்ளது:

ஆகவே நமக்குள்ளே அரசியல் வேறுபாடுகள் இருப்பினும் அவற்றை மறந்துவிட்டு, இந்திய அமைதிகாக்கும் படையைத் திருப்பி அனுப்புவது அத்தியாவசியம் என்று கூறுகின்றேன்.

அமைதிப்படையை வாபஸ் பெறுவதற்கு ஒரேஒரு நிபந்தனை தான் நிறைவேற்றப்பட இருந்தது. அந்த நிபந்தனை என்னவெனில் இலங்கை ஜனதிபதி அமைதிப்படையை திருப்பி அனுப்பும்படி கேட்பதே!

அந்த நிபந்தனை இப்போது நிறைவேற்றப்பட்டு விட்டது.

இன்னெரு நாட்டின் படை எமது மண்ணில் இருக்கும் போது சார்க் அமைப்பு மாநாட்டை நாம்நடத்த முடியாது.

இந்திய அமைதிப் படையினர் எமது நாட்டில் தொடர்ந்து இருக்கவேண்டும் என்று கூறும் சிலரும் இருக்கின்றனர்கள்.

எனவே இத்தருணத்தில் பொறுமை, நிதானத்துடன் செயல்பட வேண்டும்

இன்று நாட்டில் பல சேவைகள் குற்றுயிரான நிலையில் உள்ளன.

வேலை நிறுத்தங்களும் குழப்பங்களும் வன்முறைகளும் நிலவினல் இந்திய அமைதிப் படையைத் திருப்பி அனுப்ப முடியாத நிலை ஏற்படும் என்பது திண்ணம்.

அப்படையை இந்தியாவுக்கு அனுப்பும் நாள் எந்த நாளோ என்று நாம் பரிதவிக்க வேண்டி வரும்.

காரணம், குழப்பத்துக்குள்ளாக, இடருக்குள்ளாக அன்ருட சேவைகளை செவ்வனே நடத்த முடியாத நிலைக்குள்ளாகி பரிதவிக்க வேண்டி வரும்.

அந்த வலுவிழந்த நிலையினைப் போக்கிக் கொள்வதற்கு எமது காலத்தைச் செலவழிக்க வேண்டி வரும்.

ஆகவே இந்த விசேட வேண்டுகோளை விடுக்கக் கருதினேன்.

நாம் அனைவரும் இந்த சில மாதங்களுக்குள் எமது கருத்து வேறுபாடுகளை மறந்து அமைதிப்படையைத் திருப்பி அனுப்பப் பாடுபடுவோமாக! அதற்காக இணைந்து செயல்படுவோமாக!

அமைதிப் படையை அனுப்பி வைக்க வேண்டும் என்று கோருபவர்களே குழப்ப நிலையை ஏற்படுத்துவதாயின் — அது — அமைதிப் படையைத் திருப்பி அனுப்ப உதவாது.

— இப்படி ஜனதிபதி தெரிவித்தார். (உ-எ)

## வவுனியா:----

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]
தைகளும் எடுத்துச்செல்லப்பட்டன.

அமைதிப்படை இங்கிருந்து வெளியேறக் கூடாது என இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியைக் கோரும் பொது மக்கள் கையெழுத்திட்ட மகஜர் ஒன்றையும் திரு. சங்கராஜன் (ஈ பி ஆர். எல். எவ்.), திரு. ஞானி (ரெலோ), திரு. உயதன் (ஈ.என் டி எல்.எவ்.) ஆகியோர் பிரிகேடியர் தினேஷிடம் கையளித்தார்கள்.

## திருமலை--

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
திருகோணமலையில் இருந்து பிறிமா ஆலைக்கோதுமை மா கப்பல் மூலம் கொண்டுவரப்பட்டு, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகிக்கப்படுவது வழக்கம்.

அது இப்போது தடைப்பட்டுள்ளதால், பிறிமா ஆலையிலிருந்து லொறிகள் மூலம் கோதுமை மாவை இங்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக உதயனுக்குத் தெரிய வந்துள்ளது. (அ-10-120)

## முஸ்லிம் தமிழர்---

பங்குபற்றினர்.

திரு வரதராஜப்பெருமாள் அங்கு உரையாற்றுகையில் கூறியதாவது:-

மாகாணசபையைக் கலைத்து ஓர் இடைக்கால அரசாங்கத்தைஅமைக்கவேண்டும்என சிலர் கேட்கிருர்கள்.

முன்னர் ஓர் இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் என்று கேட்டதற்கு நியாயம் உண்டு. அப்போது மாகாணசபை அமைக்கப்படவில்லை.

ஆனல் இப்போதுள்ள மாகாணசபையைக் கலைப்பதானல், இந்த மாகாணசபையை விடக் கூடியஅதிகாரம்உடைய ஒரு சபையை அமைத்த பின்னர் இதைக்கலைப்பதே நியாயமாகும்.

தேர்தலில் நின்று வெற்றி பெறமுடியாதவர்களே இன்று ''மாகாணசபையைக் கலை''! என்ற கோஷங்களை எழுப்புகின்றனர்,

இன்று சுதந்திரமாக கருத்து வெளியிட முடியாத நிலையில் எமது மக்கள் உள்ளனர். இதை நாம் மாற்றிஅமைக்க வேண்டும். மக்கள் ஒருங்கிணைந்து, தமது சுதந்திர உரிமைகளைப் பாதுகாக்கத் திரண்டு எழுந்தால் மட்டுமே இந்த நிலையை நாம் மாற்றியமைக்க முடியும்.

கட்சிகள் இயக்கங்களுக்கிடையே கருத்து வேற்றுமைகள் இருந்தே தீரும். எனது கருத்தை இன்னெருவர் ஆதரிக்கவில்லை என்பதற்காக அவனின் உயிரைப் பறிக்கும். உரிமை எமக்கு இல்லை.

இன்று போராட்டம் என்ற பெயரில் படுகொலைகள் நடைபெறுகின்றன; இந்தப் பரிதாபமான நிலையை மாற்றி அமைக்கப் பொதுமக்களின் ஆதரவு எமக்கு வேண்டும்

எமக்குப் பல நாடுகளிலும் இருந்து புனரமைப்பு வேலைகளுக்கு நிதி மற்றும் உதவிகள் கிடைத்துள்ளன. இந்த வேலைகளைச் செய்வதற்குக்கூட முட்டுக்கட்டைகள் போடப்படுகின்றன.

பாதிக்கப்பட்டமக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு சிவில் நிர்வாகம் ஒழுங்காக இயங்க வேண்டும். வங்கிகள் இயங்க வேண்டும்.

எமக்குக் கிடைத்த நிவாரணங்களை மக்களுக்குச் சேரப் பண்ணுவதில் சம்பந்தப்பட்டவர்கள் பாராமுகமாக இருந்தால் இப்பணம் திரும்பிப் போய்விடும்.

இலங்கை அரசாங்கம் வடகிழக்குப்பகுதி மக்களின் புனர்நிர்மாண வேலைகளுக்குஅனுப்பப்பட்ட நிவாரணங்களை, நொண்டிச் சாட்டுக்களைக் காட்டி. தென்பகுதிக்குத் திருப்பிவிட முனைகின்றது.

ஆகவே சகல ஊழியர்களும் ஒத்துழைப்புத் தருவதின் மூலமே வடக்கு, கிழக்கு மாகாணத்தில் 'புனரமைப்பு வேலைகளை நாம் துரிதப்படுத்த முடியும் -என்ருர் (உ-ச)

## கடை மீது கிரனேட் வீச்சு! ஈ.என்.டி.எல்.எவ். விளக்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 17
யாழ்ப்பாணம் ஐந்து சந்தியில் உள்ள கடைஒன்றின்மீது கடந்த புதனன்று மாலை 7.00 மணிக்கு கிரனேட் வீசப்பட்ட சம்பவம் குறித்து ஈ.என்.டி. எல்.எப் இயக்கத்தின் யாழ் மாவட்ட முகாம் பொறுப்பாளர் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார். அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

முஸ்லீம் இயக்கம் ஒன்றின் பத்திரிகையில் வெளியான செய்தியில்: சம்மாந்துறையில் நடந்த இனமோதலுக்கும் எமக்கு தொடர்புடையதாக எம்மால் செய்யப்படாத ஒன்றை எழுதி தமிழ் பேசும் மக்களிடையே வதந்தி பரப்பப்பட்டுள்ளது.

மேற்படி பத்திரிகைக்கும் ஐந்து சந்தியில் உள்ள பிரஸ்தாப உரிமையாளருக்கும் தொடர்புடைய காரணத்தினல் அதைப்பற்றி தீர விசாரணை செய்ய கடை உரிமையாளருக்கு அழைப்பு விடுத்திருந்தோம். வராத பட்சத்தில் எம்மால் கடுமையான அறிவித்தலும் கொடுத்தோம். அவர் அதையும்பொருட்படுத்தாததால் இந்தக் கடைக்கு எம்மால் கிரனேட் வீசப்பட்டது.

இப்படிப்பட்ட சமூகவிரோத செயல்களில்ஈடுபட்டு இனப்பிரச்சினையை உண்டு பண்ணும் எந்த சமூகத்தினராக இருந்தாலும் அவர்கள் மேல் ஈ.என்.டி.எல்.எவ் கடும் நடவடிக்கை எடுக்க ஒரு போதும் தயங்காது என்பதை தெரிவிக்கிறோம்.

பின்னர் மேற்குறிப்பிட்ட கடை உரிமையாளர் எம்மால் கைது செய்யப்பட்டார். விசாரணையின் பின் ரூபா 30ஆயிரம் மான நஷ்ட ஈடாகப் பெற்றுக் கொண்டு அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார் என்பதை குறிப்பாக முஸ்லீம் சமூகத்தினருக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வாறு வதந்திகள் பரப்புபவர்களை இனங்கண்டு அறிவிக்குமாறு கேட்கிறோம்.

நாம் மக்கள் மேல் கொண்ட அன்பினலும், மக்கள் எம்மேல் கொண்ட அன்பினலும் நாம்வளர்ந்துவரும் இவ்வேளையில் இதை சகித்துக்கொள்ள முடியாத சில எதிர்ப்பு சக்திகளின் அபாண்டப் பழியே இப்பத்திரிகைச் செய்தியாகும்

நாம் எந்த சமூகத்தினருக்கும் எதிரானவர்கள் அல்லர். அதேநேரத்தில் எம் தமிழ் பேசும் மக்களை அடக்கும் சதிகாரர்களை அடக்கி ஜனநாயக வழிக்கு திருப்புவதே எமது போராட்டமாகும். ஆகவே மக்களே பீதி அடையாதீர்கள் - எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

### காலமானர்

முன்னுள் பிரதம நீதியரசர் எம். சி. சன்சோனி நேற்றுக் காலமானர்.

## படை அதிகாரிகள்---

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]
1. நாகலிங்கம் வன்னி (22) கல்மடு இரணை இலுப்பைக் குளம்.
2. மகேஸ் (36) பெரியகுளம் கனகராயன்குளம்.
3. இராமச்சந்திரன் காத்தார் குளம், மன்னர்
4. வேலாயுதம் நாகரத்தினம் (40) பி. டபி. யு. டி. வீதி, முல்லைத்தீவு.
5. குணபாலன் (28) பெரிய குளம், கனகராயன்குளம்.
6 நா. சிவபாலன் (19) சாளம்பன், இரணை இலுப்பைக்குளம்

ஆகியோரே இறந்தவர்களாவர்.

திடீர் மரணவிசாரணை அதிகாரி டாக்டர் எஸ். கே. பாலசிங்கம் மரணவிசாரணை நடத்தினர்.

திடீர் மரணவிசாரணை அதிகாரியிடம் அளித்த வாக்கு மூலத்தில் திரு. பாலகுமாரன் தெரிவித்ததாவது;-

இறந்தவர்களான எமது இயக்கத்தைச் சேர்ந்த அறுவரையும், வவுனியாவில் உள்ள இந்திய அமைதிப் படையின் உயரதிகாரிகளைச் சந்தித்து சில முக்கிய விடயங்கள் குறித்து பேச்சு நடத்துவதற்காக கடிதத்துடன் கடந்த திங்களன்று அனுப்பி வைத்தேன்.

அவர்கள் புதன்கிழமை வரையும் யாழ்ப்பாணத்திற்குத் திரும்பி வராதமையினுல் அவர்களைத் தேடி வவுனியாவுக்கு வந்தோம்.

அடையாளம் காணப்படாத ஆறு பேரின் சடலங்கள் வவுனியா ஆஸ்பத்திரியில் இருப்பதைக் கேள்விப்பட்டு வந்து பார்த்தபோது ஆறுபேரும் என்னுல் அனுப்பி வைக்கப்பட்ட எமது இயக்கப் பிரமுகர்கள் என்பதைக் கண்டேன் — என்ருர்.

வவுனியா மாவட்ட பதில் சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் மொகமட் சுல்தான் மீரா மொகிதீன் பிரேத பரிசோதனைகளை நடத்தி அறிக்கை சமர்ப்பித்தார்.

கைகளும், கண்களும் வாயும் கட்டப்பட்ட நிலையில் காணப்பட்ட இந்தச் சடலங்கள் அனைத்தும் அரைகுறையாக எரிந்திருந்ததாகவும் —

இரு சடலங்களுக்கு வலது கைகள் துண்டிக்கப்பட்டிருந்ததாகவும், மூவருக்கு கழுத்தில் வெட்டப்பட்ட காயங்கள் காணப்பட்டதாகவும் —

எல்லாச் சடலங்களும் மார்பு வயிறு போன்ற பகுதிகளில் முக்கிய உறுப்புகள் முற்ருகச் சேதமடையும் வகையில் கூரிய ஆயுதங்களினுல் வெட்டியும் குத்தியும் ஏற்படுத்தப்பட்ட காயங்களினுல் சித்திரவதைப்பட்டு மரணம் ஏற்பட்டுள்ளது எனவும் —

பிரேத பரிசோதனை நடைபெற்றதிலிருந்து 48 மணித்தியாலங்களுக்கு முன்பாக மரணம் ஏற்பட்டிருக்க வேண்டும் எனவும் — சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணையின் முடிவில் கொலைகள் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

இறந்தவரான நாகலிங்கம் வன்னி என்பவரது உறவினர்களும் விசாரணையின் போது சமூகமளித்திருந்தனர். (அ-164)

## தமிழ் வீடியோ..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]
உடனுக்குடன் தருவிக்கும் கொழும்பு முகவர்கள், தற்போது அவற்றை தருவிப்பதற்குப் பின்னிற்பதாகக் கூறப்படுகிறது.

ஜே. வி. பியின் பிரச்சாரத்துக்கு மத்தியில் அதிக விலை கொடுத்து இந்த வீடியோப் படங்களைத் தருவித்தாலும் அவற்றை அந்த விலைக்கு கொழும்பில் விற்கமுடியாயும என்பது சந்தேகமே என கொழும்பு முகவர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை தென்பகுதியில் உள்ள அனைத்து வீடியோ கடைகளிலும் இந்திய தமிழ் ஹிந்தி திரைப்படங்கள் வாடகைக்குக் கொடுப்பதும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாம். இந்தப்படக்கொப்பிகளும் பதுக்கப்பட்டு விட்டதாம். [உ - 9]

## கேள்விப் பத்திர அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 1,500 வீடுகள் கட்டும் உதவித்திட்டம் ஒன்றை ஐக்கிய நாடுகள் [அகதிகளுக்கான] உயர் ஸ்தானிகராலயம் ஆரம்பித்திருக்கிறது.

இதற்கான கட்டட நிர்மாணப் பொருட்களை விநியோகிப்பதற்காக கேள்விப் பத்திர அறிவித்தல்களை ஜூன் 27 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கும்படி கோரப்படுகிறது.

இது சம்பந்தமான நடைமுறைகள், வேலையின் விபரங்கள், தேவைப்படும் பொருட்களின் அளவு மற்றும் அறிவுறுத்தல்களுக்கு 223, ரெம்பிள் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள ஐக்கிய நாடுகள் (அகதிகளுக்கான) உயர் ஸ்தானிகராலயத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேள்விப்பத்திரக்காரர்கள் கோரப்படுகின்ருர்கள். (11284)

நம்பிக்கை நாணயத்தின் சின்னம் → ஷப்ரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், காங்கேசன் வீதி, 361/2 இல் உள்ள அச்சகத்தில் 17 - 06 - 1989 அச்சிட்டு வெளியிடப்பட்டது

பேரடெனியா இன்ஸ்ரிரியூட்
கொககுவில்
A/L 89, 90, 91
பொருளியல்
திரு. ஸ்ரீரங்கநாதன், திரு. உதயன்
கணக்கியல்
திரு. வன்னியசிங்கம்
வர்த்தகமும் நிதியும்
திரு. தேவா
புவியியல்
திரு. வேலாயுதபிள்ளை

சஞ்சீவி
சஞ்சிகை

17 - 06 - 1989 சனிக்கிழமை

பேரடெனியா இன்ஸ்ரிரியூட்
கொக்குவில்
A/L 89, 90, 91
இந்துநாகரிகம், தமிழ்
திரு. பாலா
அளவையியல்
திரு. சந்திரராஜா
அரசியல்
திரு. செபராஜா
வரலாறு
திரு. புஷ்பரட்ணம்
A/L 89 Paper Class நடைபெறுகின்றது.

கருத்துக் கலசம்
மயூரா

## கலாசார விரோதிகள்!

ஈழத் தமிழ்ப் பிரதேசங்களில் அரசியல் நிலைமை மோசமடைந்தது. அடுத்தடுத்துப் பல இடர்கள் சூழ்ந்தன. இராணுவ நடவடிக்கைகளாலும், படைகளின் அத்துமீறல்களாலும் தமிழர்ஒவ்வொருவரின் பாதுகாப்பும், வாழ்க்கையும் பயங்கரமாகின; நிச்சயமற்றதாகின.

இதன் விளைவாக ஈழத் தமிழர்கள் உலக நாடுகள் பலவற்றுக்கும் சென்று குடியேறி உள்ளனர். பலர் அகதிகளாகவும், சிலர் அந்நாடுகளின் பிரசைகளாகவும் மாறி வாழ்கிறார்கள்.

இந்த நாட்டில் ஏற்படக்கூடிய உயிராபத்து உட்பட்ட பல இன்னல்கள், இடர்கள், கொடுமைகளில் இருந்து தப்பிவிட்ட அதிஷ்டசாலிகளாகவும் அவர்கள் தங்களைக் கருதிக் கொள்கிறார்கள்!

அவ்வாறு தப்பிக்கொண்ட பல ஈழத் தமிழர்கள் வெளிநாடுகளில் போய்ச்செய்யும் தப்பிதங்களும் தவறுகளும் அனந்தம். தமிழர்கள் என்றால் கேவலமானவர்கள் என்று அந்நிய நாட்டவர்கள் பட்டம் சூட்டும் அளவுக்கு பலர் தாம் வாழும் நாடுகளில் பழி, பாவம் பாராது கீழ்த்தரமாக நடந்துகொள்கிறார்கள். எல்லோருக்குமே, ஈழத் தமிழினம் முழுவதற்குமே அவமானத்தைத் தேடித் தரும் சின்னங்களாக மாறி வாழ்கிறார்கள்!

அதைவிடத் தமிழ்க் கலாசாரம், பண்பாடுகளைக் துறந்து அந்நிய கலாசாரங்களுக்கும், வாழ்க்கை முறைகளுக்கும் அடிமைகளாகிறார்கள் என்பது மேலும் வேதனைக்கு உரியது.

வெளிநாடு செல்வோர் தமது தனித்துவத்தைப் பேணும் கலாசாரத்தையும், பண்பாட்டையும் மாற்றிக்கொள்ளவேண்டும், முற்றாக மறந்துவிட வேண்டும் என்ற தேவையில்லை. அது பிறந்த மண்ணுக்கும், சமூகத்துக்கும் செய்யும் பெருந் துரோகமாகும். அவ்வாறு செய்பவர்கள் கலாசார, சமூக விரோதிகள் ஆவர்.

தமிழன் எங்கு வாழ்ந்தாலும் தனது தனித்துவத்தை, தமிழ்ப் பண்பாட்டை, கலாசாரத்தை, வாழ்க்கை முறையைப் பேண வேண்டும். வேற்றுக் கலாசாரங்களுக்குள் சங்கமமாகும் நிலையைத் தவிர்க்க வேண்டும். தாயை மறந்தவன் குடும்பத்துக்கு உதவாதவன்; அதே போல் தனது சொந்தச் சமூக உணர்வைஇழந்து வேற்றுக் காலாசாரத்தை நாடுபவன் சமூகத்துக்கு உதவாதவன்.

அவனைச் சமூகத்திலிருந்து விலக்கி வைப்பதைவிட வேறு மாற்று மார்க்கம் ஏது? சொந்தக் கலாசாரத்தை மறந்து அந்நிய மோகத்துக்கு ஆட்பட்டு ஒன்றித்தவர்களை மீண்டும் ஈழத்தமிழர் சமூகம் ஏற்றுக் கொள்ளாமல் தண்டிப்பதே உரிய வழி. அவர்கள் உறவை முறித்துக்கொள்ள நம்மில் எத்தனை பேர் தயார்? ★

# அஞ்சேல் என்று அபயம் அருளும் நந்தாப் புகழ்பெற்ற நயினைத் தலம்

நஞ்சை புஞ்சை நல்வளமிகுந்த
நயினைத் தீவின் நல்லெழில் சொல்வேன்
செஞ்சொல் மிக்கதாம் சரித்திர வல்லுநர்
செப்பியமணிபல்லவம் இதுவாம்
தஞ்ச மென்றோருக்கருள் நந்நாளும்
தாயுமை நாகபூஷணியம்மை
கொஞ்சிமகிழ் நயினைத் தீவிதும் யாத்திரைக்
கோபுரத் தலமாம் குவலயமீது
அஞ்சேல் என்றே அபயம் அருளும்
அன்னை நாகம்மை அழகொழிர் நயினை.

இலங்கையின் வடபால், அதன் சிரம் போன்றுள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென்மேற்குத்திசையில் கடலில் பரந்துள்ள தீவுகளே சப்த தீவுகள் எனப்படும். நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு, வேலணைத்தீவு, புங்குடுதீவு. மண்டைதீவு என்பன.

இத்தீவுகளில் பெரியது வேலணைத்தீவு. சிறியது எழுவைதீவு. இத்தீவுகள் ஏழும் ஊர்காவற்றுறை தேர்தல் தொகுதியுள் அடங்கும். மூன்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளாக இத்தீவுகள் பிரிக்கப்பட்டுள்ளன.

### நிலையமும் பருப்பமும்

தீவுகளின் நடுவண் நெடுந்தீவுக்கும் அனலைதீவுக்கும் இடையில் புங்குடுதீவிற்கு அண்மையில் அமைந்துள்ளது நயினாதீவு. யாழ்ப்பாண நகரிலிருந்து 18 மைல் தூரத்தில் இத்தீவு உள்ளது.

யாழ்ப்பாண நகரிலிருந்து பண்ணைப் பாலத்தினூடாக வேலணை, புங்குடுதீவுமார்க்கமாகச் சென்று, குறிகாட்டுவான் இறங்குதுறையிலிருந்து படகுமூலம் இத்தீவை சென்று அடையலாம்.

முன்னர் சமுதைப்பிட்டித் துறைவழியாகவும் பிரயாண வசதியிருந்தது. ஊர்காவற்றுறையிலிருந்து கடல் வழியாகவும் இத்தீவையடையலாம்.

வடக்கு தெற்காய் நீண்டுள்ள இத்தீவு 2½ மைல் நீளமும், 1½ மைல் அகலமுமுடையது. 4.66 சதுர கிலோ மீற்றர் பரப்பளவையுடைய இத்தீவு 4248 மக்களைத் தன்னகத்தேயுடையது.

இரு கிராம சேவகர் பிரிவுகளையுடைய இத்தீவு, பல இனமக்களை (தமிழர் சிங்களவர் முஸ்லிம்கள்) உடையது.

நன்னீர் வளமுடைய இத்தீவில் விவசாய நடவடிக்கைகள் குறைவாகவே உள்ளன. அறிவுவளம் மிக்க இத்தீவில் அனேகர் அரசு உத்தியோகத்தவர் ஆவர்.

எனவே பொருள் வளத்திற்கு குறைவேயில்லை. தக்காரும், தாழ்விலாச் செல்வரும் மெத்தவுள்ளமை இத்தீவின் சிறப்பு.

### நயினாதீவு பெயர்வரக் காரணம்

நயினாதீவின் பழைய பெயர் நாகதீவு அல்லது நாகத்தீவு என்பதாகும். இது இலங்கையில் நாகர்கள் வாழ்ந்தார்கள் என்ற பேருண்மையை உணர்த்துகின்றது. பின்னர் இலங்கை முழுவதும் நாகதீவு என்ற பெயரால் அழைக்கப்பட்டது.

புத்தர் விஜயம் செய்த காலத்தில் இத்தீவு நாகதீபம் எனப் படலாயிற்று. மணிப்பல்லவம் என்பது மணிமேகலை இங்கு விஜயம் செய்த போது இதன் பெயராயிற்று. கோமுகிப் பொய்கையும் அமுதசுரபி அட்சய பாத்திரமும் இதற்கு ஆதாரம்.

நாகதிவயின என்பது இதன் சிங்களப்பெயர் ஒல்லாந்தர் இத்தீவிற்குச் சூட்டிய பெயர் ஹார்லெம்.

நயினாதீவு, நாகநயினாதீவு, பூந்தோட்டம், மணித்தீவு, பிராமணத்தீவு, சம்புத்தீவு, நரித்தீவு, நாவலந்தீவு, நாகேச்சரம் என்பன இத்தீவிற்குரிய வேறு பெயர்களாகும்.

நயினார்பட்டர் அல்லது நாயனார்பட்டர் அம்பாளின் பூசகராக இத்தீவில் வகித்தமையினால் அவர் வாழ்ந்த தீவு நாகநயினார் தீவு அல்லது நாகநயினாதீவு எனப்பட்டது. இப்பெயர்கள் இதன் வரலாற்றுச் சிறப்பையும், வணிகத் தொடர்பையும் சமய முக்கியத்துவத்தையும், காப்பியச் சிறப்பையும் உணர்த்தி நிற்கின்றன.

### இத்தீவைத் தரிசித்தோர்

இத்தீவு வணிகத்துறையில் வளம் பெற்றிருந்த தென்பதற்கு இத்தீவின் கிழக்கிலும் மேற்கிலும் இருந்த துறைகள் சான்றாகும். மேற்கில் முன்னர் படகுத்துறை இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

எனவே வணிகம் காரணமாகவும், வரலாறு காரணமாகவும் சமயத் தொடர்பினாலும் சமரச நோக்கினாலும் பலர், மன்னர்களும் வணிகர்களும், முத்தர்களும், சித்தர்களும், பக்தர்களும், அறிஞர்களும் இத்தீவைத் தரிசித்துள்ளனர்.

எனவே இத்தீவின் புகழ் உலகெங்கும் எட்டியுள்ளது. கடுகு சிறியதாயினும் காரம் பெரிதென்பதுபோல் இத்தீவு சிறியதாயினும் அதன் கீர்த்தி பெரிது.

பாண்டவர்களில் ஒருவனான அர்ச்சுனன் இத்தீவிற்கு வந்ததாக அறியக் கிடக்கின்றது.

சோழ அரசனான நெடுமுடிக்கிள்ளி இங்கு வந்ததாக வரலாறு கூறுகின்றது.

பர்மிய அரசனான தர்மசோக, புத்திர சோகம் தீர இங்கு நாக வழிபாடியற்றியதை அறிய முடிகின்றது.

யாவக நாட்டு மன்னனும் இங்கு வந்ததாகக் குறிப்பு உள்ளது.

மேலும் இங்கு இந்திய' கிரேக்க, உரோம நாணயங்கள் காலத்திற்குக் காலம் கண்டு பிடிக்கப்பட்டமை வெளிநாட்டார் தொடர்பை ஊர்ஜிதம் செய்கின்றது. எனவே சர்வமத சந்நிதியான இத்தீவு பன்நாட்டுமக்கள் உலவிய தீவாக அருளும் பொருளும் நிறைந்து, நீள் புகழுடன் விளங்குகிற்று.

### ஆட்சி அதிகாரம்

கி. பி. 2ம் நூற்றாண்டில் வெடியரசனின் ஆட்சியில் இருந்த இத்தீவுகள் பின்னர், போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என்னும் அன்னியரின் ஆதிபத்தியத்திற்குட்பட்டு, இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் மக்களாட்சியில் மாட்சிமை பெற்றன.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலம் எமது சமய, கலாசார அழிவுக்காலம் எனக் கொள்ளத்தக்கது.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலம் நிர்வாக சீர்திருத்தக்காலம்.

நயினாதீவின் பெருமைக்கு மூலகாரணமாகவுள்ளது. அங்குள்ள அம்மன் ஆலயம்-நாகேச்சரம் இலங்கையின் ஈச்சரங்களில் ஒன்றாக மிளிர்ந்தது.

முன்னர் இறைவன் சந்நிதியும் இறைவிசந்நிதியும் ஒரு ஆலயத்தில் அமைந்திருந்தன. இத்துடன் போதிமாதவனின் புகழை உணர்த்தும் தாதுகோபமும், நயினாதீவின் பெயரை நாகதீபம் என விளங்க வைத்துள்ளது.

நயினைப் புலவர்களும் அறிஞர்களும் அதன் புகழை நாற்றிசையும் பரப்பியுள்ளனர். மணி, நாகமணியை உணர்த்துவதால் மணித்தீவு-நயினாதீவு - ஒரு புண்ணிய தீவு ஒரு மணியான தீவுதான்.

### நயினாதீவுச் சுவாமியார்

நயினாதீவுச் சுவாமியார் என்று வழங்கப்பட்ட முத்துக்குமார சுவாமியாரும், நயினாதீவின் புகழ் இலங்கையெங்கும் பரவுவதற்குக் காரணமாயிருந்தார் சீலமிடும் ஞானியாக இவர் விளங்கினார். அவரின் சமாதிக் கோவில் காட்டுக் கந்தசாமி கோயிலின் மேற்கு வீதியில் அமைந்துள்ளது.

'நாடாவளத்தன நாடு' என்றார் வள்ளுவர்.

வளம் இயற்கையாய் அமைவது இறைவனால் வழங்கப்படுவது. வளத்தால் இன்பம் ஏற்படுகின்றது. இன்பவாழ்விற்கு இறையருள் இன்றியமையாதது.

இதனாற்றான் கோயில் இல்லாத ஊரில் குடியிருக்கவேண்டாம் என்று எம் முன்னோர் கூறினர் போலும்.

அருட்பொலிவும்' திருப்பொலிவும் உடைய நயினையம்பதி நல்யாத்திரைத் தலமாக விளங்குகின்றது அங்குள்ள நாகம்மையை வணங்கி நலம் பெறுவோம்.

**- பரமேஸ்வரி சிவராமலிங்கம் -**

நாம் அன்னையாய் வணங்கும் பொருள் அனைத்துயிர்களையும் ஆளும் இச்சத்தியேயாகும். அவள் ஒருத்தியேயாயினும் பல திறப்பட்டவள். எத்தகைய நுண்மதிக்கும், பரந்து விரிந்த பேரறிவிற்கும் அவளின் இயக்கத்தைப் பின்பற்றிச்செல்லும் ஆற்றல் கிடையாது.

அன்னையின் நான்கு சக்திகளும் அவளுடைய விஷேசமான மூர்த்தங்களில் நான்காகும். இவற்றின் மூலமே அவள் தன் படைப்புகளிற் செயற்படுகின்றாள். அறிவு, ஆற்றல் அமைவு நிறைவு இவையே அம் மூர்த்தங்களின் சிறப்பான தன்மைகள்.

நாம் இவை நான்கிற்கும் மஹேஸ்வரி, மஹாகாளிமஹாலட்சுமி, மஹாசரஸ்வதி என்ற நான்குதிருநாமங்களைச் சூட்டுகின்றோம். அன்னையின் உண்மையான கருணைக்குத் தம்மை வணங்குவோரின் தெய்வ உன்னத நிலையின் அளவிற்கு ஏற்ப அவள் இவ்வுருவங்களின் வழியாக உதவுகிறாள்.

நாகர்களும், நாகசர்ப்பங்களும் பூசித்து வந்தமையினால் இங்குள்ள அம்பிகை நாகபூஷணியாகக் காட்சி கொடுக்கின்றாள். ஆலய மூலஸ்தானத்திலே ஐந்து தலை நாகமும், அதன்முன்னே அமைந்த அம்மன் விக்கிரகமும் பார்க்கும் எவரையும் பரவசமாக்கும் பராசக்தியின் வடிவம் எனலாம்.

இவ்வாலயத்தின் தோற்றம் பற்றிய காவிய வரலாறுகளும், கர்ணபரம்பரைக் கதைகளும் அனேகம் உண்டு. இருப்பினும் மணிமேகலையில் கூறப்படுவதே ஆலயத்தின் தோற்றமாக இருக்குமென அனேகரின் நம்பிக்கை.



### வரலாறு

முன்னொரு காலத்தில் வாரணாசி (காசி) யில் அபஞ்சிகன் என்பவர் வாழ்ந்தார். அவருடைய மனைவி சாலி, இவள் கணவனை அறியாமற் கற்பதியானாள். அதன் மூலம் ஓர் ஆண் குழந்தை பிறந்தது.

இந்தக் குழந்தை பசுவினால் வளர்க்கப்பட்டதினால் இக்குழந்தைக்கு ஆபுத்திரன் என்ற பெயர் உண்டாகியது இக்குழந்தையை இளம்பூதி என்ற ஒருவர் வளர்த்தார்.

இந்த ஆபுத்திரனுக்கு அமுத சுரபியை அன்னை பராசக்தி வழங்கினாள். பசித்தோர்க்கெல்லாம் அமுதசுரபி மூலம் அமுதூட்டி மகிழ்ந்தான் ஆபுத்திரன். இதனால் ஆபுத்திரனின் தருமம் பெருகியது.

இதனால் இந்திரனுடைய பதவி பறிபோகக்கூடிய ஆபத்து ஏற்பட்டது. இதனால் இந்திரன் ஆபுத்திரனின் தர்மம் பெருகவிடாது சூழ்ச்சி செய்தான். ஆனால் அச்சூழ்ச்சியில் ஆபுத்திரன் அகப்படவில்லை.

ஆத்திரமடைந்த இந்திரன் பாண்டியநாடு முழுவதும் செல்வவளம் கொழிக்கும் படியாகச் செய்து பசிப்பிணியை அகற்றினான். ஆபுத்திரனின் அமுதசுரபிக்குப் பாண்டி நாட்டில் பயனற்றுப் போயிற்று.

இதனால் ஆபுத்திரன் சாவக நாட்டின் பசிப்பிணியை அகற்றுவதற்காக அழைத்துச் செல்லப்பட்டான்.

இதையறிந்த இந்திரன் ஆத்திரம் அடைந்தான். ஆபுத்திரன் சென்ற மரக்கலத்தைப் புயற்காற்றினால் சிதறடித்தான். மரக்கலம் மணிபல்லவத்தீவாகிய நயினாதீவை அடைந்தது.

காலத்தின் கோலத்தால் ஆபுத்திரன் அமுதசுரபியுடன் மணிபல்லவத்திலே உள்ள கோமுகிக் கரையில் அனாதரவாக விடப்பட்டான். மனித சஞ்சாரமற்றதீவில் இப்பாத்திரத்தைக் கொண்டு ஒருவருக்கும் பசிப்பிணிபோக்க முடியவில்லையே என்று மனம் நொந்து தானும் புசியாமல் அமுதசுரபியைக் கோமுகிப் பொய்கையில் விட்டுவிட்டு தானும் உயிர்நீத்தான்.

### பௌர்ணமி

பௌர்ணமித் தினத்திலே இந்த அமுதசுரபி வெளிவந்து தக்கோர் கையில் எப்போதாவது கிடைத்துப் பசிப்பிணியை வேரறுக்கும் படைக்கலமாக மாறவேண்டும் என்பது அவனுடைய வேண்டுகோள்.

அதன்படி மணிமேகலை மணி பல்லவத்திற்கு வரும் வரை அமுதசுரபி கோமுகிப் பொய்கையிலேயே மறைந்திருந்தது என்பது மணிமேகலை என்னும் நூல்வாயிலாக நாம் அறியும் இலக்கிய வரலாறு.

ஆபுத்திரன் உயிர் நீத்ததால் ஏற்பட்ட பிரம்மஹத்தி தோஷத்தை நீக்கும் பொருட்டே ஆபுத்திரன் உயிர் நீத்த மணிபல்லவத் தீவாகிய நயினாதீவில் புவனேஸ்வரி பீடத்தை பிரதிஷ்டை செய்தான் என்றும் மணிமேகலை வாயிலாக அறிகின்றோம்.

ஆபுத்திரன் தனது மறுபிறப்பில் ஒரு பசுவின் வயிற்றில் புண்ணியராசன் என்ற பெயரில் சாவக நாட்டிற் பிறந்து குடிதழீயிக் கோலோச்சும் மன்னனானான்.

நாகபூஷணியைப் பூசிக்கக் கடல் மார்க்கமாகப் பாம்பொன்று செல்கின்றது. அதனைக் கருடன் ஒன்று தொடர்கிறது. கடல்வாணிபம் செய்யும் வாணிகன் ஒருவன் பாம்புக்கு உதவுகிறான். அம்பாளின் அருளினால் அவ்வணிகன் சிறப்புற்று ஆலயம் அமைத்து வழிபட்டு நலமுற்றான் என்பது அக்கர்ண பரம்பரைக் கதையின் சுருக்கமாகும்.

### வாரியார் வாழ்த்து

1955ம் ஆண்டு இவ்வாலயத்தில் வழிபட்ட திருமுருக கிருபானந்தவாரியார் 'அம்பிகையின் திருவுருவம் இன்ன காலத்தில் அமைக்கப்பட்டதென நிட்சயிக்க முடியாத பழமை உடையது வழிபாட்டார்களின் வல்வினைகளை ஒருங்கே நீக்கி வரங்கள் அருள வல்ல வரதமுடையது' என்று கூறி மகிழ்ந்துள்ளார்.

நயினாதீவின் வடகீழ்த்திசையில் வேப்பமரச் சோலையில் அமைந்துள்ள ஆலயத்தில் இருந்து வழிபட்டோருக்குத் தடையேதும் இல்லாத அருளும், நாகபூஷணியின் திருவருளைச் சொற்களால் வருணிக்க இயலாது.

திருமணமாகி மகப்பேற்று இல்லாதவர் நாகம்மாளை வழிபட்டால் மகப்பேறு நிச்சயம் இடைக்கும். ஆயிரமாயிரம் குழந்தைகள் அன்னையின் கருணையால் பிறந்து இருண்ட இல்லங்களுக்கு ஒளியூட்டியுள்ளனர். அன்னையின் கடைக்கண் பார்வை இடைத்தால் அனைத்து இன்பமும் பெறுவது திண்ணம். ★

**- எஸ். கே. யோகநாதன் -**

## புதுமைப் பதியாளே!

இராகம்: ஆனந்தபைரவி

பல்லவி

பிராமணத் தீவெனவே பெரியோர்கள் கூறுகின்ற
புராண மகிமை கொண்ட புதுமைப் பதியாளே

அநுபல்லவி

சிற்பம் நிறைந்த அந்தச் சிங்காரத் தேரேறும்
சிங்காரியே உமையே சங்கரியே தாயே

சரணம்

ஆடி அசைந்துவரும் ஆரூர்த் தேர்போலே
அழகாய்ப் பவனிவரும் அருமைமிகு தாயே
ஓடி ஓடி வரும் பக்தருக்காய் நல்
லொய்யாரக் காட்சி நல்கும் உத்தமியே
வாடி வதங்கி நிற்கும்
வையக மனிதருக்காய்
தேடி அருள் புரிவாய்
தெய்வ நாயகியே தினமே —பிராமண

— முருகவே பரமநாதன்

[ நாளை நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயத் தேர்த்திருவிழா நடைபெறுகிறது. ]

## கௌதமபுத்தர்

நிறைவாக உங்களுக்குச் சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

கர்ம யோகத்தைச் செயல் வடிவத்தில் போதித்தவர் போதிசத்வர் புத்தபிரான்.

கர்மயோகத்தின் படி வாழ்ந்து காட்டிய ஒரே ஒரு மனிதர் பௌத்த பெருமான் ஆவார்.

உலகிலே பிறந்தவர்களில் மிகப் பெரிய ஆத்மா புத்தபிரான்; அவருடன் ஒப்பிட ஒருவருமே இன்னும் பிறக்கவில்லை.

பௌத்தம், உலகம் கண்ட மிகப்பெரிய சமயநெறியாகும்.

உலக மனித வரலாற்றில் பிரமாண்டமான ஆத்மீக அலையை எழுப்பியவர் புத்தபிரான். ★

— சுவாமி விவேகானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நலிந்த உள்ளம்

ஆற்றங் கரையில் நிற்குமந்த
அத்தி மரத்துப் பழமதையே
விழுந்த பொழுது அண்டுகளும்
விரைந்து சென்று நைதனவே

மென்மை யான பழமதுவே
விழுந்து நைந்து போனதுவே
கொடிய நண்டின் கால்களினுல்
குழைந்து அழிந்து போனதுவே

வாக்குக் கொடுத்த தலைவனவன்
வந்து சேர வில்லையென்று
போக்கைக் கண்டு தலைவியவள்
பொல்லா வருத்தம் கொண்டனளே

அவளின் மெலிவு கண்டுநின்ற
அயலார் பேசித் தூற்றுகிறுர்
நலிந்த உள்ளம் மேலுமது
நலிந்து நொந்து வாடிடுதே.

— வ. யோகானந்தசிவம்

## பாவை நீ சூடு!

மலர்க் காட்டில் நான் புகுந்து – வாச
மல்லிகையை நான் பறித்து
மனக் கோட்டையினுள் புகுந்து
மலர் ஆரம் நான் கோர்த்து
மணவாளன் கழுத்தினிற்கு
மணமாலை சூடச் சென்றேன்
பணக் கட்டு உண்டானுல்
பாவை நீ சூடு என்ருன்.

— பூநகர் கவிப்பிரியா

## சிறை

கருவானபோது கருவறைதனில் சிறை
உயிரானபோது அன்னைமடிதனில் சிறை
தவழாதபோது தனித்தொட்டிலில் சிறை
தவழ்கின்றபோது தன்வீட்டில் சிறை

நடவாதபோது நாற்சுவருக்குள் சிறை
நடக்கின்றபோது நால்வேலிக்குள் சிறை
படிக்கின்றபோது பள்ளிக்கூடத்தில் சிறை
பயிராகும்போது நம் பண்பாட்டில் சிறை

வாலிபத்தில் மனம் காதலில் சிறை
வசந்தமென்னும் அந்த மாயையில் சிறை
கலந்த பின்பு தன் துணையிடம் சிறை
காலமெல்லாம் இனி இணையிடம் சிறை

முடியாதபோது மூப்பினில் சிறை
முழுதாக இனி கட்டிலில் சிறை
முடிவாகு மட்டும் மருந்தினில் சிறை
முடிவான பின்பும் மரப்பெட்டியில் சிறை.

—தனு

## ஒரு பொழுது

விழித்திருந்து என் ஊன்றுகோலுடன்
நான் (நி) தானித்துப் பிரயாணிக்க
எண்ணுகிறேன் என்ருல் என்னைச் சுற்றியொரு
அந்தகார இருள் சூழ்ந்திருக்கிறது
என்றுதானே அர்த்தம்!

ஆனுல் நட்சத்திரங்கள் மினுமினுத்துக்
கொண்டிருக்க
ஒரு விடிவை நோக்கி என்மனம்
அஸ்தமித்துக் கொண்டிருக்கிறது
என்பதில் நான் எவ்வளவு
ஆழ்ந்துபோய் அழுது கொண்டிருக்கிறேன்!

இருந்தும் என்னை நோக்கிப் பயணங்கள்
வந்துகொண்டிருக்கின்றனவே! நான் என்னசெய்வது?
என்னொளியை என்னிடம் மீட்டுக்கொடும்
கணப்பொழுதில் மட்டும் விழிப்பையேற்படுத்தும்
என் மக்களுக்கு
என்று நான் இறைஞ்சுகிறேன்!

எஸ். வெண்ணில

## ஒரு சினிமா அடிமைக்கு

எதிர்கால இளைஞனே.........
சமுதாயச் சிற்பியே.........
சினிமாக் கொட்டகைகளையும்
சிரழிந்த சுவரொட்டிகளையுமே உன்
சிந்தனை உலகு சிறைப்பிடித்துக் கொள்கிறது.
மாண்டு கொண்டிருக்கும் மாணவனே......
நீயோ உன் பாடத்தையே மறந்துவிட்டுப்
படத்திற்குப் புறப்பட்டு விட்டாய்.
அந்தப் படமோ உனக்குப் பாடம்
படிப்பிக்காமலே உன் வாழ்வைப்
பாழடித்துக் கொண்டு விடுகின்றது.
'கல்வித் தென்றல்' உன்னை தொட்டுத்
தாலாட்டுகையில் 'சினிமாப் புயலோ
வேகமாக வீழ்த்தி விடுகின்றதுன்னை.
உலகம் புரியாக் குழந்தையே...
திரையுலகோ தன்னை விளம்பரப்படுத்த
கணக்கில்லாக் கட்டடங்கள் கட்டிக் கொள்கின்றது.
நீயோ உன் வாழ்க்கை மீதே கல்லறைகள்
கட்டிக் கொண்டு செல்லுகின்றாய்.
இருபதாம் நூற்ருண்டின் இளையோனே...
உன் சிந்தனைகள் செதுக்கப்பட வேண்டியவை
உன் பாதைகள் புனரமைக்கப்பட வேண்டியவை
உனக்காக மட்டும் அல்ல,
இந்த இருபதாம் நூற்ருண்டின்
இனிய திருப்பத்திற்காக.

பா. பூரணி

# இலட்சியப் பயணத்தில்....

பத்திரிகையைப் புரட்டிய மதியின் கண்கள் உள்ளே யிருந்த படத்தில் பதிந்தன. கதிரையில் சாய்ந்து கண்களை மூடிக்கொண்டாள்.

படம் படிப்படியாக மாறியது. அடர்த்தியான புருவம், அழகிய சிரிக்கும் கண்கள், நீண்ட மூக்கு, மெல்லிய உதட்டுக்கு மேலிருந்த அடர்ந்த மீசை சாந்தனது கரிய உருவத்துக்கு மேலும் கம்பீரத்தைக் கொடுத்தது.

அவளது உதடுகளில் மெல்லிய புன்முறுவல் இழையோடியது.

சாந்தன்...

அவள் படித்துக்கொண்டிருக்கும்போது அவனைச் சந்தித்தாள். சாதாரணமாக ஆரம்பித்த பழக்கம், தமது இலட்சியங்கள், எதிர்பார்ப்புக்கள், சொந்தப்பிரச்சினைகள் என்பவற்றைப் பகிர்ந்து கொள்ளுமளவிற்கு நெருக்கமானது.

ஒரே கொள்கையில் ஊறியவர்கள், ஒருவரை மற்றவர் நன்கு புரிந்துகொண்டவர்கள். இறுதியில் தமது மனங்களையும் பரிமாறிக் கொண்டனர்.

விடயம் மதியின் வீட்டிற்கு எட்டியதும் பெற்ருேர் மகளை கடுமையாக எச்சரித்தனர்.

சாந்தன் தனது படிப்பை நிறுத்திவிட்டு கடமைக்காக வேறிடம் சென்றுவிட்டான்.

பெற்ருேர் சற்று ஆறுதல் அடைந்தனர்.

அவனைப் பற்றிய தகவல்கள் அடிக்கடி அவளுக்குக் கிடைத்துக்கொண்டிருந்தன.

சாதி, அந்தஸ்து, பணம், அழகு, தொழில் என்பன இருமனம் இணைவதற்கு முக்கியமானதல்ல என்பது அவளது நிலை.

மதி ஆடம்பரத்தை வெறுப்பவள். அதற்காக செலவிடும் பணத்தை ஏதாவது சேவைகளுக்கு வழங்கலாம் என்று நினைப்பவள்.

குடியினுல் குட்டிச்சுவராகுபவர்களைக் கண்டு பரிதாபப்படுபவள். என்று இந்த யமன் அழிவான்? எப்படி இதனை ஒழிக்கலாம்? என ஏங்குபவள்.

மெதுவாக அரித்தே கொல்லும் புகைத்தலுக்கு அடிமையானவர் மேல் ஆத்திரப்படுபவள்.

இந்தப் பழக்கங்களற்ற ஒருவனையே அவள் கணவனுக எதிர்பார்த்தாள். சாந்தனும் அப்படியே இருந்தான்.

நாட்கள் சென்றன. சாந்தன் அவர்களது ஊருக்கே மறுபடியும்வந்து சேர்ந்தான்; மதிவீட்டார் நிலைகுலைந்தனர்.

அவளுக்கு வரன் தேட ஆரம்பித்தனர். அவள் எதற்கும் அசைந்து கொடுக்கவில்லை.

வெளிநாட்டிலிருந்து கொண்டு அழகான படித்த பெண் கேட்டு எழுதும் ஆண் மக்களின் ஒருவனை பெற்ருேர் தமது பணத்தினுல் விலைக்கு வாங்க அவனை பெற்றவர் வர்களுடன் ஒப்பந்தம் செய்தனர்.

நாட்டு நிலையினை காரணங்காட்டி அஞ்சி ஓடிய ஒரு கோழைக்கு மகளைத் தாரை வார்க்க நிச்சயித்தனர்.

தாலிகட்டுவதற்குக்கூட அவருக்கு வரமுடியாதாம். பெண்ணை அங்கு அனுப்பட்டாம்.

தவித்துக்கொண்டிருந்த மதி தெம்படைந்தாள். வெளிநாடு செல்ல மறுத்து விட்டாள்.

'அங்கு போய் அவருடைய மனைவியாக நடத்தப்படுவேன் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

வீட்டுக் கஷ்டம் காரணமாக உழைக்கச் சென்றவர்கள் தவிர சுகபோகத்துக்காக, பயத்துக்காக, அகதி என்ற நாமத்துடன் வெளியேறியவர்கள் அங்கு என்ன செய்கிருர்கள்? எப்படி வாழ்கிருர்கள் என்பது இங்கு எப்படித் தெரியும்'

கண்காணுத பிரதேசத்துக்கு தெரியாத ஒருவனிடம் மகளை அனுப்ப தாயும் விரும்பவில்லை.



அதனுல் அவளை மேற்படிப்பிற்காக வெளிநாட்டுக்கு அனுப்ப முறற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவள் அதற்கும் மசியவில்லை.

'இஞ்ச இருந்து என்ன செய்யப்போகிருய்? ஒவ்வொருநாளும் பயந்து பயந்து உயிரைக் கையில பிடிச்சுக்கொண்டு... ஓடி....ஓடி... சீ... நரக வாழ்க்கை......'— பொரிந்தார் தந்தை.

'அகதியாக அலைஞ்சாலும் இந்த மண்ணைவிட்டுப் போக மாட்டேன். செத்தாலும் அது இந்த மண்ணில்தான்' உறுதியாகக் கூறிவிட்டாள்.

'அவனிருக்கிருனென்ட கொழுப்பில கதைக்கிரு. இண்டைக்கோ நாளைக்கோ எண்டு சாவை எதிர்பார்க்கிற அவனைக் கட்டி நீ விதவையா வாழுவதை எங்களால பார்க்க ஏலாது'— என்ருள் அம்மா.

'யாருக்கு எப்ப சாவருமெண்டு சொல்ல ஏலாது மற்றவையின்ர உயிருக்கு இப்ப என்ன உத்தரவாதமிருக்கு? குண்டும் ஆட்களைத் தேடியே படுகுதுகள்?'

மதி நிலைமையைப் புரிய வைக்க அவர்களுடன் போராடினுள். சற்றும் எதிர்பாராத

**- மாவை ரதி -**

விதமாக நிலைமை மாறியது. விதி சதி செய்துவிட்டது.

அவளது வாழ்க்கையில் மட்டுமன்றிப் பலரது வாழ்க்கையிலும் கடவுள் விளையாடி விட்டார்.

மனிதன் நினைப்பதுபோல நடந்தால் அவன் தன்னை நினைக்கமாட்டான் என்ருே என்னவோ இறைவன் எதிர் விளைவுகளை மனித சமூகத்தில் புகுத்தி வேடிக்கை பார்க்கிருன்.

மக்களோடு மக்களாக, அந்த ஊரில் ஒருவனுக இருந்து வாழ்ந்து மக்களின் மனதில் நீங்காத இடத்தைப் பிடித்துக்கொண்ட சாந்தன், மதியிடம் மட்டும் சொல்லிவிட்டு இரவோடிரவாக ஊரைவிட்டு வெளியேறினுன்.

நிலையில்லாத இளமைக்காக நிலையான, நிறைவான இறைமையை இழக்க அவர்கள் தயாரில்லை,

அவனைப் பற்றிய எதுவித தகவலும் மதிக்கோ மற்றவர்களுக்கோ கிடைக்கவில்லை.

மதி அவனுக்காகவும் சகலருக்காகவும் கடவுளை வேண்டினுள். இது பெற்ருேருக்குப் பிடிக்கவில்லை. நிலைமை சீரடைந்துவிட்டது என்றெண்ணி முற்பகுதியில் மண்ணிலிருந்து வெளியேறியோர் [illegible] தனர்.

திடீரென்று ஒரு நாள் குமார் வீட்டார் வந்திறங்கினர். அவன் படத்திலிருந்ததிலும் பார்க்க வசீகரமாக இருந்தான். வந்தவர்கள் தாம் கல்யாணம் முற்ருக்க வந்ததாகக் கூறினர். அவர்கள் சீதனம், 'இனும்' இதிலேயே கவனமாக இருந்தனர்.

முன் பேசியதிலும் பார்க்க அதிகமாகக் கேட்டனர். பெற்றபிள்ளைக்கே விலைகூறும் இவர்களை என்ன செய்வது? தகுதிக்கேற்ப விலை கூறுவது சரி என்ருல், சம தகுதியிலுள்ள இருவரின் திருமணத்தின் போதும் பிரச்சினையேன் ஆண் வீட்டார் செய்தளவு செலவுதான் பெண்வீட்டிலும் செய்திருப்பார்கள்.

பெற்ருேரின் அறியாமைக்கு அடங்கி, தம்மைத் தாமே கேவலப்படுத்தி சிறுமைப்படும் இந்த இளஞ்சமுதாயம் திருந்துவது எப்போது?

மதியின் மனதில் புயல் வீசிக்கொண்டிருந்தது, தன்னைக் கூப்பிடும்போது தனக்கு இதில் விருப்பமில்லை என்று துணிந்து சொல்வதென முடிவெடுத்தாள்.

ஆனுல்.........

சம்பிரதாயத்துக்குக்கூட பெண்ணைப்பார்க்கக் கேட்கவில்லை. பெற்ருேரும் அழைக்கவில்லை.

நல்ல நாள் பார்த்து அறிவிக்கும்படி கூறிவிட்டுச் சென்று விட்டனர்.

அவள் அப்பாவை பரிதாபமாகப் பார்த்தாள். அவர் பார்வையில் தெரிந்த கடுமை அவளை தலைகுனியவைத்தது.

அவள் அம்மாவிடம் மன்ருடினுள்.

'அவன் உயிரோட இருக்கிருனே இல்லையோ எண்டே தெரியாது. இந்த லட்சணத்தில், அவன் இனியும் வருவான் எண்டு அவனை நம்பி... உன்னை இப்படியேவிட எங்களால முடியாது. இந்தக் கல்யாணம் நடந்தே தீரும்' அம்மா சொல்லிவிட்டாள்.

'மனத்தளவில் சாந்தனுேடு வாழ்ந்துவிட்டு, இனி இன்னெருத்தனுக்கு வாழ்க்கைப் படத்தான்வேண்டுமா?' சிந்தித்தாள்.

ஒருத்திக்கு ஒருவன் என்று எத்தனையோ பேருக்கு கூறியவள் இன்று....

கோழையாக தன்வாழ்வை முடித்துக்கொள்ள அவள் விரும்பவில்லை.

'என்னை ஏன் இவர்கள் புரிந்துகொள்கிருர்களில்லை? பெண்ணுக்கு தன்வாழ்வைத் தானே தீர்மானிக்கும் உரிமை இன்னும் கிடைக்கவில்லையா?

இவர்களை உதறிவிட்டு வெளியேற ஏன் என்னுல் முடியவில்லை? பாசமா, இல்லை, இதுதான்... பெண்ணின் பலவீனமா?

ஊருக்குத்தான் என்னுல் உபதேசஞ்செய்ய முடியுமா? அதை வாழ்வில் கடைப்பிடிக்க முடியாதா?

கடவுளே! ஏன் இந்தச் சோதனை? என தினமும் ஏங்கித்தவித்தாள்.

இறுதியில், 'முடிந்தவன் சாதிக்கிருன். முடியாதவன் போதிக்கிருன்' என தன்னைத் தானே சமாதானப்படுத்தினுள்.

வேலைகள் யாவும் துரிதகதியில் நடைபெற்றன. மகள் ஏதாவது தப்பான முடிவு எடுக்கக்கூடாது என்று தாய்க்குக் கவலை.

சீக்கிரம் அவளை ஒருவனிடம் ஒப்படைத்துவிட தந்தைக்கு அவசரம்.

இந்தநேரம் சாந்தன் வந்து நிற்கமாட்டானு என்று அவளுக்கு ஏக்கம்.

குமார் மதியின் வீட்டுக்கு வந்துபோகத்தொடங்கினுன். அவனது பகட்டான செய்கைகளும், ஆங்கிலம் கலந்த பேச்சும், வெளிநாட்டு மோகமும் ஆத்திரத்தை மூட்டின.

அவனது பணத்தின் செருக்கும், அழகின் தற்பெருமையும் எரிச்சலை ஏற்படுத்தின:

ஒரு நாள் அவன் சிரெட்டுடன் வந்தான். இது அவள் எதிர்பாத்ததுதான். அவனிடம் குடிப்பழக்கம் இருப்பதையும் அறிந்து கொண்டாள்.

இதை ஆற்றில் தத்தளிப்பவனுக்குக் கிடைத்த கல் மேடுபோல் நினைத்தாள். குடிகாரனுேடு தன்னுல் வாழ்க்கை நடத்த இயலாது என்று கூறினுள்.

'இந்தக் காலத்தில யார் பிள்ளை குடிக்கிறேல. அதுவும் நாலுவருடம் வெளியில இருந்தவன் குடிக்காமல் இருக்க வேணுமெண்டால் எப்படி?' அப்பா.

'நானே வெளிநாட்டு மாப்பிள்ளை கேட்டனுன்' —மகள்.

'இப்ப குடிப்பான். கலியாணம் முடிஞ்சா மாறிடுவான். இல்லாட்டிலும் நீ திருத்தலாந்தானே' –அம்மா.

கல்மேடு மணற்கும்பியானது. அவள் எதிர்பார்த்தது வேறு. அமையப் போவது வேறு. வாழ்க்கை மட்டுமா? கணவனுந்தான்.

மதி தன்னை எதற்கும் தயாராகிக் கொண்டாள். வர வர குமாரின் போக்கு மோசமாகிக் கொண்டு வந்தது. அவளது கவலை தனக்கு வாய்த்தவனைப்பற்றியல்ல.

மனச்சாட்சிக்கு விரோதமாக இலட்சியங்களை இழந்து உணர்ச்சிகளைக் கொன்று வாழப்போகிருேமே என்பது தான்:

அவனது குடிப்பழக்கத்தை பொறுக்க முடியாத பெற்ருேர் அதைக் குறைக்கும்படி கேட்டபோது 'நான் உழைச்ச காசு குடிப்பன்' என்று கூறிச் சென்று விட்டான்.

மறுநாள் விபத்தொன்றில் குமார் இறந்த செய்தி கிடைத்தது. மதியின் பெற்ருேர் இடிவிழுந்தவர் போலாயினர்.

'கணக்கில்லாமல் போட்டுட்டு ருேட்டு தன்னுடையது என்று கண்மண் தெரியாமல் மோட்டார்சைக்கிள் ஓடினுஉப்பிடித்தான்' யாரோ சொன்னுர்கள்.

திருமணம் முடிந்த பிறகு விபத்து நடந்திருந்தால் அவள் வந்த சகுனம் அருமந்த உயிரைப் பறிச்சிட்டாள்' என்ற ஊராரின் பழிச்சொல்லுக்கு ஆளாக வேண்டி வந்திருக்கும். நல்லகாலம் தப்பினேன். என மதி நிம்மதியடைந்தாள்.

பெற்ருேர் மறுபடி மாப்பிள்ளை தேட ஆரம்பித்தனர். மதி இனியும் உணர்வுகளை அடக்கத் தயாரில்லை. இலட்சிய வாழ்வினைத் தொடர்ந்தாள். ஆசிரியத் தொழிலில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டாள்.

★ ★ ★

தனது நெற்றியில் புரண்ட சுருள் கேசத்தை வழமை போல் கையால் உயர்த்தி விட்டபடி,

'மதி! முகத்துக்கும் நிறத்துக்கும் பொருத்தமான பெயர். வானமதி களங்கமுள்ளது. ஆனு, என்மதி மாசற்ற களங்கமில்லாத மதி.......'

என்று வழமைபோல் கூறி களங்கமில்லாமல் அழகாகச் சிரித்தான் சாந்தன்.

மதி தன்னை உலுப்பிக் கொண்டாள். முன்னுல் சாந்தனில்லை. பத்திரிகையில் குமாரின் படத்துடன் அவனின் நினைவஞ்சலி இருந்தது.

[யாவும் கற்பனை]



## தங்கமே ....

இமயமலைப் பகுதியில் உள்ளது லடாக் பிரதேசம்.

இந்திய புவியியல் ஆய்வாளர்கள் அப்பகுதியில் கனிப் பொருள்கள் இருக்கின்றனவா என்பதைக் கண்டறிய ஆராய்ச்சி நடத்தினர்.

அங்கு தங்கம் இருப்பது இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஆய்வு மேலும் தொடருகிறது. ★

## புதிய கருவி

விமானத்தின் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்துவதைத் தடுக்கப் புதிய கருவி ஒன்றை ஆஸ்திரேலிய விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

இந்தக் கருவியை விமானத்தின் இறக்கையில் பொருத்த வேண்டும்.

ஏவுகணை பாய்ந்து வந்தால் அந்தக் குறியில் இருந்து விமானக் விலகிச் செல்ல இந்தக் கருவி உதவும். விரைவில் இது விற்பனைக்கு வரவுள்ளது. ★

## மறைந்திருந்து தாக்கும் மாய நோய்

எய்ட்ஸ் நோயைத் தொடக்க நிலையில் இரத்தப் பரிசோதனை மூலம் கண்டுபிடிக்க முடியாது என்று அமெரிக்க விஞ்ஞானிகள்தற்சமயம் கண்டுபிடித்துள்ளனர்.

உடலில் உள்ள எய்ட்ஸ் நோய்க் கிருமிகள் 3 ஆண்டுகளுக்கு மேல் இரத்தத்தில் எயிட்ஸ் நோய்க்கான எந்த அறிகுறியையும் ஏற்படுத்தாது என்று இந்த விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

எனவே இரத்தப் பரிசோதனை மூலம் எய்ட்ஸ் நோயை ஆரம்ப நிலையில் கண்டுபிடிப்பது என்பது சாத்தியமற்றது என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

ஆகவே மறைந்து இருந்து தாக்கும் மாய நோய் எய்ட்ஸ் ஆகிவிட்டது. ★

## பூமியதிர்ச்சிக்குப் புதிய காரணம்

உலகில் பூமி அதிர்ச்சி ஏற்படுவதற்குக் காரணம் என்ன?

இது குறித்துப் புவியியல் விஞ்ஞானிகள் ஆராய்ச்சிகள் நடத்தி வருகின்றனர்.

உலகில் 45 பெரிய அணைக் கட்டுக்கள் உள்ளன.

இத்தகைய அணைக்கட்டுக்களால்தான் பூமியதிர்ச்சி ஏற்படுவதாக புவியியல் நிபுணர் டாக்டர் கே. பி. ராத் 1868 இல் தெரிவித்தார்.

இப்போது இன்னொரு புவியியல் நிபுணர் டாக்டர் அருண்கு மாத்சிங்கும் இதே கருத்தைத் தெரிவித்திருக்கிறார். ★

## விண் - மண் - பெண்

★ மின்னுதல், இடித்தல், கண்ணீர் விடுதல் விண்ணுக்கு மட்டுமல்ல, மண்ணில் பெண்ணுக்கும் அது சொந்தம்.

★ புத்தகத்தில் உலகத்தைப் படிப்பது அறிவை வளர்க்கும். உலகத்தையே புத்தகமாகப் படிப்பது அனுபவத்தை வளர்க்கும்.

★ இரண்டு தூய உள்ளங்களை இணைப்பதுதான் காதல்! உடல்களை இணைப்பது ஒரு வகையான வெறி.

காதலை முதுமையிலும் சுவைக்கமுடியும். காமவெறியின் ஆயுள் உடலின் வலிவோடு முடிந்து விடும்.

— கலைஞர் கருணாநிதியின் 'சிறையில் பூத்த சின்னமலர்' நூலில் இருந்து: ★

## கம்பியூட்டர் பற்றி...

கம்பியூட்டர் யுகம் தோன்றி விட்டது.

எல்லாப் பணிகளையும் கம்பியூட்டர் செய்யும் காலம் வந்து கொண்டிருக்கிறது.

புதுடில்லியில் ஆய்வு நிறுவனம் ஒன்று 'அபஸ்மா டிஜிட்டல் முறை' ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறது.

இது கம்பியூட்டர்களுக்கு ஆணை பிறப்பிப்பதாகும்.

இதன் மூலம் கம்பியூட்டரில் ஒரு மொழியில் இருந்து இன்னொரு மொழிக்கு எளிதில் மொழி பெயர்க்கலாம். ★

# பஞ்சாமிர்தம் பலாசுவாமிர்தம்

## பேசினால் கிடைக்கும் தொலைபேசி அழைப்பு!

தற்போது டெலிபோன் செய்ய எண்களைச் சுழற்ற வேண்டும் அல்லது விரலால் அமர்த்த வேண்டும்.

இனிமேல் அதற்கு அவசியம் இல்லை. தொலைபேசி எண்ணைச் சொன்னால் போதும், தானாக டயல் செய்து தொடர்பு கிடைக்கும்.

இந்த அதிசய டெலிபோன் ஆஸ்திரேலியாவில் தயாராகி இருக்கிறது.

அங்கு மெல்போர்ன் நகரைச் சேர்ந்த எலக்ரோனிக் என்ஜினியர் வில்லியன் ஹோல்டன் என்பவர் குரலை அடையாளம் கண்டு கொள்ளும் கம்பியூட்டர் ஒன்றை கண்டுபிடித்து இருக்கிறார்.

அதை டெலிபோனுடன் இணைத்து விட்டால் மேற்கூறிய வசதி கிடைத்து விடுகிறது. ★

## 'தங்க'க் கடிகாரம்

கைக்கடிகாரங்கள் கண்ணைக் கவரும் விதத்தில் இப்போது தயார் செய்யப்பட்டு வருகின்றன.

ஆனால் சுமார் 60 ஆண்டுகளுக்கு முன் தங்கத்தால் கடிகாரம் செய்யப்பட்டுள்ளது.

18 காரட் தங்கத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது.

1932 இல் லாஸ் ஏஞ்சல்சில் நடத்தப்பட்ட ஒலிம்பிக்ஸ் போட்டியில் பயன்படுத்தப் பட்டது.

பின்னர் அந்தக் கடிகாரம் பயன்படுத்தப்படவில்லை.

அது காட்சிப் பொருளாகி விட்டது. ★

## ஷேக்ஸ்பியர் விசிறிகளுக்கு கிடைத்த பரிசு!

வில்லியம் ஷேக்ஸ்பியர், பிரபல ஆங்கிலக் கவிஞர். நாடகங்களை எழுதிய அவர் ஒரு நடிகரும் ஆவார்.

ரோஸ்தியேட்டரில் அவர் மேடையேறி நடித்தார்.

அந்தத் தியேட்டர் இன்னும் லண்டனில் உள்ளது.

அதற்கு அண்மையில் வந்த ஆபத்து தவிர்க்கப்பட்டது.

தியேட்டரை உடைத்து விட்டு அந்த இடத்தில் 10 மாடிக் கட்டடம் ஒன்றைக் கட்ட முயற்சிக்கப்பட்டது.

அதை ஷேக்ஸ்பியர் விசிறிகள் வன்மையாக எதிர்த்தனர். விசிறிகளின் எதிர்ப்புப் பயனளித்தது. பத்து மாடிக் கட்டடத்தை தியேட்டருக்கு அருகில் கட்டுவது என்று தீர்மானிக்கப்பட்டது. ★

## தலைவலி கொண்டு வந்த 'ஸ்குரு' ஆணி

சுவீடன் நாட்டில் ட்ரால்ஹெட்டல் நகரில் உள்ள மருத்துவமனையில் 62 வயதான ஒருவர் தலைவலிக்காக சேர்க்கப்பட்டார்.

எக்ஸ்ரே படம் எடுத்துப் பார்த்ததில் அவர் தலைக்குள் 8 மில்லிமீற்றர் விட்டமும் 25 மில்லி மீற்றர் நீளமும் உள்ள ஸ்குரு ஆணி ஒன்று இருப்பது தெரிய வந்தது.

இதை டாக்டர்கள் அவரிடம் தெரிவித்ததும் அவர் அதிர்ச்சி அடைந்தார்.

1941 ஆவது ஆண்டு தனது 14 ஆவது வயதில் நாட்டுக் கைத்துப்பாக்கி தவறுக வெடித்து விட்டதாகவும் அப்போது அதில் உள்ள ஒரு ஸ்குரு ஆணி காணமல் போனதாகவும் அவர் நினைவு கூர்ந்தார்.

அப்போது தனது மூக்கில் இருந்து ரத்தம் கொட்டிய தாகவும் டாக்டர்கள் சிகிச்சை அளித்த பின்னர் இரத்தப்பெருக்கு நின்று விட்டது என்றும் தெரிவித்தார்.

அப்போது காணமற்போன ஆணியாக அது இருக்கலாம் என்று கண்டுபிடிக்கப்பட்டது. ★

## ஆங்கிலக் கும்பகர்ணன்

இதிகாசங்களில் ஒன்றான ராமாயணத்தில் வரும் கும்பகர்ணனைப் போன்று,

ஆங்கில இலக்கியத்திலும் ஒரு கும்பகர்ணன் இருக்கிறான்.

இவன் இருபது ஆண்டுகள் தூங்கினான் என்றும்,

இவன் தூக்கத்தில் இருந்து விழித்துக் கொண்டபோது உலகமே மாறி இருந்தது என்றும் சொல்லப்படுகிறது.

அந்தக் கும்பகர்ணனின் பெயர் 'ரிப் வான் விங்கிள்' ★

## உலகின் தூணாக ...

குடியிருக்க ஒரு சிறு வீடு.

குடும்பம் நடத்த அன்பான மனைவி,

தேவைக்கு ஏற்ற வசதி, சக்திக்கு ஏற்ற உழைப்பு,

ஆசைப்படுவதை நியாயமாக அனுபவிப்பது,



அடுத்தவனுக்கு இடையூறில்லாமல் அனுபவிப்பது,

வீட்டுக்கோ, நாட்டுக்கோ தன் கடமையைச் செய்வது என்று சுயதர்மத்திற்கு ஒரு வரம்பு வைத்து வாழ்வது.

இப்படி வாழ்பவன் உலக இயக்கத்தின் தூணாகி விடுகிறான்.

— கண்ணதாசன்

## தேன் இனிக்காது

தேனீக்கள் சேர்க்கும் தேன் அனைத்துமே இனிக்குமா?

சிலவகை தேனீக்கள் சேர்க்கும் தேன் உப்புக் கரிக்கும்.

விஷயம் புதிதாக இருக்கிறது என்று திகைக்காதீர்கள்.

பிரேஸில் நாட்டில் கோயாஸ் மாநிலத்தில் இத்தகைய தேனீக்கள் ஏராளமாக இருக்கின்றன.

இவை உப்புச்சுவை உடைய தேனையே சேகரிக்கின்றன.

உப்புத் தேனைச் சேகரிக்கும் தேனீயிடம் பயமின்றி நெருங்கலாம்.

ஏனெனில் இந்தச் தேனீக்கள் யாரையும் கொட்டுவது இல்லை. ★

## பெரியார் கொடுத்த 'திருநீறு'

ஒரு சமயம்... பெரியார் ஈவேராவின் ஈரோடு இல்லத்தில் விருந்தினராக தமிழ்த் தென்றல் வி. கலியாண சுந்தரமுதலியார் தங்கியிருந்தார்.

தினமும் அதிகாலை காவேரி சென்றுகுளித்து திரும்பி வரும் போது அவருக்கு பெரியார் நெற்றியில் பூசிக் கொள்ள திருநீறுகொடுத்தார்.

இதைக்கண்டு திரு. வி. க. வியந்து பெரியாரிடம்,

'உங்களுக்கு இது ஒத்து வராதே. எப்படி?' —என்று வினவினார்.

பெரியார்: 'எனது எண்ணத்திற்கு விரோதம்தான். ஆனால் நீங்கள் இப்போது எனது விருந்தாளியாக வந்திருக்கிறீர்கள். அதனால் சொந்த விருப்பு, வெறுப்புக்களை விட்டு விருந்தாளியை உபசரித்து மனம்கோணமல் அனுப்புவதுதான் தமிழர் பண்பாடு' என்றார்.

பெரியார் பெரியார்தான். ★

## ஆலமரம் கூறிய அறிவுரை!

ஒரு நாள் ஏழு தீவுகளைச் சேர்ந்த ஏழு ரிஷிகள் விசாலமானதோர் ஆலமரத்தின் அடியில் சந்தித்தனர். பிரார்த்தனை நேரம் நெருங்கவே,

'இறைவனிடம் என்ன வேண்டலாம்' என்று யோசித்தனர்.

'உணவு கேட்கலாம், உணவின்றி வாழ்க்கை இல்லை' என்றார் ஒருவர்.

'ஊஹூம், பலம் கேட்கலாம். உடல் வலுவின்றி உணவு உண்டாகாது' என்றார் இரண்டாமவர்.

வலிமையைக் காட்டிலும் அறிவை வேண்டுவதே நல்லது. அறிவினாலே எந்தக் காரியத்தையும் சாதித்து விடலாம்' என்றார் மூன்றாமவர்.

'அறிவைக் காட்டிலும் அமைதியை வேண்டுவதே நலன் பயக்கவல்லது. அமைதியின்றித் தவிக்க நேர்ந்தால் எந்தக் காரியத்தைத்தான் உருப்படியாகச் செய்ய முடியும்? என்று கேட்டார் நான்காம் நபர்.

அமைதியைக் காட்டிலும் அன்பை வேண்டுவது மேல். அன்பு இன்றி அமைதி கிட்டாது' என்று மறுத்தார் ஐந்தாமவர்.

'என்னைக் கேட்டால் அன்பைக் காட்டிலும் தியாகத்தை வேண்டுவதே நல்லது. தியாக உணர்வு இன்றி அன்பு உறுதிப்படாது' என்றார் ஆறுமவர்.

'சிரத்தையை வேண்டுவது தான் சாலச் சிறந்தது. சிரத்தை இன்றித் தியாக உணர்வு எப்படி ஏற்படும்? என்று கேட்டார் ஏழாமவர்.

பிரார்த்தனைக்கு நேரமாவதைக் கண்ட ஆலமரம் கனிவோடு கூறியது,—

'வீண்பேச்சில் எதற்காக நேரத்தைச் செலவிடுகிறீர்கள்? முதலில் பிரார்த்தனை செய்யுங்கள். எது வேண்டுமானாலும் கேளுங்கள். கேட்பதைக் காட்டிலும் வேண்டியதைக் கொடுக்க அவன் இருக்கிறான்' ★

தொகுப்பு: க. கனகராசா

## புகழுவதற்கு எல்லையே இல்லையா?

கலைஞரின் 66 ஆவது பிறந்த தினவிழாவை ஒட்டி சென்னை மரீனா கடற்கரையில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

பேச்சாளர்கள் எல்லாம் கலைஞரை தலைக்குமேலே தூக்கிவைத்து புகழ்ந்துபேசினர்.

தி. மு. கவுடன் கூட்டு வைத்து கடந்த தேர்தலில் போட்டியிட்ட நேச கட்சிகளின் பிரமுகர்களும் பேசினர்.

அவர்களின் பேச்சுக்களில் இடம்பெற்ற சுவையான அம்சங்களை 'கூட்டாளிகளின் ஜால்ரா' என்ற தலைப்பில் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகை பிரசுரித்து கிண்டல் பண்ணியது.

தமிழ்நாடு போர்வோர்ட் புளொக் கட்சி எம். எல். ஏ. பி. என். வல்லரசு:

அகில உலகமுமே கலைஞரைப் புகழ்கிறது. அமெரிக்காவில் வெளியாகும் 'டைம்ஸ் ஒப் அமெரிக்கா' என்ற பத்திரிகை கலைஞரின் சாதனையை புகழ்ந்திருக்கிறது.

(அப்படி ஒரு பத்திரிகை அமெரிக்காவிலே பிரசுரமாவதில்லை. கடவுளுக்கும் வல்லரசுக்கும்தான் தெரியும் அமெரிக்காவில் அப்படி ஒரு பத்திரிகை வருகிறதா என்பது பற்றி)

தி. க. பொதுச்செயலாளர் திரு. கி. வீரமணி:

100 தினங்களில், தேர்தல் வாக்குறுதிகளில் 75 சதவீதத்தை பூர்த்திசெய்து சாதனைபுரிந்த கலைஞரின் பெயர் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பெறப் போகிறது.'

முன்னாள் அமைச்சர் அன்பில் தர்மலிங்கத்தின் பேச்சை அவரது மகன் அன்பில் பொய்யாமொழி வாசித்தார்.

அதில்— பெரியார், அண்ணா, ராஜாஜி, காமராஜர் காயிதே மில்லத் ஆகிய அனைவரும் சேர்ந்த உருவமாக கலைஞர் இன்று இருக்கிறார்'— என்று கூறப்பட்டிருந்தது.

முன்னாள் எம்பி சி.ரி. தண்டபாணி.

ரோமுக்குச் சென்று கலைஞர் பாப்பாண்டவரைத் தரிசித்தார். பல ஆண்டுகளுக்கு முன்னர் அப்போது பாப்பாண்டவர் கலைஞரை வாயாரப் புகழ்ந்தார்'—

புகழுவது என்றாலும் இப்படியா இல்லாததையும் பொல்லாததையும் சொல்வது என்று கேட்டுள்ளது' இந்தியன் எக்ஸ்பிரஸ்' ★

## 'ஜுபிடர்' வீராங்கனை

ஜுபிடர் கிரகம் பற்றி ஆராய்ச்சி நடத்த அமெரிக்கா அடுத்த மாதம் 'கலிலியோ' என்ற ரொக்கெட்டை அனுப்பவுள்ளது.

அது அட்லாண்டிஸ்' விண்வெளி மூலம் ஏவப்படும்.

இதில் அமெரிக்க விண்வெளி வீராங்கனை ஷொனலூசிட் பெரும் பங்கு வகிக்கிறார்.

இது அவரின் இரண்டாவது விண்வெளிப்பயணம் மேற்கொள்கிறார்.

இவர் முதன்முறையாக 1985 இல் விண்வெளி சென்று திரும்பினார்.

## பேரர்கள் அணி சேர்ந்தால் பேர ஊழல் மறைந்து விடுமா?

இந்திய நாடாளுமன்றத் தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ளன.

அரசியல் கட்சிகள் அணி சேர்வது தீவிரமாக நடந்து வருகிறது.

போட்டி தவிர்ப்பு உடன்படிக்கைகளை உருவாக்குவதிலும் சில அரசியல் கட்சிகள் ஆர்வம் காட்டிவருகின்றன.

எதிர்க்கட்சிகளின் ஒருமுனைத்தாக்குதலை இந்திரா காங்கிரஸ் அடுத்த தேர்தலில் சமாளிக்க வேண்டியிருக்கும் போல்தெரிகிறது.

இதனால் அரிசன மக்களின் பூரண ஆதரவைப்பெற இந்திரா காங்கிரஸ் தலைமைப் பீடம் முயன்றுவருகிறது.



ராஜீவ் காந்தி

நாட்டின் சுதந்திரப் போராட்டத்தில் முன்னணியில் நின்றவர் டாக்டர் அம்பேத்கார்.

இந்திய அரசியல் யாப்பைத் தயாரித்தவர்.

அவரின் பேரன் பிரகாஷ் அம்பேத்கார்.

இவரை இந்திரா காங்கிரஸில் சேர்க்க தீவிர முயற்சி மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

தந்தையார் ஆரம்பித்த குடியரசுக் கட்சியின் தலைவராக இருக்கும் பிரகாஷ் அம்பேத்காரை இந்திராகாங்கிரஸில் சேர்ப்பதுடன் அவருக்குக் கட்சியில் முக்கிய பதவி ஒன்றையும் கொடுக்க முயற்சிக்கப்படுகிறது.

பேரனர் மீண்டும் ஆட்சிக்கு வர இன்னொரு பேரனின் துணை நாடப் படுகின்றதா?

பேரர்கள் ஒன்றுசேர்ந்தால் போபேஸ் பேர ஊழல் மறைந்துவிடுமா?

இப்படி புதுடில்லி வட்டாரங்களில் கேட்கப்படுகிறது. ★

## விஞ்ஞான ஆய்வில் 'இமாலய' மோசடியா?

பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் புவியியல் விஞ்ஞானி டாக்டர் வி. ஜே. குப்தா.

இவர் இமயமலை அடிவாரத்தில் புதைந்து கிடக்கும் புராதன மிருகங்களின் எலும்புக் கூடுகள் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்தார்.

பல ஆண்டுகளாக அவரது ஆராய்ச்சி இடம் பெற்று வந்தது.

எலும்புக்கூடுகளை கண்டுபிடித்து அவை புராதன காலத்தவை என்று அவர் கட்டுரைகளை எழுதி வந்தார்.

குப்தாவின் ஆய்வுகள் எல்லாம் வெறும் 'கப்சா' க்கள் என்றும் புகார் எழும்பியது.

அவர் கண்டு பிடித்த எலும்புக்கூடுகள் எல்லாம் புராதன காலத்தவை அல்ல என்றும் கூறப்பட்டது.

இக்குற்றச்சாட்டுக்கள் எல்லாம் ஆதாரமற்றவை என்றும் பொறாமை காரணமாக இப்படிக் கூறப்படுகிறது என்றும் டாக்டர் குப்தா கூறினார்.

விஞ்ஞான ஆய்வுகளில் மோசடி இடம் பெருமல் தடுக்கும் முகமாக மூன்று ஆண்டுகளுக்குமுன் விஞ்ஞான ஆய்வு பாதுகாப்புச் சங்கம் ஒன்று அமைக்கப்பட்டது.

குப்தாவின் ஆய்வில் மோசடி இடம்பெற்றுள்ளதா என்பதை ஆய்வு நடத்தி தெரிவிக்கும்படி ஆஸ்திரேலிய விஞ்ஞானி பேராசிரியர் ரலண்ட் என்பவரின் உதவியை இச்சங்கம் நாடியிருக்கிறது. ★

## அண்ணல் மறைவை அழுதழுது அறிவித்தவர்

30 – 1 – 1948 மாலைபிரார்த்தனைக்குச் செல்லும்போது அண்ணல்காந்தி கோட்சேயினால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அன்று மாலை இந்திய வானொலியில் அண்ணலின் மறைவு அறிவிக்கப்பட்டது. அழுது அழுது அத் துக்ககரமான செய்தியை சொன்ன பிரபல இந்திய வானொலி அறிவிப்பாளர் மெல்விலி டிமெல்லோ தனது 76 ஆவது வயதில் மரணமானார்.

காந்திஜியின் இறுதிக்கிரியைகள் பற்றிய வர்ணனையை ஒரு நிமிடம்கூட விடாமல் தொடர்ந்து ஏழரை மணித்தியாலங்கள் டிமெல்லோ நடத்தி சாதனைபுரிந்தார்.

மௌலானா அபுல்கலாம் ஆஸாத், ஜவஹர்லால்நேரு, லால்பகதூர் சாஸ்திரி, டாக்டர் சாகிர் உசேன் ஆகியோரின் இறுதிச் சடங்குகள் பற்றிய வர்ணனையும் இவரே நிகழ்த்தினர். ★

## பொன் மொழி

நம் வாழ்வின் மிக முக்கியமான குறிக்கோள் இன்பமாய் இருப்பது அல்ல......

அப்படியானால் — அதை அடைவதற்கு எல்லா வகையிலும் தகுதியுடையவராய் இருப்பதே.

— ஈ. எச். பிக்டே

## பறக்கும் தட்டு ஏற்படுத்திய பயங்கர ரயில் விபத்து

கடந்த ஆண்டு ஜூலை மாதம் 8 ஆம் திகதி......

பெங்களூர் திருவனந்தபுரம் ஐலண்ட் எக்ஸ்பிரஸ் ரயில் குயிலன் அருகில் பெருமன் பாலம் மீதாகச் சென்று கொண்டு இருக்கிறது.

திடீரென்று பாலத்தில் ஓடிக்கொண்டு இருந்த ரயில் ஆற்றில் பாய்ந்து விழுகிறது.

இவ் விபத்தில் 106 பேர் உயிரிழந்தனர்.

விபத்து ஏற்படக்காரணம் என்ன என்பது பற்றி விபத்து நடந்த நாள் தொடக்கம் ரயில்வே அதிகாரிகளும் பொலீஸாரும் ஆராய்ந்து வந்தனர்.

சரியான காரணத்தைக் கண்டு பிடிக்கமுடியாமல் இருந்தது.

பௌதிகவியல் விஞ்ஞானி டாக்டர் சுவதேஷ் குமார் த்ரிகா கடைசியாக இந்த ஆராய்ச்சியில் இறங்கினர்.

விபத்து நடந்த இடத்தை சென்று அவர் பார்வையிட்டார்.

புதிய, திகைக்க வைக்கக் கூடிய காரணம் ஒன்றை அவர் தனது ஆய்வின் முடிவில் வெளியிட்டிருக்கிறார்.

காரணத்தை நம்பினால் இனி ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டுதான் ரயிலை ஓட்டவேண்டிய நிலை வரும்.

பாலத்தின் மீது ஓடிக்கொண்டிருந்த ரயிலின் முன்னால், பறக்கும் தட்டு ஒன்று குறுக்காகச் சென்றதே விபத்துக்குக் காரணம் என்று அவர் கூறுகிறார்.

சூழல் புற யுத்தம் ஒன்றுக்கான பரிசோதனைகளை 'பறக்கும் தட்டுக்கள்' நடத்தி வருவதாகவும், சம்பவதினம் ரயில் முன்னால் குறுக்காகச் சென்ற பறக்கும் தட்டும் அப்பரிசோதனையின் ஒரு கட்டம் என்றும் டாக்டர் த்ரிகா கூறுகிறார்.

துரதிஷ்டவசமாகப் பறக்கும் தட்டுக்கள் இந்தியாவை பரிசோதனைத் தளமாக்கி விட்டன போல் தெரிகிறது என்றும் அவர் தெரிவிக்கிறார். ★

## 27 போர் விமானங்களை சுட்டு வீழ்த்தியவர்

இரண்டாம் உலக யுத்தத்தின்போது ஜேம்ஸ்ஜின்சர் லவி என்ற விமானப் படை வீரருக்கு வயது 23.

இங்கிலாந்து விமானப் படையில் சேர்ந்து பணியாற்றிய இவர் இங்கிலாந்துக்கும் ஜேர்மனிக்கும் இடையே நடந்த சண்டையின்போது வீரதீர சாகசச் செயல்களைப் புரிந்தார்.

27 எதிரி விமானங்களை இவர் அப்போது சுட்டு வீழ்த்தினர்.

லண்டனில் உள்ள பக்கிங்ஹாம் அரண்மனை மீது குண்டு வீசிவிட்டு திரும்பிய ஒரு போர் விமானத்தையும் அவர் வீழ்த்தினர். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் பயில்வோம்

## கல்விப் பொதுத்தராதர (சாதாரண) தரப்பரீட்சை

## இந்துசமயம் 1

எல்ல வினக்களுக்கும் விடைதருக:-

1 தொடக்கம் 17 வரையுள்ள ஒவ்வொரு வினவுக்கும் (அ) (ஆ) (இ) (ஈ) என இலக்கம் இடப்பட்ட விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சரியானது அல்லது மிகப் பொருத்தமான என நீ கருதுவதனைத் தெரிவு செய்து விடைத்தாளில் நீர் தெரிந்த விடைக்கு நேரே கீறிடுக.

1. சிந்துவெளி நாகரிககாலத்தில் நிலவியது
(அ) சிவ வணக்கம் (ஆ) விஷ்ணு வணக்கம்
(இ) சக்தி வணக்கம் (ஈ) முருக வணக்கம்
2 முன்னேச்சரத்தில் உள்ள அம்பாளின் பெயர்
(அ) வடிவாம்பிகை (ஆ) கௌரியம்மை
(இ) மாதுமையாள் (ஈ) மீனுட்சி
3. மணிவாசகர் கடைப்பிடித்த மார்க்கம்
(அ) சரியை (ஆ) கிரியை
(இ) ஞானம் (ஈ) யோகம்
4. திருஞானசம்பந்தரின் தாயார் பெயர்
(அ) இசைஞானியார் (ஆ) பகவதியார்
(இ) மாதினியார் (ஈ) சிவஞானவதி
5. சரியை மார்க்கத்தில் நின்று அனுஷ்டிப்பதால் அடையும் முத்தி
(அ) சாரூபம் (ஆ) சாயுச்சியம்
(இ) சாமீபம் (ஈ) சாலோகம்
6. திருவாலவாயார் திருநீற்றுப் பதிகம் பாடிஅருளியவர்
(அ) சுந்தரர் (ஆ) திருஞானசம்பந்தர்
(இ) அப்பர் (ஈ) திருநாவுக்கரசர்
7. திருநாவுக்கரசு நாயனரின் பிள்ளைத்திருநாமம்
(அ) அப்பர் (ஆ) மருணீக்கியார்
(இ) உழவாரப்படையாளி (ஈ) தருமசேனர்
8. சிந்துவெளி நாகரிககாலம்
(அ) 5000 ஆண்டுவரை (ஆ) கி. மு.5000 ஆண்டுவரை
(இ) கி.பி 5000ஆண்டுவரை (ஈ) கி. மு. 500 ஆண்டுவரை
9. சித்தாந்த சாத்திர நூல் ளை அருளிச் செய்யாத சந்தான குரவர்
(அ) மெய்கண்டதேவர் (ஆ) உமாபதிசிவம்
(இ) மறைஞானசம்பந்தர் (ஈ) அருணந்திசிவம்
10. வேதாரணியத்தில் திருக்கதவு அடைக்கப் பாடிய தேவாரம்
(அ) பண்ணினேர்மொழியாள் (ஆ) வேயுறுதோழிபங்கன்
(இ) சதுரம் மறை (ஈ) மந்திரமாவது நீறு
11. எதிரிலாத பக்தி என்று தொடங்கும் பாடல்
(அ) திருப்புகழ் (ஆ) திருமந்திரம்
(இ) திருவாசகம் (ஈ) திருப்பல்லாண்டு
12. நாவலர் பெருமானின் தந்தை தாயார் பெயர்
[அ) சடையனர் இசைஞானியார்
(ஆ) கந்தப்பிள்ளை சிவகாமி அம்மை
(இ) சவிப்பகையார் திலகவதியார்
(ஈ) அச்சுதகளப்பாளர் மங்களாம்பிகை
13. ஆவணி மாதத்தில் வரும் வளர்பிறை நான்காம் நாள் அனுஷ்டிக்கப்படும் விரதம்
(அ) சிவபெருமானுக்குரியது (ஆ) விநாயகருக்குரியது
(இ உமாதேவியாருக்குரியது (ஈ) முருகனுக்குரியது
14. உமாபதி சிவாச்சாரியார்
(அ) சகலாகம பண்டிதர் என்று பாராட்டப்பட்டார்
(ஆ) தாண்டகவேந்தர் என்று அழைக்கப்பட்டார்
(இ) பரசமயகோளரி என்று போற்றப்பட்டார்
(ஈ) பட்டகட்டையில் பகற்குருடு என்று கூறப்பட்டார்
15. சிவபெருமானின் அருவத்திருமேனிகள்
(அ) சிவம், சக்தி, நாதம், விந்து
(ஆ பிரமா, விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன்
(இ) குரு, லிங்கம், சங்கமம்
(ஈ) அருவம். உருவம், அருவுருவம்
16. கொடிக்கவி என்னும் நூலைச் செய்தருளியவர்
(அ) மெய்கண்டதேவர் (ஆ) உமாபதி சிவம்
(இ) திருமூலர் (ஈ) மணிவாசகர்
17. திருவாதிரை விரதம்
(அ) விஞயகரைக் குறித்து அனுஷ்டிக்கப்படுவதாகும்
(ஆ) தேவியைக் ,, ,,
(இ) சுப்பிரமணியரைக் ,, ,,
(ஈ) நடராஜப்பெருமானைக் ,, ,,

விடைகள்:

| | | | |
|---|---|---|---|
| 1. [அ] | 2. [அ] | 3. [இ] | 4. [ஆ] |
| 5. [ஈ] | 6. [ஆ] | 7. [ஆ] | 8. [ஆ] |
| 9. [இ] | 10. [இ] | 11. [அ] | 12. [ஆ] |
| 13. [ஆ] | 14. [ஈ] | 15. [அ] | 16. [ஆ] |
| 17. [ஈ] | | | |

ஆக்கம்: **இளங்கலைஞர்**

## வண்ணத்துப்பூச்சி

வண்ண வண்ணப் பூச்சி
வண்ணத்துப் பூச்சி
அழகுச் செட்டை இரண்டு
அடித்துப் பறக்கும் பூச்சி

பூவில் உள்ள தேனை உண்டு
களிப்பாய் பறக்கும் பூச்சி
கவலை ஏதும் இல்லையா...?
அம்மா அப்பா அடிக்காரா ..?

உன்னைத் தானு நானும்
பிடித்துப் பிடித்து மகிழ்வேன்
அகப்பட்டுக் கொண்டாயா
தப்புவது சிரமம்.

தூர இடங்கள் எல்லாம்
பார்க்க எனக்கும் ஆசை
உந்தன் முதுகில் என்னை
ஏற்றிக் கொண்டு செல்வாயா...?



- கலைமகள் திருநாவுக்கரசு

# கணவனை மதித்து நடப்பதன் மூலம் மனைவியின் உரிமை பேணப்படும்!

இன்றைய நாகரிக உலகில் பெண்கள் தமது உரிமைகளைப் பெற அரும்பாடுபட்டுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் பெண்களின் உரிமை பற்றியும், அவர்கள் எந்நிலையில் உள்ளவர்கள் என்பது பற்றியும், அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய அந்தஸ்துப் பற்றியும் இஸ்லாம் என்ன கூறுகின்றது என்பதைக் கவனிப்போம்.

இஸ்லாமிய மார்க்கத்தில் மனைவி என்பவர் வெறும் அடிமையாகவும், கணவனின் கைப்பொம்மையாகவும், கணவனின் வீட்டு வேலைக்காரியாகவும் மதிக்கப்படக் கூடாது.

இஸ்லாம் மனைவியின் அந்தஸ்துப் பற்றிக் கூறும்போது மனைவி கணவனின் வீட்டுக்கு அரசியைப் போன்றவள். ஒரு மனைவி நல்ல குணமுடையவளாயின் வீடு சுவர்க்கம் தான்.

நல்ல மனைவியானவள் தன் கணவன் கெட்டவனுக இருப்பின் அவனை நல்வழிப்படுத்தி (மலக்குகளின்) அல்லாஹ்வின் அமரர்களின் அந்தஸ்துக்கு உயர்த்தும் தன்மையும் உடையவள். ஆகவேதான் மனைவி கணவனின் விலை மதிக்கமுடியாத பொருள்.

கணவன் வெளியிற் செல்லும்போது கணவனின் சொத்துக்கள், அவனின் பிள்ளைகள், வீடு, ஏனைய பல பொருட்களையும் கணவன் வரும்வரை பாதுகாத்துக் கொடுக்கும் பொறுப்பும் அம் மனைவியுனுடையதே.

எனவே மனைவிமார்களுக்கு உரிய அந்தஸ்துக் கொடுத்து அவர்களின் உரிமைகளைப் பேணிக் காப்பது கணவனின் பொறுப்பாகும்.

இவ்வகையில் மனைவியை நல்ல முறையில் பேணிக் காக்க மனைவியின் பங்களிப்பு மிகவும் அவசியமானதே.

மனைவி தன் கடமையைச் சரிவர நிறைவேற்றிய தன் பின்னரே தன் உரிமையைக் கணவனிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

மனைவி கடமைகளில் தவறும்போது கணவனும் அவளின் உரிமைகளைச் சரிவர நிறைவேற்றத் தயங்குவானல்லவா? ஒரு புலவர் கூறுவது போன்று,

சேமப் பொருளிற்
சிறந்ததை நீர்
தெரியத் தெரிக்க
வேண்டாவோ
நாமப்புரைதீர் நல்லொழுக்க
நங்கையே பொருள்
இவள் தன் காமக்கணவன்
நோக்கின் களிப்பூட்டிடுவாள்
நேமத்தொடுசேய்
சொத்தையவன்
நில்லாவிடத்துக்
காப்பாளே!

அவள்தான் சிறந்த பெண் என அப்புலவர் கூறுகின்றார். நபிகள் (ஸல்) அவர்களும் கூறும்போது,

'நல்ல மனைவியானவள் தன் கணவன் அவனை நோக்கின் மகிழ்விப்பாள். அவனின் கட்டளைகளை ஏற்று நடப்பாள். அவர் வெளியில் செல்லும்போதெல்லாம் அவனின் உடைமைகளைப் பாது காப்பாள்.

எனவே பெண்கள் இத்தகு செயல்களில் கண்ணுங்கருத்துமாக இருந்து கருமமாற்ற வேண்டும்.

பெண்களாகிய நாம் எமது உரிமைகளைப் பெறுதற்குக் கணவனைக் கண்ணென மதித்து நடத்தல் அவசியமாகும். ★

- ஏ. எம். எஸ். பௌசியா -



## இலக்கியப் பெண்

நெஞ்சே நீ துணிந்து நில்லாய்
நம் பெண்ணின் பெருமை கூறுய்

பெண்களை பேய்கள் என்போர்க்கு
பெற்றவளும் பெண்என்று உணர்த்தவேண்டும்

வீடுகாக்கும் பெண்ணின் செயல் – ஏற்று
வீடும் நாடும் போற்ற வேண்டும்

சமைக்கும் கைகளும் – இங்கு
சரித்திரம் படைக்க வேண்டும்

இலக்கிய பெண்ணுக்கு – ஓர்
இலக்கணம் நீஎன உலகம் சொல்லவேண்டும்;

—ஜனரவி

## புக்ககம் செல்லும் பெண்களுக்கு...

புக்ககத்தில் தைரியமாக இரு. பயப்படாதே. ஒட்டுக் கேட்காதே. பிறர் கடிதங்களை உடைத்துப் பார்க்காதே. மனதில் உள்ளதை நேரில் சொல்லி விடு. மனதில் வைத்து உருகுவதை விட வாயினுல் சொல்லிவிடுவது நல்லது.

உன்னுல் முடிந்தளவு புக்ககத்தில் உள்ளவர் சொல்கிறபடி நட. முடியாவிட்டால் விஷயத்தை எடுத்துச்சொல்லி விடு மறைக்காதே...! அதில் நன்மை உண்டு.

உன்னை விலை கொடுத்து அவர்கள் வாங்கவில்லை. அவர்கள் வீட்டை நன்றுக விளங்க வைத்து விருத்தி செய்யப் போகிறுய். அந்த வீட்டில் உனக்குப் பூரண உரிமை உண்டு.

அதற்காகப் பணம் காசு விஷயங்களில் தலையிடாதே. அதைப் பெரியவர்களுக்கு விட்டு விடு.

வேலை செய்யப் பின் வாங்காதே: அதற்காகச் சக்தி மீறிச்செய்யாதே. செய்வதை உன் மனம் ஒப்பச் செய்.

— பாரதியார்

## அன்ருட வாழ்வில்....

1; சோயா காப்பி குடியுங்கள். சுக்கு காப்பி அருந்துங்கள்.

2. மிக்சியில் இட்டுச் சாறு பிழியாமல் பழங்களை அப்படியே உண்டு விற்றமின்களைப் பெறுங்கள்;

3: கொதித்து ஆறிய நீரைக் குடியுங்கள்.

4. வாசனைப்பொருள்களைக் குறைவாகப் பயன்படுத்துங்கள்.

5: வெள்ளைச் சர்க்கரையை படிப்படியே குறைத்து விடுங்கள்.

6. உப்பினையையும் மிளகாயையும் குறையுங்கள்., எண்ணெயைக் குறையுங்கள்;

தொகுப்பு: க. கனகராசா

# வெறிநாய்க்கு சரமகவி பாடிய கோல்ட் ஸ்மித்

அயர்லாந்தில் உள்ள பல்லாஸ் என்னும் கிராமத்தில் 1728 ஆம் ஆண்டு பிறந்தவர் ஒலிவர் கோல்ட் சிமித். (Oliver Goldsmith)

இவர் 18ம் நூற்றுண்டின் தலை சிறந்த இலக்கிய கர்த்தா. ஓர் எழுத்தாளர், கவிஞர்.

இவர் தந்தையார் ஒரு மதகுரு. இவர் டாக்டர் பட்டம் பெற்றவர். இவர் ஔவையாரைப் போலக் கூழுக்குப் பாடி. வறுமை இவரை விட்டு ஒரு போதுமே பிரிந்தது கிடையாது.

இவரது சிறிய தந்தையார் இவருக்குப் படிப்பதற்குப் பண உதவி செய்தார். ஆனுல் கையில் கிடைத்ததைச் செலவு செய்து விட்டு சீக்கிரமே ஆண்டியாகி விடுவார்.

கிராமங்களின் முன்னுல் புல்லாங்குழல் இசைத்து அவர்கள் கொடுக்கும் வருவாயில் இருந்து சீவியம் செய்த நாட்களும் உண்டு. மிகவும் இரக்ககுணம் படைத்தவர். ஒரு முறை வறிய முதியவர் ஒருவருக்குத் தன்னிடமுள்ள ஒரே ஒரு போர்வையைக் கொடுத்துவிட்டுப் பின்னர் குளிரால் வாடிய போது கட்டிலில் உள்ள மெத்தையைக் கிழித்து அதனுள் நுழைந்து படுத்தவர்.

வீட்டு வாடகை கொடுக்காததால் இவர் ஒரு முறை கைது செய்யப்பட்டுக் கடன்காரர் சிறையில் அடைபட்டவர்.

இச் சந்தர்ப்பத்தில் இவரது நண்பர் டாக்டர் ஜோன்சன் (Dr. Jhonson) என்பவர் இவரது நாவலான The Vicar of Wakefield என்ற பிரபலமான நாவலைவிற்றுச் சிறை மீட்டார்.

இவரது கோட்டில் தோள் பட்டையில் ஓட்டை விழுந்தது. இதனை மறைப்பதற்காக தனது தொப்பியை அதன்மீது வைத்துக்கொள்வார். இளமையில் சிலவேளைகளில் தனது புத்தகங்கள், உடைகள் ஆகியவற்றை அடகுவைத்துச் சீவியம்செய்த நாட்களும் உண்டு.

**ஆங்கிலக் கவிஞர் வரிசையில்**

எதிர்காலச் சிந்தனையின்றி கையிற் கிடைத்த பணம் எல்லாவற்றையும் வண்ண வண்ண ஆடைகள் வாங்குவதிலும், ஏழைகளுக்கு அள்ளிக் கொடுப்பதிலும் செலவிடுவார். இவரைப்பற்றி டாக்டர் ஜோன்சன் குறிப்பிடும்போது 'He wrote like angel and Talked like poor Paul' என்று குறிப்பிடுகிருர்' வேருெரு இடத்தில் Oliver Gold Smith was a plant that flowered late'...என்கிருர்.

இவரதுசிறந்த ஆக்கங்களில் The Vicar of wakefield, she Stooped to conquer traveller Deserted village என்பனகுறிப்பிடக்கூடியனவாகும்.

- உதங்கா -

நகைச்சுவைமிக்க ஆனுல் கருத்தாழம்மிக்க சில தனிப் பாடல்களும் பாடியிருக்கிருர்.

வெறிநாய்க்கு ஒரு சரமகவி (An eulogy on the death of a mad dog) பாடினுர். அந்தக் கவிதை கருத்தாழமும் நகைச்சுவையும் மிக்கது.

அக்கவிதையில் ஊரில் சிறந்தவர் எனக் கருதப்படும் பெரியோர்களை விமர்சிக்கும் வகையில் அமைந்துள்ளது: அதன் சாரணத்தைப் பார்க்கலாம்.

ஒலிஸ்ரன் நகரில் ஒரு மகான் வாழ்ந்து வந்தார். இப்படியும் ஒரு சிறந்த மனிதர் உண்டா? என்று ஊரவர் பேசிக் கொண்டனர்.

தேவனைப் போன்ற இயல்புள்ளவர்கள் உலகில் இன்னமும் உள்ளனர் என்று துணிந்து கூறுமளவுக்கு உத்தம குணம் படைத்தவர்.

கருணை இரக்கம் உள்ளவர், நீதி நியாயம் தெரிந்தவர், எதிரியையும் நண்பனையும் நேசித்து ஆறுதல் கொடுப்பவர். இப்படியான சிறந்த இயல்புடைய இவரை ஊரவர் மிகவும் நேசித்தனர்.

நகரில் பலவிதமான மனிதர்கள் இருப்பதுபோல், பலவிதமான நாய்களும் இருந்தன. அதில் ஒரு நாயைப் பற்றி விசேடமாகக் குறிப்பிட வேண்டும்.

இந்த நாயும் அந்த மனிதனும் ஆரம்பத்தில் சிறந்த நட்புப் பூண்டிருந்தனர். ஆனுல் சயமரியாதைப் பங்கம் ஏற்பட்ட பொழுது நாய் வெறிகொண்டு அந்த மனிதனைக் கடித்துவிட்டது.

ஊரவர் பதறினர், பரிதவித்தனர். இவ்வளவு சிறந்த மனிதனைக் கடிக்க மனம் வந்ததே: இதற்கு புத்திகெட்டும் பைத்தியம் தான் பிடித்திருக்கவேண்டும். காயம் மிகவும் அபாயகரமாயும் கவலைப்படக்கூடியதாகவும் இருந்தது.

'நிச்சயமாக இந்த நல்ல மனிதன் இறந்தே விடுவான்' என்று ஆணையிட்டுக் கூறினர்.

ஆனுல் யாவரும் அதிசயிக்கத்தக்க வகையில் ஓர் அற்புதம் நடந்தது. இந்தப் போக்கிரிமனிதர்கள் கூறுவதெல்லாம் பொய். உண்மையை மனிதர்கள் கண்டறிவதே இல்லை என்பதைப் புலப்படுத்திவிட்டது அச்சம்பவம்.

மனிதரின் காயங்கள் யாவும் ஆறி ஆள் பிழைத்துக் கொண்டார். ஆனுல் சில நாளில் நாயோ இறந்துவிட்டது. அதற்காக எவரும் கண்ணீர் விடவில்லை.

மனிதனின் எடைபோடும் ஆற்றல்! இவ்வளவுதானு? என்று கிண்டல் பண்ணுகிருர் ஒலிவர் கோல்ட் சிமித். ★

## பாரதியார் வாழ்வில் ....

கொஞ்சம் பைத்தியம் அந்தப்பையனுக்கு. அவன் பாரதியாரின் கண்களிலே பட்டுவிட்டான்.

ஆனுல் அவன் அதிகமாக ஊளறுவதில்லை எப்போதும் விழிகளை மருள உருட்டியபடி பேசாமல் உட்கார்ந்திருப்பான். அவனிடம் பாரதியாருக்கு பரிதாபம் ஏற்பட்டது.

அவனைத் தன்னேடு அழைத்துவந்துவிட்டார் பாரதியார். பையனுக்குள்ள மனப்பிரமையை எப்படியாவது போக்கிவிடுவது என்பது அவரதுமுடிவு.

'பைத்தியம் என்பது மனதைப்பிடித்த நோய்தானே...? எப்படியும் போக்கிவிடலாம்' என எண்ணினுர் பாரதியார்.

அவனைத் தொட்டுக் கொண்டேயிருப்பார். தன் கையாலேயே உணவூட்டுவார். அவனைப் படுக்கவைத்துக் கொள்ளுவார் அடிக்கடி,

'என் ராஜா...! என் கண்ணு! என்று அவனை அழைப்பார். அவனுக்கு எப்போதும் அரச உபசாரம்தான்!

இப்படி அவனிடம் பாரதியார் இருக்கிறுரே என்று ஒருவருக்கு ஒருவர் பேசிக் கொள்ளலாம். என்ன [illegible] ருலும் அவனுடைய பைத்தியம் தெளியாது என்று முடிவுகட்டுவோம்.

பாரதியார் இல்லாதநேரத்திலே எங்களுக்குள், ஒருவருக்கொருவர்,

'என்ன கண்ணு! என்ன ராஜா...! சாப்பிட்டியா... தங்கமே? என்று பேசி மிகவும் நையாண்டி செய்துகொள்ளுவோம்...!

ஆனுல், பாரதியார் தன் நம்பிக்கையைச் சிறிதும் இழக்காமல் பைத்தியக்காரச் சிறுவனுக்கு அபுச் சிகிச்சை அளித்துவந்தார்.

நம்பிக்கை இல்லாமல் நையாண்டிசெய்துவந்த எங்களையே கடைசியில் பாரதியார் அடிமுட்டாள் ஆக்கிவிட்டார்.

பையனுடைய சித்தப்பிரமை சிறிது சிறிதாகத் தெளிந்து நல்லபடியாகப் பேசவும் நடக்கவும் ஆரம்பித்துவிட்டான்.

பாரதியார் ஆனந்தமடைந்தார். ஆனுல் வெற்றிபெற்றேும் என்ற அகமபாவக் குறி எதையும் அவர் முகத்திலோ நடையிலோ நாங்கள் காணவில்லை...!

[illegible] புத்தகத்தில் வ. ரா. இப்படி எழுதியிருக்கிருர். ★

## உங்களுக்குத் தெரியுமா?

1. உலகில் பரப்பளவில் பெரிய நாடுகள் எவை?
2. பெரிய எரிமலைகள் உள்ள நாடு எது?
3. ஆயிரம் அறைகளுக்கு மேலுள்ள அரண்மனை எது?
4 நூற்றுக்கணக்கான வாய்க்கால்கள் உள்ள நகரம் எது?
5. தெருவிளக்கை ஏற்றிய முதல் ஐரோப்பிய நகரம் எது?
6. ஒரு கன அடி கொங்கிறீட்டின் நிறை என்ன?
7. கத்தரிக்கோலை முதலில் உபயோகித்தவர்?
8. ஒரு பைன் மரத்தில் செய்யக்கூடிய நெருப்புக்குச்சிகள் எவ்வளவு?
9. தேன் மெழுகு செய்வதற்கு வேண்டிய மூலப் பொருள் என்ன?
10. எறும்பு ஊரும் வேகம் எவ்வளவு?

1. ரஷ்யா, சீனு, கனடா, பிறேசில்.
2. யப்பான்;
3. பக்கிங்காம்
4. வெனிஸ்;
5. பாரிஸ்.
6. 150 ருத்தல்
7; பாரசீகர்
8. ஒரு கோடி
9. தேன்
10; மணிக்கு 720 அடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல் தான் கடவுளா? கடவுள் தான் கல்லா?

## நாகேஷின் தத்துவக் கதை!

ஒரு சமயம் ஆறு ஒன்றில் மழைவெள்ளம் வந்து வடிந்திருந்தது. எங்கிருந்தோ நீண்ட கல் ஒன்றைத் தண்ணீர் புரட்டிக்கொண்டு வந்து கரையில் தள்ளியிருந்தது.

அந்தக் கல் ஏதோ சாமி சிலைமாதிரித் தோற்றம் தந்ததால், வேறு வேலை ஏதுமில்லாத ஒருவன் அதை அந்த ஆற்றங்கரையிலேயே ஓர் இடத்தில் நட்டுவைத்து அதற்கு அன்றாடம் தேங்காய் உடைத்து சூடம் காட்டி வரலானான்.

இந்த வேலைகளிலேயே அவன் மற்றதை மறந்தான்; சவரம்கூட செய்யாமல் அவனுக்குத் தாடி வளர ஆரம்பித்தது.

மனிதனுக்கு எது வளர்ந்தாலும் வளராவிட்டாலும் தாடி, மீசை, தலைமுடி இவை வெட்ட வெட்டத் தானாக வளர்கின்றன. அந்தத் தைரியத்தில் தானே அநேகர் முடியைக் கொடுப்பதாய் பிரார்த்தனை செய்கிறார்கள்.

எந்தப் பக்தராவது கண்ணையோ, காதையோ, மூக்கையோ தருவதாக வேண்டுதல் செய்கிறார்களா? அவைகள் எல்லாம் ஒருதடவை வெட்டினால் வெட்டியது தான்.

ஆகவே இந்த ஆளுக்கும் தாடி மளமளவென வளர்ந்து இவரை அசல் சாமியாராகப் பறைசாற்றியது. பக்தர்களும் வரலானார்கள்.

இங்கே நல்ல பிழைப்புக் கிடைக்கும் போலிருக்கிறதே என்று ஒருவன் சாமியாருக்குச் சீடனாக வந்து சேர்ந்தான்.

காலத்தோடு பக்தர்கள் எண்ணிக்கையும் சீடர்கள் எண்ணிக்கையும் பெருகின.

ஆனாலும் அந்தச் சாமியார் தனக்கு முதன் முதலாக சீடனாக வந்தவனையே பிரதான சீடனாக மதித்தார்.

ஒருநாள் அந்த பிரதான சீடன் சாமி சிலையைக் கழுவிக்கொண்டிருந்தபோது புது சீடன் ஒருவன், 'ஏன் இந்தக் கல்லை இப்படிப்போட்டுக் கழுவுறாய்?' என்று கேட்டான்.

உடனே பிரதான சீடன், 'மடையா இது கல்லல்லக் கடவுள்' என்றான்.

அன்று அனைவரும் ஒன்றாகச் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது அந்தப் புதுச் சீடன் 'அம்மா' என்று கத்தினான்.

அருகே இருந்த பிரதான சீடன் விபரம் கேட்டான்.

'என் வாயில் போட்ட சோற்றில் ஒரு கடவுள் இருந்திருக்கிறார். அவர் என் பற்களில் கடிபடும்போது வலி எடுத்தது' என்றான்.

'அட அறிவிலி. சோற்றில் கிடந்தது வெறும் கல். அது கடவுள் அல்ல' என்றான்.

'இல்லை நீதான் கல்லைக் கடவுள் என்றாய். அப்படியானால் எல்லாக் கல்லும் கடவுள்தான்' என்றான் புதுச் சீடன்.

இதனால் தகராறு வலுத்து கடைசியில் அங்கே ஒரு பெரிய கலவரமே மூண்டது.

கடைசியில் யாரோ ஒருவன் கடவுளாக நட்டுவைத்து வணங்கி வந்த கல்லையே தூக்கித் தரையில் அடிக்க அது இரண்டுதுண்டானது.

ஒரு நாள் வீதிபோடும் காண்ட்ராக்டரின் லொறி ஒன்று அந்த வழியால் வந்தபோது அங்கே இரண்டுதுண்டாகக் கிடந்த சாமிக் கல்லை லொறியில் தூக்கிப்போட்டுக் கொண்டார்கள்.

அந்நேரம் அந்தக் காண்ட்ராக்டருக்கு ஒரு வழக்கு மன்றத்தின் முன்னுள்ள தரையை செம்மைப்படுத்தும்வேலை நடந்துகொண்டிருந்ததால் மற்றக் கற்களோடு சாமிக் கல்லையும் அந்த இடத்தில் கொண்டுவந்துபோட்டார். அதன்மீது மண்ணைக்கொண்டு வந்து நிரப்பினார்.

ஆனாலும் சாமிக் கல்லின் ஒரு முனை தரையோடு அமுங்காமல் வெளியே நீண்டு கொண்டிருந்தது.

ஒருநாள் அந்த வழக்குமன்றத்தில் வழக்கறிஞர் ஒருவர் உண்மையான கொலையாளி ஒருவனிடம் அதிகப் பணத்தைப் பீஸாகப்பெற்று அவனுக்காக வழக்காடி அவனுக்கு விடுதலை வாங்கித் தந்தார்.

அந்த வெற்றிக்களிப்போடு அந்த வழக்கறிஞர், வழக்கு மன்றத்தைவிட்டு வெளியேறி வந்தபோது, தரையிலே நீண்டுகொண்டிருந்த சாமிக் கல், அவரைத் தடுக்கிவிட்டது.

அப்படியே குப்புறவிழுந்த வழக்கறிஞருக்கு மூக்கில் அடிபட்டு அக்கணமே உயிரும் பிரிந்தது...

கடவுளாக நட்டுவைத்த நேரம் அது வெறுங்கல்லாக மதிக்கப்பட்டு உடைபட்டது.

அதன்பின் உடைந்த கல்லாகக் கருதப்பட்டு நடைபாதையில் போடப்பட்டபின். இதோ தவறுக்கு வக்காலத்து வாங்கிய ஒரு மனிதனுக்கு நீதி வழங்கிய கடவுளாகிவிட்டது...

அப்படியானால் கல்தான் கடவுளா?

அல்லது கடவுள்தான் கல்லா? ★

### வெள்ளித்திரையில்

# சிரிக்கப் பேசும் நகைச்சுவை நடிகருக்கு கலைஞர் கருணாநிதியின் சூடான பதில்!

இன்று தமிழ்ப்பட உலகில் நகைச்சுவை நடிகர்கள் மத்தியில் எஸ். எஸ். சந்திரன் 'காட்டில் தான் மழை' பெய்கிறது.

தமிழ்ப்படங்களில் அரசியல் வசனம் பேசிக் கைதட்டு வாங்கியவர் தி.மு.க. மேடைகளிலும் 'கூட்டம் திரட்டும்' பேச்சாளராக மாறி விட்டார்.

எம். ஜி. ஆரின் சத்துணவுத் திட்டத்தை விஸ்தரித்து ஒவ்வொரு மாணவனுக்கும் முட்டை ஒன்று வழங்க வேண்டும் என்று கலைஞர் அரசு உத்தரவிட்டது.

இது பற்றி மயிலை மாங்கொல்லையில் நடந்த தி. மு. க. பொதுக்கூட்டம் ஒன்றில் நடிகர் எஸ். எஸ். சந்திரன் பேசினார்.

அவரது பேச்சை வாசியுங்கள்:-

என்னைப் பார்த்து ஒருவர், என்னங்க முட்டை போடப் போறீங்களாமே என்று கேட்டார்.

'முட்டையைக்கோழிதான் போடும். அதை எடுத்துக் குழந்தைகள் தட்டுகளில் போடப்போகிறோம்' என்று சொன்னேன்.

நாங்கள் எல்லாம் அந்தக் காலத்தில் படிக்கும்போது ஆசிரியர்கள் எங்கள் 'சிலேட்'டில் முட்டை போடுவார். ஆனால் இன்றோ கலைஞர் 'பிளேட்'டில் முட்டை போடுகிறார்—

இப்படி சிரிக்கச் சிரிக்கப் பேசிய நடிகர் சந்திரன், கடந்த 3 ஆம் திகதி சென்னை மரினா கடற்கரையில் கலைஞர் கருணாநிதியின் 66 ஆவது பிறந்ததின விழாவிலும் பேசினார்:



கருணாநிதி

சந்திரன் சொன்னார்:

நீங்கள் எல்லாம் காத்து இருப்பது எதற்காக என்பது எனக்குத் தெரியும்.

மாநகரசபைத் தேர்தல் முடியட்டும்; நாடாளுமன்றத் தேர்தல் முடியட்டும். உங்களுக்கும் காலம் வரும். நீங்கள் நினைத்ததைச் செய்ய முடியும்'—

சந்திரனின் இப்பேச்சு, முதலமைச்சரைச் சிரிக்க வைக்கவில்லை: சிந்திக்க வைத்தது.

சந்திரன் பேசி விட்டு மேடையில் அமர்ந்ததும் அருகில் அழைத்து இப்படித்தானா பேசுவது? என்று காரசாரமாகக் கலைஞர் சொன்னார்.

அது மட்டுமல்ல, கூட்டத்தில் பேசுகையில், முதல்வர் நடிகர் சந்திரனின் பேச்சுக்குக் கண்டனம் தெரிவித்தார்.

'கட்சியில் உள்ளவர்களின் நலன்களுக்காக இந்த அரசு பாடுபட வேண்டும் என்று நினைப்பின் அப்படி நினைப்பவர்கள் மனதை மாற்றிக் கொள்ளட்டும்; இயலாவிட்டால் கட்சியை விட்டு வெளியேறி விட வேண்டும்!

கட்சிக்காரருக்கு மது பெர்மிட், ஓம்னிபஸ் பெர்மிட் வழங்கிய அரசு மாதிரி என் அரசு செயல்படாது'—

இப்படிக் கலைஞர் காட்டமாகச் சொன்னார்.

சந்திரன் நகைச்சுவை வசனம் பேசினார்; கலைஞரோ கதாநாயக வசனம் பேசினார். ★

## 18ஆவது படைப்பாக 'என் தங்கை'

ஆர். எம். வீரப்பன் வழங்க சத்யா மூவிசின் 18-வது படைப்பாக 'என் தங்கை' என்ற படம் வளர்ந்து வருகிறது. அர்ஜுன் தங்கையாக வைஷ்ணவி நடிக்கும் படம் இது. இதன் டைரக்ஷன் ஏ. ஜகந்நாதன்.


# "டினெஸ்ரி" போல், பரம்பரைச் சிறப்புடையது சிங்கர்!



### சிங்கர் எஸ்.வி.300 வீடியோ கெசற் றெக்கோடர்.

எஸ்.வி. 300 வி.சி.ஆர். இன் வடிவமைப்பில் சிங்கர் எலெக்ரோனிக்கின் உன்னதமான தொழில்நுட்பத்தைக் காணலாம். கட்டுப்படியாகும் விலையில் உங்களுக்கு சிறந்த தரமான பல அமைப்புகளைத் தருகிறது.

**தரச்சிறப்புடன், சிக்கனமானது.**

உங்கள் அபிமான நிகழ்ச்சிகளைப் பதிவுசெய்யுங்கள்

உங்களின் வினோத வேளைகளை நாடாவில் பதிவுசெய்துகொள்ளுங்கள் மிக இலகுவாக ஒருமுறை தொடுவதால் செய்யும் பதிவு. பதிவு செய்வதை எவ்வளவு இலகுவாக்குகிறது. உங்கள் அபிமான நிகழ்ச்சிகளை தவறவிடவேண்டியதே இல்லை. நீங்கள் அருகில் இல்லாத நேரத்திலும்கூட 14 நாட்களில், 4 நிகழ்ச்சிகளை 'டைமர்' உதவியுடன் உங்களுக்காகப் பதிவுசெய்யும்.

**நீங்கள் எழுந்திருக்கவேண்டிய அவசியம் கூட இல்லை.**

உங்களுக்குப் பிடித்தமான இருக்கையில் அமர்ந்துகொண்டே எஸ்.வி. 300இல் வயர்லெஸ் றிமோட் கொண்ரோல் கருவியினால் நேரடியாக நிகழ்ச்சிகளைத் தெரிவுசெய்து மகிழலாம்.

இலங்கை பூராவிலும்உள்ள சிங்கர் முன்னணி விற்பனையாளர் அமைப்பு, விசேடமான, விற்பனையின் பின்சேவை ஆகியவற்றினால் நீங்கள் தொடர்ந்து எஸ்.வி. 300 வி.சி.ஆர் தரும் மகிழ்ச்சிகரமான நிகழ்ச்சிகளைக் கண்டுகளிக்கலாம்.

# சிங்கர்




சிங்கர்*
மாசற்ற மேன்மை

விலை ரூபா. 14,990/-

உங்கள் பொன்னான பொழுதுகளை என்றும் நிலைக்கச் செய்கிறது.

ZENITH


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடுகளவு நன்மை செய்யின் மலையளவு பயன் வரும்!

நிச்சயமாக அல்லாஹ் என் சமூகத்தில் உள்ள ஒருவரைப் படைப்புக்கள் அனைத்துக்கும் முன்னிலையில் விடுவிப்பான் அப்போது அவருக்குரிய தொண்ணூற்றி ஒன்பது பேரேடுகளை விரிப்பான்.

அவைகள் ஒவ்வொன்றின் நீளமும் கண்பார்வை எட்டும் அளவுக்கு நீண்டிருக்கும். எனவே அவன் அவரை நோக்கி,

''இவற்றில் எதனையும் நீ மறுக்கின்றாயா? இரு காவலர்களான எனது எழுத்தாளர்கள் உன்மீது அநீதம் புரிந்திருக்கின்றனரா?'' எனக் கேட்பான். அதற்கு அவர்,

''என் இரட்சகனே! இல்லை என்று கூறுவார்.

பின் இறைவன்,

''உமக்குப் புகழ் ஏதும் இருக்கின்றதா?'' என்று கேட்பான்.

''இல்லை இறைவா'' எனக் கூறுவார். அப்போது அல்லாஹ்

''ஆம்; நிச்சயமாக உம்முடைய ஒரு நன்மை எம்மிடம் இருக்கின்றது. எனவே உம்மீது இன்று எவ்வித அநீதமும் செய்யப்படமாட்டாது'' என்று கூறுவான். ( ! ) க்காக மற்றொரு ஓலை கொண்டுவரப்படும். அதில்,

''அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரிய நாயன் வேறு எவருமில்லை என நான் சாட்சியம் கூறுகின்றேன். நிச்சயமாக முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும், தூதுவருமாவர் எனவும் சாட்சியம் கூறுகின்றேன்'' என எழுதப்பட்டிருக்கும். அப்போது இறைவன்,

'உமது ஓலையின் இடையைக் கவனியும்' எனக் கூறுவான். அதற்கு அவர்

'என் இரட்சகனே! இப்பேரேடுகளோடு இச்சிறு ஓலை எம்மாத்திரம் நிகராகும்'? எனக் கேட்பார். அதற்கு இறைவனே,

'நீர் அநீதம் செய்யப்படமாட்டீர்' என்று கூறுவான்.

பின் பேரேடுகளை ஒரு தட்டிலும், இச்சிறு ஓலையை மறு தட்டிலும் போடப்படும்.

இவ்வாறு போடப்பட்டதும் இச்சிறு காகிதம் வைக்கப்பட்டிருக்கும் தட்டு கனதியால் கீழ் நோக்கியும் பேரேடுகள் வைக்கப்பட்டிருந்த தட்டு மேல் நோக்கியும் சென்று விடும்.

எனவே அல்லாஹ்வின் இக்கலிமாவுக்கு எப்பொருளும் நிகராக முடியாது. மறுமைநாளில் நாம் ஒழுங்கான தராசையே நாட்டுவோம்.

'யாதொரு ஆத்மாவுக்கும் அநியாயம் செய்யப்படமாட்டாது. நன்மையாயினும் சரி, தீமையாயினும் சரி. அது கடுகளவு இருந்த போதிலும், நிறுப்பதற்காக அதையும் நாம் கொண்டு வருவோம்.' (21 : 47) எனும் அல்குர் ஆன் எமக்கு வலியுறுத்துகின்றது.

**- மௌலவி. கே. பி. நஸார்தீன் [ரசூலி] -**



## நல்வாக்குகள்

1. துர்ப்பாக்கியவானிடமிருந்து இரங்கும் இயல்பு அகற்றப்பட்டு விடுகின்றது.

2. மக்களிடம் இரங்காதவன் மீது அல்லாஹ்வும் இரங்கமாட்டான்.

3. எவர் அல்லாஹ் தமக்கு வாழ்க்கையிலும், வயதிலும் அதிகரிப்பை நல்க வேண்டுமென விரும்புகின்றாரோ அவர் தம் உறவினர்களுடன் நல்லமுறையில் உறவாடவும்.

4. சுவனத்தின் வாயில்களில் நன்மையானது தந்தை நீங்கள் விரும்பின் அதனைப் பேணிப்பாதுகாருங்கள். அல்லது பாழ்படுத்துங்கள்.

# இறைநாம வழிபாடு மூலம் மறுமையில் நன்மை பெறலாம்!

இப்பரந்த நிலவுலகின் கண்ணே எண்ணரிய பிறவிகளை நாம் எடுக்கின்றோம். பின்னரும் பிறப்பதனையே தொழிலாகக் கொள்ளுமுகமாக இறக்கின்றோம்.

வந்தவாறு எங்ஙனம்? இனிப்போகும் வழி எவ்விதம்? இதுபற்றிச் சிறிதும் சிந்திக்கின்றோமில்லை.

மனிதன் அழுதுகொண்டே பிறக்கின்றான். பின்பு தொல்லைமிக்க உலகிலே வாழ்கின்றான்.

மனிதன் பிறந்தது முதல் அவனுக்குப் பல நினைவுகள். அது வாங்கவேண்டும், இது வாங்கவேண்டும் என்று ஓயாமல் உழைக்கின்றான். பணத்தை அடைவதையே குறிக்கோளாகக்கொண்டு காற்றாய்ப் பறக்கிறான். ஓடி, ஓடிப் பணத்தைச் சேர்த்துச் சேமித்து வைத்துக்கொள்ளுகின்றான்.

இப்படி இந்தப்பணத்தைச் சேர்க்கப் பொய்சொல்ல வேண்டிவந்தாலும் தயங்காமல் சொல்லிவிடுகின்றான். ஏனெனில் அந்தப் பணம் தன்னை விடுத்து வேறு யாரிடமாவது போய்விடக்கூடாதே என்பதற்காக இந்தப் பணம் எத்தனை நாளைக்கு இவனிடம் இருக்கப்போகிறது?

வண்டிச் சக்கரம் சுழல்வது போல் காலகதியில் அது இடம்பெயர்ந்து வேறு ஒருவரிடம் போகத்தான்செய்யும். இதனைப்பலர் உணர்ந்து கொள்ளத் தவறிவிடுகின்றனர்.

ஆனால் இந்தப் பணமானது இந்த உலகத்தில் மாத்திரமே செல்லுபடியாகும். மறு உலகத்துக்கு உதவாது. நாம

**- இராசையா. ஸ்ரீதரன் -**

நமது வாழ்நாளில் புண்ணியத்தைச்செய்து மறு உலகத்துக்குத் தேவையான நல்ல நாணயத்தைச் சேமித்துக்கொள்ள வேண்டும்.

காசுக்கு எதற்காக நாணயம் என்றுபெயர் வைத்தார்கள் நம்முன்னோர்கள். அதிலும் நாணயம் இருக்கவேண்டும் என்பதற்காகத்தான்; குறுக்குவழியில் பணத்தைத் தேடினால் அது நாணயமாகாது.

'எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான், என்று மாணிக்கவாசகர் தமது சிவபுராணத்திற் குறிப்பிடுகின்றார்.

'சுவாமி! நான்இந்தப்பிறவி எடுத்து எடுத்து ரொம்பவும் களைத்துவிட்டேன். இவ்வாறு பிறந்து இளைத்துப் போன எனக்கு உய்தி பெற வழி காட்டமாட்டாயா? என்று இரந்து நிற்கின்றார்.

இன்னோரிடத்தில் 'அழுதால் உன்னைப்பெறலாமே' என்கிறார். அழுதுஅழுது ஆண்டவனைத் தொழுது தொழுது அடி அடைந்தவர் அப்பர் பெருமான். உய்யும் வழி இது தான் என்று நமக்கு வாழ்ந்து காட்டியவர்கள் நாயன்மார்களாகும்.

கொலை களவு போன்ற பஞ்சமாபாதகங்களை முதலில் விலக்கவேண்டும். தீய எண்ணங்களை மனத்தினின்றும் அகற்றவேண்டும்.



மற்றவர்களுக்கு நன்மையைச் செய்யாவிடினும் தீமை யாவது செய்யாமலிருக்கப் பழகவேண்டும்.

எப்பவோ முடிந்தகாரியம், முழுதும் உண்மை என்ற யோகர் சுவாமிகளின் வாக்கியத்திலே எவ்வளவு ஆழமான கருத்து உள்ளே பொதிந்து கிடக்கிறது பாருங்கள்.

'என் செயலாவது
யாதொன்றுமில்லை- யாவும்
உன் செயலே என்று
உணரப்பெற்றேன்'

என்று பட்டினத்தார் கூறியது இங்கு சிந்திக்கத்தக்கது.

'நிலைபெறுமாறெண்ணுதியேல் நெஞ்சே நீ வா நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்கு' என்கின்றார் அப்பர்சுவாமிகள் நித்தமும் வணங்கினால் முத்தி கிடைக்கும்.

'இம்மையே தரும்
சோறும் கூறையும்'

இது சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாக்கு. இறைவனை வாயார மனதார ஏத்திப் பாடினால் இம்மைக்கும் மறுமைக்கும் வேண்டியவற்றை எல்லாம் பெறலாம். இதில் எள்ளளவும் ஐயமில்லை என்கிறார் நாயனார்.

ஆகவே இறையுணர்வு மீதூரப் பெற்று நல்லவற்றைச் செய்து நல்லனவற்றைஎண்ணி, நல்லவற்றை நாடி நற்கதி பெறுவோமாக'

'நம்பினோர் கெடுவதில்லை
நான்கு மறைத் தீர்ப்பு

★

# இவர்கள் இப்படித்தான்

துணிவே துணை என்று வாழ்ந்து வந்தான் ரமேஸ். இளமையிலேயே கல்வியில் சிறந்துவிளங்கியவன் பலகலைகளிலும் ஆர்வம்கொண்டிருந்தான்.

பல்கலைக்கழகத்தில் பயின்று கொண்டிருந்த காலத்திலே தாய் தந்தையரை இழந்து இவன் வாழ்வின் ஒரு பக்கம் சோகக் கடலில் திளைக்கிறது,

காலவெள்ளம் பல்கலைக்கழக இறுதியாண்டையும் கரைத்துவிட்டது. ஆயினும் கலங்காத உள்ளத்தோடு ஊசலாடினான்.

ரமேஸ் ஒருநாள் தன் நண்பன் சிவா வீட்டிற்குச் சென்றான். சிவா எங்கோ அவசரமாகப் புறப்பட ஆயத்தம் செய்து கொண்டிருந்தான். சிவாவின்பெற்றோரும் அவனை வழி அனுப்பிவைத்தனர்.

அப்போ சிவா தனது மாமா வீட்டிற்கு கொழும்பு செல்வதாகக்கூறி தான் லெட்டர் போடுவதாகவும் சொல்லிச் சென்றுவிட்டான்.

நண்பனிடம் ஆறுதல் தேறுதல்தேடிச்சென்ற ரமேஸ் ஏமாற்றத்துடன் வீட்டிற்கு வந்தான்.

பெற்றோரின் சொத்துக்களில் வாழ்க்கைப் பாதையை ஓட்டிச்சென்ற ரமேசின் மனதில் விரக்தியின்' சாயல்கள் தூபமிட்டன.

தன் விடா முயற்சியினால் அவன் ஓர் எழுத்தாளனாக உருவெடுத்தான். இவனது நண்பர்கள், உறவினர்கள் இவனது போக்கைப் பார்த்து இவன் ஒரு மாதிரி பைத்தியக் கோலம் கொண்டவன் என நினைத்துக்கொண்டனர்.

இப்படி நினைத்தவர்களின் வாழ்க்கையையே சரித்திரமாக எழுத்து வடிவத்தில் கதைகதையாய் எழுதினான். ரமேஸ்.. ஓ! அருமையான கதைகள் எழுதினானே என்று ரமேசுக்கு ஆயிரம் ஆயிரம் வாழ்த்துக்கள் பரிசுகள் கிடைக்கத்தொடங்கியது.

ரமேஸ் 'இவர்கள் இப்படித்தான்' என்ற தலைப்பில் ஒரு கதை எழுதிக் கொண்டிருந்தபோது தபால்காரனின் மணிச் சத்தம் கேட்டது. கையில் தபாலை வாங்கி உடைத்துப் பார்த்தபோது...

அன்பு நண்பன் ரமேசுக்கு,

நலம். நலமறிய ஆவல்! ரமேஸ் அன்று நீ என் வீட்டிற்கு வந்தபோது உனக்கு நான் சிறிய பொய் கூறிவிட்டேன். குறைநினைக்காதே.

நான் இப்போது ஜேர்மனி ஊடாகக் கனடாவிற்குச் சென்றுகொண்டிருக்கிறேன். தற்சமயம் இங்குதான் எனது நண்பன் ஒருவனுடன் தங்கி இருக்கிறேன். இங்கு மிகவும் நன்றாக இருக்கிறேன்.

இலங்கையைப்போல் இங்கு பயந்து பயந்து நிம்மதியை இழந்து தவிக்கவேண்டிய அவசியமில்லை. இது குளிர்ச்சியான நாடு, அழகுமிகு சாலைகள், எழில்மிகு சோலைகள், வனப்பான மக்கள் ஒழுங்கான வாழ்க்கைமுறை, என்ன இன்பம்!

**- கே. ஆனந்தன் -**

ரமேஸ் முடிந்தால் நீயும் இங்கே வர முயற்சி செய். நாம் அங்கு பட்டம்பெற்று வேலை கிடைத்ததா? இல்லை சுதந்திரம்தான் கிடைத்து விட்டதா? ஏன்டா உன் வாழ்க்கையை வீணடிக்கிறாய். இங்கு நீயும்வந்தால்என்போல் சுதந்திரப் பறவையாய்ப் பறக்கலாமே. எதற்கும் நீ இங்கு வரவிரும்பினால் கடிதம் எழுது.

இப்படிக்கு
நண்பன் சிவா.

கடிதத்தைப் படித்து முடித்த ரமேஸ் இக்கடிதத்தையும் 'இவர்கள் இப்படித்தான்' என்ற கதையில் சேர்த்து எழுதிவிட்டான். ரமேசின் இந்தக் கதைக்கு மேலும்மெருகூட்டப்பட்டது.

இப்போது ரமேஸ் எழுதிய கதை என்றாலே ஜனங்கள் முண்டியடித்து வாங்கிச் செல்வதைக் காணமுடிகிறது.

எழுத்தாளர் ரமேசின் கடிதங்கள் வகைப்படுத்துவதற்கு உதவியாட்கள் தேவைப்பட்டது. இதற்காக ரமேஸ் ஒரு குமாஸ்தாவை அமர்த்தலாம் என்றெண்ணி பத்திரிகைகளில் விண்ணப்பம் கோரியிருந்தான்.

மறுநாள் ரமேசின் கைக்கு ஒரு கடிதம் வந்தது. பிரித்துப் பார்த்தபோது...

அன்பு ரமேஸ்!

மனிதன் நீ என நான் இப்போதுதான் உணர்ந்தேன். உன்பெயரை வெளிநாட்டுப் பத்திரிகைகளில் பார்த்தேன். மகிழ்ச்சி. நிம்மதிதேடி வெளிநாடுவந்த நான் இப்போது தவியாய்த் தவிக்கிறேன்.

இங்கு அகதிமுகாம் ஒன்றில் தங்கியிருக்கிறேன். என் ஆசைகள், என் சுதந்திரம், என் கல்வி, என் எதிர்காலம் எல்லாமே முடங்கிவிட்டது. உணவு மட்டுந்தான் கிடைக்கிறது. வெளியே செல்லமுடியாது.

ஓர் இலட்சம் அல்லவா என்பெற்றோர் எனக்காகச் செலவழித்தனர். என்னை இப்போது இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்போகிறார்களாம். கடவுளே! எங்கே நிம்மதி? எனவந்தேன், இப்போது அது தொடர்கதையாகிறதே?

ஆனாலும் ரமேஸ் நீ ஒரு மனிதனல்லவா? வற்றிய குளத்தைப் பறவைகள் தேடி வருவதுகிடையாது என நான் உன் வாழ்க்கையைத் தவறாக எடைபோட்டேன். ஆனால் வற்றிய குளத்தையும் இன்பமான நீச்சல் தடாகமாக்கலாம் என நீ நிரூபித்துவிட்டாய்.

என் வாழ்க்கையையோ சுதந்திரப் பறவை என நினைத்து கூண்டுக்கிளியானேன். ரமேஸ் நான் மீண்டும் இலங்கைக்கு வந்தால் நீ எனக்கு ஒரு குமாஸ்தா வேலையாவது தருவாயா?

மீண்டும் சந்திக்கும் வரை வணக்கம்கூறி விடைபெறுகிறேன்.

அன்புச் சிவா.

# என்னை ஆராய்ந்து பாரும்!

மரியாள் விலையேறப்பெற்ற தைலக்குப்பியை உடைத்து கர்த்தருக்காக ஊற்றினாளே, தன் அன்பை அதன்மூலம் காண்பித்தாளே. நாம் அவருக்கு எங்கள் அன்பைக் காண்பிக்க எமது ஜீவனின் கடைசித் துளியையும் அவருக்காக ஊற்ற ஆயத்தமா...? அவர் நமது அன்பைக் காணிக்கையாக அங்கீகரித்துக் கொள்வாரானால் அதை விட உலகத்தில் நமக்கேது தேவை!

கர்த்தாவே...! உமது மகிமையின் ஒளியில் என்னை ஆராய்ந்து பாரும். என் வாழ்க்கை – என் பேச்சு – என் சிந்தனை – என் கொடை– என் ஜெபம் - என் சேவை, இவை யாவும் உமக்கு முற்றிலும் பிரியமானவையா? உம்மால் ஆளப்பட்டவையா? 'தேவனே உமது சித்தத்தின் படியே செய்ய இதோ வருகிறேன்' என்போமா? [எபி 10:7,9].

'கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள் செய்வார். [சங் 37:4] அடுத்த வசனத்திலே 'அவரே காரியத்தை வாய்க்கப் பண்ணுவார்' என்று மறுபடியும் அழுத்திக் கூறுகிறார். இங்கே எவ்வித சந்தேகத்துக்கும் இடமில்லை. ஆனால் எந்த வாக்குத்தத்தத்துக்கும் நிபந்தனை உண்டு. அப்படியே இந்த வாக்குத்தத்தத்துக்கும் சில நிபந்தனைகள் கொடுக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

1. 'உன் வழியை [உன் தேவை எதுவோ அதை] கர்த்தருக்கு ஒப்புவி' [சங் 37:5]. ஆசீர்வாதத்தின் அந்தரங்கம் இதுவே. குடும்பத்தின் சகல பாரங்களும், பிரச்சினைகளும் காலை, மாலை குடும்ப ஆராதனையில் கர்த்தரிடம் ஒப்படைக்கப்படவேண்டும். அந்த குடும்ப ஜெபவேளையில் குடும்பத்தின் யாரோ ஒருவர் ஜெபிப்பது போதாது. 5 வயது குழந்தை முதல் 80 வயது வயோதிபர் வரையுமுள்ள ஒவ்வொருவரும் ஜெபிக்க வேண்டும். ஜெபங்கள் பிரபந்தங்களாகி விடாமல் குறிப்பான விண்ணப்பங்களாயிருக்க வேண்டும்.

**- வண. சாம். செல்வநாயகம் -**

ஒரு வீட்டிலே தகப்பனார் குடிக்கிறார். குடும்ப ஆராதனைக்கு வரமாட்டார். இரவு 11 மணி 12 மணிக்குத்தான் வீட்டுக்கு வருவார். அப்படியானால் வீட்டார் யாவரும் நாள் தவறாமல் அந்தக் காரியத்துக்காக கர்த்தரோடு போராடிச் ஜெபிக்க வேண்டும். கர்த்தர் விடுவிப்பது உறுதி. குடும்ப ஜெபம் இல்லாததால் நாம் ஏராளமான ஆசீர்வாதங்களை இழந்து போகிறோம். 'கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கு ஒரு நன்மையும் குறைவுபடாது' [சங்34:10].

2. அவர் மேல் நம்பிக்கையாயிரு; கர்த்தரைத் தவிர நாம் நம்பத்தக்கவர்கள் எவருமே இல்லை. பூர்வகாலத்துப் பக்தர்கள் கர்த்தரையே நம்பி வாழ்ந்தார்கள். தாவீது 'என் தேவனே உம்மை நம்பியிருக்கிறேன்' என்றான். [சங்25:2] யோபு 'அவர் என்னைக் கொன்று போட்டாலும் அவரையே நம்புவேன்' என்றான் [யோபு 13:15]. பேத புத்தகத்தின் நடுமையம் 'கர்த்தரைப் பற்றிக்கொள்' என் பதே [சங் 118:8]

வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவர் [எபி 10:23]. எனவே சந்தேகம் அவிசுவாசம் முதலிய பாவங்களுங்குச் சிறிதும் இடங்கொடாதே. சத்துரு நம் உள்ளங்களில் சந்தேகத்தை உருவாக்கத் திட்டமிடுவான். உறுதியாயிரு. நீ விசுவாசத்தால்தேவனுடைய மகிமையைக் காண்பாய்.

3. காத்திரு; 'கர்த்தரை நோக்கி அமர்ந்து அவருக்குக் காத்திரு' ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு காலமுண்டு [பிர 3:1]. எனவே கர்த்தருடைய வேலை வருமளவும் காத்திரு [யோவா 2:4]. பொறுமையோடு காத்திரு [சங் 40:1]. பொறுமையானது பூரணகிரியை செய்யக் கடவது [யாக்1:4]. சற்றுத் தாமதித்தாலும் பொறுமையாய்க் காத்திரு



[ஆப 2:3].

4. 'கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு. இது மிகவும் முக்கியமான ஒரு நிபந்தனை. இங்கே 'மனமகிழ்ச்சியாயிரு' என்னும் பதத்திற்கு இரண்டு சிறந்த கருத்துக்களைக் கொடுக்கலாம்.

(i) உறவாடிக்கொண்டிரு: உனக்கும் உன் கர்த்தருக்கும் இடைவிடாத உறவு இருக்கட்டும். ஏனோக்கு தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருந்தான் [ஆதி 5;24]. நோவாவும் தேவனோடே சஞ்சரித்துக் கொண்டுதான் இருந்தான் [ஆதி 6:9]. உனக்கும் எனக்கும் நியமிக்கப்பட்டிருக்கிற வாழ்க்கை இதுவே. எப்பொழுதும் சந்தோஷமாயிரு [1 தெச 5:16].

உனக்கும் உன் தேவனுக்கும் மத்தியில் எவ்வித கார்மேகமும் வர இடங்கொடாதே. ஒரு சிறு தீய எண்ணம் அவரை உனக்கு மறைக்கும். [சங் 66;18] இடைவிடாமல் இரத்தத்தால் கழுவப்பட்டுக்கொண்டிரு.

(ii) துதித்துக்கொண்டேயிரு: அவர் துதி உன் வாயை விட்டு விலக வேண்டாம் [சங் 34:1] ; [149:8]. இந்தத் துதியே உன் சத்துருக்களைச் சங்கரிக்கும். உன் தொல்லைகளையெல்லாம் தொலைத்து உனக்கு வெற்றியும் சமாதானமும் அளிக்கும். கர்த்தர் உனக்களித்திருக்கும் மிகச் சிறந்த ஆயுதம் துதியே. எந்த வேளையிலும் எந்த நிலைமையிலும் அது உனக்கு வெற்றியளிக்கும்.

'எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று. ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து ஜெபம் பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள்' [1 பேது 4:7].

★

# பொது அறிவுப்போட்டி இல. 27

| | | |
|---|---|---|
| 1. | தர்மபுத்திரனின் பெயர் ... ... ... ... | திருதராஷ்டிரன் / உதிஷ்டிரன் |
| 2. | மலரும் தன்மை இதற்கும் உண்டு ... ... ... ... ... | தாமரை / இதயம் |
| 3. | இராணுவ ஆட்சியுள்ள நாடு ... ... ... ... ... ... | கியூபா / ரஷ்யா |
| 4. | இராமேஸ்வரத்தின் மூல தெய்வம் ... ... ... ... ... | லிங்கம் / இராமர் |
| 5. | சிந்தனையைத் தூண்டுவது ... ... ... ... ... ... ... | அறிவு / அழகு |
| 6. | பாடும் பறவை எது? ... ... ... ... ... ... ... | வானம்பாடி / குயில் |
| 7. | பேசும் வல்லமை இதற்கும் உண்டு? ... ... ... ... ... | விழி / கிளி |
| 8. | அமெரிக்காவின் முதல் ஜனாதிபதி? ... ... ... | வாஷிங்டன் / லிங்கன் |
| 9. | போனால் வராது? ... ... ... ... ... ... ... ... ... | இளமை / அழகு |
| 10. | தொடர்ந்து வருவது? ... ... ... ... ... ... ... | நிழல் / புகழ் |
| 11. | உயர வேண்டியது? ... ... ... ... ... ... ... | உள்ளம் / உப்பரிகை |
| 12. | பெண்ணுக்கு வேண்டியது ... ... ... ... ... | புன்னகை / பொன்னகை |

பெயர்:- ....................................
விலாசம்:- ....................................
....................................

பொது அறிவுப்போட்டி இல: 27
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

.................... இங்கே வெட்டுக ....................

**நிபந்தனைகள்**

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்றுபேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் போட்டிகளில் கலந்து கொள்ள முடியாது.

சரியான விடைகளின் கீழ்க் கோடு இடுக. பின்னர் இப்படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி 21 - 06 - 1989 புதன்கிழமைக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

கடித உறையினுள் வைத்து அனுப்பப்படும் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

| | |
|---|---|
| முதலாம் பரிசு: | 100 ரூபா |
| இரண்டாம் பரிசு: | 50 ரூபா |
| மூன்றாம் பரிசு: | 25 ரூபா |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவித்துளி

## வரதட்சணை வில்

மணற் கோலங்களை
மனம் விட்டு ரசிக்கும்
இளைஞர்களே!
எங்கள் மனக் கோலங்களை
மட்டும் ஏன் கலைத்துப்
போகிறீர்கள்?

எங்கள் கண்ணீர் ஏரி
உடையாமல்
காக்கப்போகும்
ராமன் யார் உங்களில்?
உங்கள் மன அகலிகைகள்
எந்த ராமன்
கால்பட்டு எழுச்சியுறும்?

இளையராஜாவின்
இசையை ரசிக்கும்
இளைஞனே!
எங்கள் மனத்து
முகாரியை மோகனமாக்க
முயற்சிக்கக் கூடாதா?

இளைஞனே!
நீ கலா ரசிகன் தான்
ஒப்புக் கொள்கிறேன்
அதற்காக
வரதட்சணை வில்லை
வளைத்து முறிக்காமல்
அழகுபடுத்தி
ஆராதிக்க வேண்டுமா?

வளைந்திருப்பது
வில்மட்டுமன்று
ஒவ்வொரு பெண்ணின்
தந்தையின்
முதுகெலும்பும்
கூடத்தான்.

— ஷாமினி

## கல்யாணச் சந்தையிலே ...

கல்யாணச் சந்தையிலே
நிரம்பல்
செய்வதற்காக
நிறுத்தி வைக்கப்பட்ட
ஆண்கள்
நுகர்வு
செய்வோரால்
நிராகரிக்கப்பட்டு
விட்டனர்,
காரணம்
விலை அதிகரிப்பு
இன்னும்
வீழ்ச்சியடையவில்லையாம்
அதனால் தான்!

- க. காந்தரூபன்

## சாட்சியம்

நான்
தலை வைத்துறங்கும்
தலையணைக்கு
கண்ணிருந்தால்...
உனக்காக
என் விழியில்
வழிந்த நீருக்கு
சாட்சியம் அது சொல்லும்
இதற்கு மேலும்,
நீ
சந்தேகமா?
வா.........
என் தலையணையைப்
பிழிந்து காட்டுகிறேன்.

— மானியூர் ரட்னேஷ்

## நிச்சய லட்சியம்

மலரே! செம்பூவே!
நமது
சமுதாயத் தூண்களுக்கு
ஒரு தூதகம் சொல்!
'நம் மண்ணின்
நிச்சயமான—நாளைய
இலட்சியத்தைநோக்கி
நமது
நிதான பயணங்கள்
நிகழட்டும் என்று.

மாவை —வரோதயன்

## வேண்டார்!

சாதி சரியில்லை அந்தச்
சாரங்கன் வேண்டாம்!
சமயம் வேறு இந்தச்
சத்தியனும் வேண்டாம்!
சீதனம்நம்மிடமில்லை அந்த
ஸ்ரீதரனும் வேண்டாம்!
வேலை சரியில்லை ஆகவே
வேலவனும் வேண்டாம்!
சாலம் போய்விட்டது
கன்னித்தன்மையும்
ஓடிவிட்டது
காலன்தான் ஓடிவரவில்லை
கவர்ந்து இன்னும்
செல்லவில்லை.

— நவீன நடராஜா

50 மாணவர்களுடன் ஆரம்பமாகி

# நூற்றைம்பது ஆண்டுகள் நிறைவு கண்ட பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி

பிரிட்டிஷாரின் வருகை இலங்கையில் மெதடிஸ்த பாடசாலைகளின் வளர்ச்சிக்கு வழி வகுத்தது.

1813 இல் மிஷனரிமார் மீது விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டதைத்தொடர்ந்து இது சாத்தியமானது.

1826 இல் கிறிஸ்தவ மதப் பிரசாரம் செய்ய வண. பிதா. பீற்றர் பெர்சிவல் அடிகளார் இலங்கை வந்தார்.

வட இலங்கை மாவட்ட சினேய்ட் தலைவராக இருந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பெர்சிவல் அடிகளார் யாழ்ப் பாணத்தில் பாடசாலைகளை நிறுவி வந்தார்.

அதற்கு முன்னர் அவர் ஸ்கொட்டிஸ் திருச்சபைக் கல்லூரி ஸ்தாபகர் டாக்டர் டப் உடன் கலந்தாலோசித் தார்.

1834 இல் பெர்சிவல் அடிகளார் யாழ் மத்திய கல்லூரியை ஆரம்பித்தார்.

1838 இல் பருத்தித்துறையில் ஓர் ஆங்கிலக் கல்லூரியை அவர் ஆரம்பித்தார்.

அப்பாடசாலையை நிறுவ ஒரு பவுண் 2 ஷில்லிங்6 பென்ஸ் சிபார்சு செய்யப்பட்டது. அதன் இன்றைய மதிப்பு 65 ரூபா மட்டுமே.

இப்பணம் கூட அன்று போதாமற் போய்விட்டது. தனது சொந்தப்பணத்தில் 400 பவுண் செலவழித்துக் காணி வாங்கி அதில் பாடசாலையை நிறுவினார்.

அதற்கு பருத்தித்துறை வெஸ்லியன் மிஷன் மத்திய




பாடசாலை எனப் பெயர் சூட்டப்பட்டது.

ஆரம்பத்தில் இப்பாடசாலையில் 50 மாணவர்கள் படித்தனர். 1838 முதல் இப் பாடசாலை இயங்கி வந்தது. 1860 இல் சில காலம் அது இயங்கவில்லை.

1861 இல் அப்பாடசாலை மீண்டும் ஆரம்பமானது. மாணவர் எண்ணிக்கை அதிகரிக்க 1875 இல் பாடசாலை வேறு இடத்துக்கு மாற்றப் பட்டது, அதன் முந்திய இடத்தில் பெண்கள் பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப் பட்டது.

நாட் செல்ல, பாடசாலை தரமுயர்த்தப்பட்டது. கல்கத்தா பல்கலைக்கழகத்தின் பிரவேசப்பரீட்சை எழுத மாணவர் அனுமதிக்கப்பட் டனர்.

பல்கலைக்கழக பிரவேச வகுப்புக்கள் ஆரம்பிக்கப் பட்ட பின்னர் அதிபராகத் திரு. எஸ். ஏ. போல்பிள்ளை நியமிக்கப்பட்டார்.

1915 ஆம் ஆண்டு பாடசாலையின் சரித்திரத்தில் ஒரு திருப்புமுனை ஏற்பட்டது. திரு. சி. பி. தாமோதரம் அதிபராக பதவி ஏற்றார். அவரின் 28 வருட சேவையின் போது குறிப்பிடத்தக்க மாற்றங்கள் இடம்பெற்றன.

1916 இல் பாடசாலையின் பெயர் ஹாட்லிக் கல்லூரி என்று மாற்றப்பட்டது, வண. மார்ஷல் ஹாட்லி ரசாயன ஆய்வு கூடம் ஒன்றுக்கு அத்திவாரக்கல் நட்டு வைத் தார். அதைத் தொடர்ந்து பெயர் மாற்றஞ் செய்யப் பட்டது.

அவரது விஜயத்தின் போது ஆறு வகுப்பறைகளுக்கு அத்திவாரமிடப்பட்டது.

இவ் வேலைகள் 1917 ஆம் ஆண்டில் பூர்த்தியாகின.

அவர் பதவி ஏற்ற பின்னர் கல்லூரி துரித வளர்ச்சி கண்டது.

1943இல் திரு. கே. பூரணம் பிள்ளை அதிபராக பதவி ஏற்றார். 24 ஆண்டுகள் இவர் சேவையாற்றினார்.

ஹாட்லி கல்லூரி, 1850 இல் பயங்கர தொற்றுநோய், இரண்டு உலக மகா யுத்தங்கள், 1960இல் சூறுவளி ஆகிய வற்றைச் சந்தித்தது.

1984இல் கல்லூரியின் நூல் நிலையம் 6ஆயிரத்து 690 புத்தகங்களுடன் எரிந்துபோனது சில வகுப்பறைகளும் அப்போது எரிந்தன.

இந்த இன்னல்களுக்கு இடையிலும் ஹாட்லியின் கல்விப்பணி குறைந்து விடவில்லை. என்றும் போல கல்வி வளர்ச்சிக்கு தன்னுலான பங்களிப்பை ஹாட்லிக் கல்லூரி செய்து வந்துள்ளது.

1988இல் கூட ஹாட்லி கல்லூரி மாணவர் ஜி.சி. சாதாரண பரீட்சையில் சாதனை புரிந்தனர்.

14 மாணவர்கள் எட்டுப் பாடங்களிலும் அதி விசேட சித்தியும் 13 மாணவர்கள் 7 பாடங்களில் அதி விசேட சித்தியும் பெற்றனர்.

கல்லூரியை புனரமைக்கும் பணி ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கும் ஒரு கோடி 20 லட்சம் ரூபா பணத்தில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான நடவடிக்கைகள் இலங்கை அரசு மேற்கொண்டுள்ளது.

இக்கல்லூரியின் 150ஆவது ஆண்டு நிறைவையொட்டி 75சத தபால் முத்திரை ஒன்றை இலங்கை அரசின் தபால், தந்தித் தொடர்புகள் அமைச்சு கடந்த 5ஆம் திகதி வெளியிட்டது.

## பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி

### அதிபர்கள் வரிசையிலே...

திரு. டி.பி. நைல்ஸ் (1861 — 1868)
திரு. சாமுவல் ஹென்ஸ்மன் (1868 —
திரு. ஜே. சி. ரி. ஷெரார்ட் (1875 —
திரு. எஸ். ஏ. போல்பிள்ளை
திரு. ஸ்ரீபன் கணபதிப்பிள்ளை (1912 வரை)
திரு. இ. ஏ. ஏப்ரஹாம் (1912 தொடக்கம்)
திரு. சி. பி. தாமோதரம் (1915 — 1943)
திரு. கே. பூரணம்பிள்ளை (1943 — 1967)
திரு. எஸ். இரத்தினசபாபதி (1967 — 1971)
திரு. சி. இராஜதுரை (1971 — 1973)
திரு. பி. ஏகாம்பரம் (1973 — 1975)
திரு. டபிள்யு. என். எஸ். சாமுவல் (1975 — 1985)
திரு. எஸ். பி. பாலசிங்கம் (தற்போதைய அதிபர்)

# கண்ணன் வகுத்த கணக்கு

மகாபாரத யுத்தத்திற்காக இருதரப்பிலும் எல்லா ஆயத்தங்களும் நடந்து கொண்டிருந்தன.

பாண்டவர்களும் கௌரவர்களும் தங்கள் படைகளை அணிவகுத்துத் தகுந்த பல்வேறு வசதிகளை ஏற்படுத்தி இருந்தனர்.

உடுப்பி தேசத்து அரசன் இருதரப்புப் படைகளுக்கும் உணவு வசதிகளைக் கவனிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்தான்.

குருஷேத்திரம் தர்மஷேத்திரம். ஆதலால் அந்தப் போரில் யாவரும் தர்மத்தையே அனுஷ்டித்துப் போர் செய்தனர்.

காலையில் சங்கு ஊதிய பின்னர் தான் போர் தொடங்கும். மாலையில் சங்கு ஊதியவுடன் போர் நின்றுவிடும்.

அது வரை ஒருவரை ஒருவர் வீராவேஷத்துடன் தாக்கிப் போர் செய்தாலும், இரவில் சினேக பாவத்துடன் கலந்து கொண்டு உரையாடுவது வழக்கம்.

ஏன், துரியோதனனின் பக்கத்தில் தருமன் உட்கார்ந்து சாப்பிடுவதும், அருச்சுனன் பக்கத்தில் கர்ணன் அமர்வதும், சாதாரண நிகழ்ச்சியாகும்.

இதைவிட மிக அதிசயம் என்னவென்றால், உடுப்பி தேசத்து அரசன், உணவு தயார் செய்வது எல்லோருக்கும் சரியாய்ப் போதுமானதாக இருக்கும். மீதமும் இருக்காது, குறையவும் இருக்காது.


தருமபுத்திரருக்கு இந்தக் கணக்கும் புரியவில்லை. எவ்வாறு, எத்தனை பேர்கள் போரிலிருந்து திரும்பி வருவார்கள் என்று உடுப்பி அரசனுக்கு முன் கூட்டியே தெரியும் என்று விளங்கவில்லை. அரசனைக் கேட்டதில் கண்ணனைக் கேட்டுமாறு வேண்டினான்.

தருமன் அவ்வாறு கண்ணனை நோக்க, அந்த மாயன் அரசனையே விளக்குமாறு பணித்தான். இரகசியம் வெளியிடப்பட்டது.

'கண்ணன் உணவருந்தும் போது நான் பக்கத்தில் இருப்பேன். அவர் முந்திரிப்பருப்பு சாப்பிடும்போது நான் கணக்கெடுப்பேன். ஒரு பருப்பு உட்கொண்டால், இத்தனை ஆயிரம் உயிர்பலி என்று அர்த்தம். மறுநாள் அத்தனை பேர் இறப்பார்கள். அவ்வாறே அரை, கால் பருப்பு சாப்பிட்டாலும் கணக்குண்டு. இது எங்களுக்குள்ள கதை இரகசியம்? மறுநாள் எவ்வளவு நபர் குறைந்து விருந்துக்கு வருவார்கள். எத்தனை பேருக்குச் சமையல் செய்ய வேண்டும் என்று முதல் நாள் நிர்ணயமாய் விடும். இதுவே எங்களுக்குள்ள பரிவர்த்தனை என்றான் உடுப்பி வேந்தன். ★

# சொற்சிலம்பம்

## போட்டி இல: 102



சொற்சிலம்பம் இல: 102
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................
விலாசம்: ..............................
..............................

———— இங்கே வெட்டுக ————

**முடிவு திகதி: 28 - 06 - 1989**

**இடமிருந்து வலம்:**

1. புண்ணியஸ்தலம் 6. வேள்வித்தீயில் தேவர்கள் இடும் உணவு 7. அப்பாவி 8. அளவிடுதல் 9. துன்புறுத்தல் 10. பறவைகளின் சொண்டு 11. சொல் 13. தர்மம் 14. தாழ்ப்பாள் 16. கிரகங்களில் ஒன்று 17. சாபம் கொடு.

**மேலிருந்து கீழ்:**

1. இரத்தினக்கல்லில் ஒருவகை 2. மாமிசம் 3. தோல் நீக்கிய உள்ளீடு 4. குரங்கு 6. வரிசையாக நிற்கச் செய்தல் 7. கல்யாணவிருந்தில் இது முக்கியம் 10. எண்ணெய் கிணறுகள் உள்ள நாடு 11. எரிப்பதற்கு இது வேணும் 12. நெல்லுக்கு இடையில் காணப்படும் 13. பாம்பு 15. சாக்குப்பை.

### நிபந்தனைகள்

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள் கலந்துகொள்ள முடியாது.

படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பினால் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப் படும்.

# வீட்டு வைத்தியம்

1 சிறு குழந்தைகள் அழுது தாய்ப்பால் குடியாதிருந்தால் தோல் சுரண்டியெடுத்த வசம்பை வாழைப்பூச் சாற்றில் அரைத்து, அடிவயிற்றில் பூச அழுகை நீங்கிப் பால் குடிக்கும்.

2. சிறு குழந்தைகட்கு மலசலம் கட்டினுல், சிறுபீழை என்று கூறப்படும் தேங்காய்ப் பூக்கீரையின் வேரும், அதிமதுரமும் அரைத்துத் தாயின் முலைக் காம்பில் பூசி பால் கொடுக்கின் மலசலம் போகும்.

3. சிறுகுழந்தைகட்கு சளிக் கட்டு, கிரந்தி முட்டுத்தொய்விற்கு இக்கிரியிலை ஒரு பிடி, சிற்றரத்தை, மிளகு இவைகள் தனித்தனி ஒவ்வொரு கழஞ்சு எடுத்து காற்படி தண்ணீர் போட்டு இவ் தண்ணீர் நாலில் ஒரு பங்கு வரும் வரை நன்கு வற்றக் காய்ச்சி வடித்து, நாலு பங்காகப் பிரித்து 6 மணித்தியாலத்துக்கு ஒரு தடவை கல்லாக்காரமும் முலைப்பாலும் கலந்து மூன்று நாள் கொடுத்துவர மேற்படி நோய்கள் குணமாகும்.

4. குழந்தைகளின் வயிற்றிலுள்ள கிருமிகளை அகற்ற வேப்பம் காம்பு, மாதாளம் வேர்பட்டை, வாய்விடங்கம், கிருமி சத்துரு இவைகள் கழஞ்சு ஒன்று வீதம் எடுத்து நறுக்கி இடித்துக் காற்படி நீரில் இட்டு அவித்து நாலில் ஒன்றாக வற்றக் காய்ச்சி ஒரு வயதுக்கு மேற்பட்ட குழந்தைகட்கு முதல் நாள் 3 நேரம் கொடுத்து மறு நாட்காலையில் அரை அவுன்ஸ் ஆமணக்கு எண்ணெய் கொடுக்க கிருமிப்பூச்சிகள் மலத்துடன் வெளியேறும். குடிநீரில் மீதி வைக்காமல், கொடுக்க வேண்டும். அளவு குறைந்தால் கிருமி வெளிப்படாது.

5. சிறுபிள்ளைகளுக்கு ஏற்படும் வயிற்றுப்போக்கை நிறுத்துவதற்கு வசம்பை நெருப்பில் சுட்டு கரியாக்கி முலைப்பாலில் அரைத்து நாவில் தடவிவந்தால் பிள்ளைகளின் வயிற்றுப்போக்கு நின்று விடும்.

6. வசம்பை மேற்கூறியபடி சுட்டுக் கரியாக்கி அதை தேனில் கலந்து அடிக்கடி கொடுத்துவந்தால் சிறுபிள்ளைகளுக்கு உண்டாகும் வாந்தி நின்றுவிடும்.

7. கற்பூரவள்ளியிலைச் சாற்றுடன் தேங்காய் எண்ணெய் கலந்து நன்கு சூடுசெய்து அதிலுள்ள நீர்த்தன்மை நன்கு வற்றியபின்பு அவ் எண்ணெயை போத்தலில் பத்திரப்படுத்தி சளி ஏற்பட்ட

**- ந. ஜெயராஜா -**

குழந்தைக்கு இவ்எண்ணெயை நெஞ்சு, முதுகு, விலா பகுதிகளில் மேல்ப்பாகத்தில் பூசி, எண்ணெய் பூசிய இடங்களில் வெற்றிலையைச் சூடுகாட்டிப் போடும்போது சளி உபத்திரவம் நீங்கும்.

8. தூதுவளை, சுண்டங்கத்தரி, மொசுமுசுக்கை, துளசி, மிளகு, திப்பிலி, சீரகம், பூண்டு, கறுவேப்பிலை, கொத்தமல்லி, உப்புமுதலியவை அனைத்தையும் சட்டியில் இட்டு எண்ணெய் ஊற்றி வதகி பின்பு அதைஅரைத்து சூடான சாப்பாட்டில் காலை, மாலை இரண்டு வேளை சாப்பிட்டுவரின் எவ்வித இருமலும் தீரும்.

9. வல்லாரைக் கீரையை நிழலில் உலர்த்தி நன்கு உலர்ந்தபின்பு இடித்து துணியினுல் அரித்து எடுத்து இதை சூடான பசும்பாலில் காலை, மாலை சாப்பிட்டுவர நினைவு ஆற்றல் அதாவது ஞாபசத்தி கிடைக்கும்.

10. இஞ்சிச்சாறு, நாட்டு வெங்காயச்சாறு, எலுமிச்சம் சாறு இவற்றில் ஒவ்வொரு மேசைக்கரண்டியளவுஎடுத்து சுத்தமான தேன்விட்டு கலந்து காலையில் சாப்பிட்டுவர இரைப்புத் தீரும். ★

# ஆணவம்

இளஞ் சிவப்பு நிறக் கடதாசியிற் சுற்றப்பட்டிருந்த வட்ட வடிவமான அந்தத் தங்கப்பவுண் மெல்லக் கடதாசியை விலக்கிக் கொண்டு எட்டிப்பார்த்தது.

இரண்டுமூன்று குன்றி மணிகள் பவுணின் அருகில் நிம்மதியாக உறங்கிக்கொண்டிருந் தன.

குன்றி மணிகளைக் கண்டதும் பவுணுக்குக் குமட்டிக் கொண்டுவந்தது தன்னுடைய மேனியையும் அதன்காந்தியையும் ஒரு முறை மன நிறைவுடன் பார்த்துக்கொண்டது.

அருவருப்புத்தவழும் கண்களால் குன்றி மணிகளைப் பார்த்தது. 'சே! என்ன கோரமிது! கருஞ்சிவப்பு நிறத்தில் முனை கறுத்து அவலட்சணத்தின் மொத்த உருவம்.'

பவுணின் முணுமுணுப்பு குன்றி மணியின் காதுகளில் விழுந்திருக்க வேண்டும். அது கண்களை மலர்த்தி அங்கும் இங்கும் பார்த்தது.

கண்களில் சனல் தெறிக்க பவுன் குன்றி மணியைப் பார்க்கவே குன்றி மணி அமைதியாகக் கண்களை மூடிக் கொண்டது.

பெருமையையே உரிமையாகக் கொண்டிருந்த பவுணின் ஆணவம் வெடித்துச் சிதறி வாய்வழியாகச் சிந்தின.

குன்றிமணிகள் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு உறங்குவதுபோலப் பாசாங்கு செய்தன.

சற்றுநேரங்கழித்து பவுணும் குன்றிமணிகளுமிருந்த அலுமாரியின் கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டுக் குன்றிமணிகள் கண்களை விழித்துக் கொண்டன.

அலுமாரியைத் திறந்த அந்த மனிதன். பவுணும் குன்றி மணிகளுமிருந்த அந்த தட்டை எடுத்தான். மேலும் இருவர் அங்குவந்து சேர்ந்து விட்டார்கள்.

அவர்களில் ஒருவரது கரத்தில் தராசு ஒன்றும் சிறு படிகளுமிருந்தன.

தராசை வைத்திருந்த மனிதன் பவுணை ஒரு பக்கத்திலும் சிறிய படியை மறுபக்கத்திலும் வைத்து தராசு இருந்த பெட்டியின் விசையை அழுத்தினுன்.

தராசின் இரு பக்கங்களும் எழுந்தன. ஆனுல் தராசில் பவுண் வைக்கப்பட்டிருந்தபக்கம் சிறிது தாழ்ந்தது.

அங்கு நின்றவர்களில் ஒருவன் பக்கத்திலிருந்த தட்டிலிருந்து ஒரு குன்றி மணியை எடுத்து எதிர் தட்டில் வைத்தான். தாழ்ந்த பக்கம் உயர்ந்தது தராசின் முனை சமநிலையில் நின்றது!

**- ஆனந்தி சிவஞானசுந்தரம் -**

குன்றிமணியின் அடக்கமும் அமைதியும் பவுணின் அகங்காரத்திற்கு வலு வேற்றின.

பவுண் மீண்டும் திருவாய் மலர்ந்தது.

என்னுடைய அந்தஸ்து என்ன; கௌரவம் என்ன; இதைப்புரிந்துகொள்ளாத நீ என்னோடை சரிசமமாக வந்து உட்கார்ந்துகொண்டாயே! உனக்குப் புத்தியிருக்கிறதா?'

குன்றி மணி ஓரக்கண்ணுல் எதிர்த்தட்டிலிருந்த பவுணைப் பார்த்தது.

அவமானத்தால் குன்றிப்போன "பவுண்" குன்றிமணியின் பார்வையை எதிர் நோக்க வலுவற்று முகத்தை மறு பக்கமாகத் திருப்பிக் கொண்டது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

G. C. E. A/L
(விஞ்ஞானம், வர்த்தகம் கலை)
G. C. E. O/L
TYPING, SHORT HAND வகுப்புகள்
SPOKEN ENGLISH WITH GRAMMAR
வகுப்புகள் வெகு சிறப்பாக
நடாத்தப்படுகின்றன
BOND INSTITUTES
58 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

சஞ்சீவி
சஞ்சிகை

17 - 06 - 1989 சனிக்கிழமை

BOND INSTITUTES
(தனியார் கல்வி நிறுவனங்களின் முன்னோடிகள்)
1983 ஆம் ஆண்டின் பின்பு மீண்டும் முன்னைய உற்சாகத்துடன் அனைத்து வகுப்புகளுக்கும் தரமான ஆசிரியர்களைக் கொண்டு இயங்குகின்றது.

# போலந்தின் தொழிற்சங்கத் தலைவர் வலேசாவின் வெற்றி

# கிழக்கு ஐரோப்பாவில் கம்யூனிஸ்ட் ஆதிக்கத்துக்கு வேட்டு

## உலக உலா

என்.பி.சீலன்

போலந்தில் கடந்த 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பொதுத் தேர்தலில் Solidarity என்று அழைக்கப்படும் சுதந்திர தொழிற்சங்க சம்மேளனம் தான் போட்டியிட அனுமதிக்கப்பட்ட ஆசனங்களை ஓரளவு முழு அளவில் சுவீகரித்து மகத்தான வெற்றியீட்டியுள்ளது.

40 வருடகால கம்யூனிஸ்ட் ஆட்சிக்கு ஒரு சவாலாகவும்—

2 ஆவது உலக மகாயுத்தக் காலத்தின்பின்னர் கிழக்கு ஐரோப்பாவில் ஆதிக்கம் செலுத்தும் கம்யூனிஸ்ட் அமைப்பு முறையில் ஏற்பட்டுள்ள பெரும் வெடிப்பாகவும்—

போலந்துத் தேர்தல் முடிவுகள் குறித்து அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் கூடிய அரசியல் — பொருளாதாரச் சுதந்திரங்களை வலியுறுத்தி காலத்துக்குக்காலம் ஏற்பட்ட எழுச்சிகள் ஆயுதப்பலத்தால் அடக்கப்பட்ட நிலையில் போலந்தில் சுதந்திர தொழிற்சங்கச் சம்மேளனத்தலைவர் லெச் வலேஸா (Lech Walesa) கடந்த 8 வருட காலமாக நடத்திய தீரம்மிகு போராட்டமே தற்போது உருவாகியுள்ள அரசியல் சூழ்நிலைக்குக் காரணம் ஆகும்.

ஏற்கனவே 1956ஆம் ஆண்டு ஹங்கேரியில் பிரதமர் நாகி தலைமையில்ஏற்பட்ட கிளர்ச்சியும்—

1968 ஆம் ஆண்டு செக்கோஸ்லோவோக்கியாவில் அதிபர் டுப் செக் தலைமையில் ஏற்பட்ட எழுச்சியும்— வார்ஸா நாட்டுப் படைகளின் உதவியுடன் முறியடிக்கப்பட்டன.

ஹங்கேரியில் கிளர்ச்சி முறியடிக்கப்பட்டபின்பு பிரதமர் நாகி தூக்கிலிடப்பட்டார்.

செக்கோஸ்லேரவோக்கியாவில் அதிபர் டுப் செக் அதிகாரத்திலிருந்து அகற்றப்பட்டு அரசியல் அந்தகாரத்துக்குள் தள்ளப்பட்டார்.

வார்ஸா நாடுகளின் படையெடுப்பின்போது இந்த இரு நாடுகளிலும் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். இதனால் சோவியத் யூனியன் அப்போது சர்வதேச அரங்கில் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கியது.

### போலந்தில் நிலைமை வேறுபாடு

ஆனால் போலந்து நிலைமை வேறுபட்டது. ஆட்சியில் உள்ள கம்யூனிஸ்ட் அரசாங்கம் சோவியத் தலைமைப் பீடத்துக்கு விசுவாசமானது. ஆனால் அந்த அரசாங்கத்துக்கு எதிராகவே போராட்டம் நடந்தது. போராட்டம் வெற்றிபெற சோவியத் அதிபர் மிக்கெய்ல் கோர்ப்பச்சேவின் 'திறந்த கொள்கை' யும் சாதகமாக அமைந்தது எனலாம்.

போலந்தில் தற்போது பதவியில் இருந்துவரும் அதிபர் ஜருசெல்ஸ்கி (Jaruzelski) தலைமையிலான அரசும் எதிர்க்கட்சியில் இருக்கப்போகும் லெச் வலேஸா தலைமையிலான சுதந்திர தொழிற்சங்க சம்மேளனமும் இனி எப்படி நடந்து கொள்ளப்போகின்றன என்பதிலேயே போலந்தின் எதிர்காலம் தங்கியிருக்கிறது.

கடந்த 4 ஆம் திகதி ஞாயிற்கிழமை போலந்தில் நடைபெற்ற பொதுத் தேர்தல் 100 ஆசனங்களுக்கான செனேட்டுக்கும் (மேல்சபை) 460 ஆசனங்களுக்கான நாடாளுமன்றத்துக்கும் (கீழ் சபை) நடத்தப்பட்டது.

போலந்து அரசியல் தீர்வுக்காக புதிதாக உருவாக்கப்பட்ட மேல் சபையான செனேட் சபைக்கான 100ஆசனங்களுக்கும் சுதந்திர தொழிற்சங்க சம்மேளனத்துக்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையில் நேரடிப் போட்டி இருந்தது. தேர்தல் முடிவுகளின்படி இந்த 100ஆசனங்களில் 92 ஆசனங்களில் சுதந்திர தொழிற்சங்க சம்மேளனம் வெற்றியீட்டியுள்ளது.

460 ஆசனங்களைக்கொண்ட கீழ் சபைக்கு நடந்த தேர்தலில் தொழிற்சங்க சம்மேளனமும் மற்றும் சுயேச்சைக் குழுக்களும் 35 சதவீதமான ஆசனங்களுக்கே போட்டியிட அனுமதிக்கப்பட்டிருந்தன.

மிகுதி 65 சதவீத ஆசனங்களிலும் ஜெனரல் ஜருசெல்ஸ்கி தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சியும் அதன் கூட்டுக்கட்சிகளும் போட்டியிட்டன.

தொழிற்சங்க சம்மேளனத்துக்காக ஒதுக்கப்பட்ட 35 சதவீத ஆசனங்களான 161 ஆசனங்களுக்கு நடைபெற்ற போட்டியில் தொழிற்சங்க சம்மேளனம் 160 ஆசனங்களில் வெற்றி பெற்றிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. கம்யூனிஸ்ட்கட்சிக்கு 299 ஆசனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன.

இத்தேர்தலில் 50 சதவீத வாக்குகளைப் பெறத் தவறும் வேட்பாளர்கள் இம்மாதம் 18 ஆம் திகதி நடைபெறும் இரண்டாம் கட்டத் தேர்தல் போட்டியிடவேண்டும்.

கடந்த 4 ஆம் திகதி நடைபெற்ற முதலாம் கட்டத் தேர்தலில் போட்டியிட்ட கம்யூனிஸ்ட்கட்சி வேட்பாளர்கள் அனேகமானோர் 50 சதவீத வாக்கைப் பெறத் தவறிவிட்டனர்.

இவர்களில் தேசிய பட்டியலில் இடம்பெற்றிருந்த 35 வேட்பாளர்களில் ஒருவரான உள்துறை அமைச்சர் செஸ்லோகிஸ்ஜாக்கும் (Czeslaw Kisz Czak) ஒருவர். தேசிய பட்டியலில் போட்டியிட்ட 35 பேரில் 33 பேர் 50 சதவீத வாக்குகளைப் பெறத் தவறிவிட்டனர்.

கடந்த 8 வருடகாலப் போலந்து நெருக்கடியின் போது போலந்து அதிபர் ஜருசெல்ஸ்கியின் வலதுகரமாகச் செயற்பட்டவர்தான் உள்துறை அமைச்சர் செஸ்லோகிஸ்ஜாக்.

சுதந்திர தொழிற் சங்க சம்மேளனத்தின் போராட்டம் உச்சக்கட்டத்தை அடைந்தபோது 1981 ஆம் ஆண்டு போலந்தில் இராணுவச் சட்டத்தைப் பிரகடனம் செய்து சுதந்திர தொழிற் சங்க சம்மேளனத் தலைவர் லெச் வலேஸாவையும் மற்றும் தொழிற்சங்கத் தலைகளையும் சிறையில் அடைத்தவர்தான் இந்த செஸ்லோகிஸ்ஜாக்.

போலந்தில் அரசியல் தீர்வு ஒன்றை ஏற்படுத்தும் நோக்குத்துடன் கடந்த பெப்ரவரி 5 ஆம் திகதி முதல் ஏப்ரல் 6 ஆம் திகதி வரை சுதந்திர தொழிற்சங்க சம்மேளனத்துக்கும் அரசாங்கத்துக்கும், இடையிலான பேச்சு வார்த்தைகளின் போது அரசாங்க சார்பில் கலந்து கொண்டவரும் இவரே.

இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது ஏற்பட்ட இணக்கத்துக்கு இணங்கவே கடந்த 4 ஆம் திகதி பொதுத்தேர்தல் நடத்தப்படுவதற்கான அரசியல் சூழ்நிலை உருவாகி இருந்தது.

சுதந்திர தொழிற்சங்க சம்மேளனத்துக்குக் கீழ்ச் சபையில் 35 சத வீத ஆசனங்களை ஒதுக்கும் இணக்கமும் இந்தப் பேச்சுவார்த்தையின் போதே ஏற்பட்டிருந்தது.

★ மேல்ச்சபையான செனட் சபையும் கீழ்ச் சபையான நாடாளுமன்றமும் இணைந்து ஜனாதிபதியைத் தெரிவு செய்வது.

★ ஜனாதிபதிக்குப் பரவலான அதிகாரங்களை வழங்குவது.

★ சுதந்திரத் தொழிற் சங்க சம்மேளனத்துக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கி அதனைச் சட்டபூர்வமான ஓர் அமைப்பாக ஏற்றுக் கொள்வது.

★ நாட்டில் தொழிலாளர் வேலை நிறுத்தங்களை முடிவுக்குக் கொண்டுவந்து தேசிய இணக்கம் ஒன்றை ஏற்படுத்துவது.

இவையே இந்த எட்டுவார காலப் பேச்சுவார்த்தையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏனைய பிரதான முடிவுகள் ஆகும்.

### பதவி விலகப் பயமுறுத்தல்

கடந்த ஜனவரி மாதம் போலந்தின் பலம் வாய்ந்த 'பொலிட் பீரோ' கூடிய போது போலந்து அதிபர் ஜருசெல்ஸ்கி சுதந்திர தொழிற்சங்க சம்மேளனத்துக்கு வழங்கப்படக்கூடிய சலுகைகள் குறித்து விளக்கி இருந்தார்.

'பொலிட் பீரோ' தமது ஆலோசனைகளை ஏற்றுக் கொள்ளத் தவறினால் தாம் பதவி விலகிவிடத் தயாராக இருப்பதாகவும் அவர் எச்சரித்திருந்தார்.

'பொலிட் பீரோ' வில் உள்ள பெரும்பாலான கடும்போக்காளர்களை இந்தப் பயமுறுத்தல் மூலமே அவர் வழிக்குக் கொண்டுவரக்கூடியதாக இருந்தது.

8 வாரகாலப் பேச்சுவார்த்தையின் இறுதியில் சுதந்திர தொழிற்சங்க சம்மேளனத்துக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் ஒப்பந்தம் கைச்சானபோது 'ஜனநாயகத் தினதும் சுதந்திர போலந் தினதும் ஆரம்பம்' என்று லெச்வலேஸா இதனை வர்ணித்திருந்தார்.

அதிகாரப்பலம் வாய்ந்த கீழ்சபைக்கு சுதந்திர தொழிற்சங்க சம்மேளனத்துக்கு 35 சதவீத ஆசனங்களை மட்டும் ஒதுக்கியது மூலம் அதிபர் ஜருசெல்ஸ்கி தமது பிடியைத் தொடந்து வைத்திருந்தாலும் தேர்தல் முடிவுகளின்படி பொதுசன ஆதரவில்லாத ஒரு தலைமைபீடமாகவே அது கருதப்படுகிறது.

இத்தேர்தலில் 2 கோடி 70 லட்சம் பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். சோவியத் யூனியனில் தற்போது நடைபெற்ற தேர்தல் போல் அல்லாமல் அரசாங்கத்துக்கும் அரசாங்க எதிர்ப்பு சக்திகளுக்கும் இடையிலான மோதலாக போலந்துத் தேர்தல் கருதப்பட்டது.

மிக்கெய்ல் கோர்பச்சேவ் மீண்டும் நிறைவேற்று அதிகாரமுள்ள அதிபராகத் தெரிவு செய்யப்பட வழிவகுத்த சோவியத் தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளேயே போட்டி நடைபெற்றது. அதாவது கடும்போக்காளர்களுக்கும் மிதவாதிகளுக்கும் இடையில் சோவியத் தேர்தலில் போட்டி ஏற்பட்டது.

போலந்து மக்களுக்கு தற்போதைய தேர்தல் முறை புதுமையானது. கடைசியாக 1985 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் அதிபர் ஜருசெல்ஸ்கியினால் நியமனம் செய்யப்பட்ட கம்யூனிஸ்ட் வேட்பாளர்களுக்கு வாக்களிக்கும் முறையே இருந்தது. ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டு விரும்பிய ஒருவருக்கு வாக்களிக்கும் நடைமுறை இருக்கவில்லை.

தற்போது நடந்த போலந்துத் தேர்தலில் சுதந்திர தொழிற்சங்க சம்மேளனத்துக்குள்ளேயே கடும் போக்காளர்களும் மிதவாதிகள் ஒருவருக்கெதிராக மற்றவர் போட்டியிட்டனர். கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளேயும் இதே நிலைமையே இருந்தது.

இத்தேர்தல் முடிவுகள் கடும் போக்காளர்களுக்கு ஏற்பட்ட பெரும் தோல்வியாகவே கருதப்படுகிறது.

அத்துடன் பெரும்பாலான மக்களால் ஏற்றுக்கொள்ளப்படாத ஒரு தலைமைப்பீடம் தொடர்ந்து ஆட்சியில் இருக்கும் விதத்தில் அரசியல் தீர்வு அமைத்துள்ளது.

உடனடியாக இது நெருக்கடி எதையும் தோற்றுவிக்காவிட்டாலும் காலப்போக்கில் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் கம்யூனிஸ்ட் எதிர்ப்பாளர்களுக்கும் இடையில் அதிகாரப் போராட்டம் உருவாகலாம் என்றே கருதப்படுகிறது. ★

# விளையாட்டுத் துறை

## யாழ் நகரில் இவ்வாரம்

யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 15, 17 வயதுக்குட்பட்டோருக்காக நடத்தப்படும் கிரிக்கெட் போட்டிகள் இன்று (17-06-89) ஆரம்பமாகின்றன.

**17 - 06 - 89**

**15 வயதுப்பிரிவு**

1. யாழ் மத்திய கல்லூரி **எதிர்** சென். பற்றிக்ஸ் கல்லூரி.
   இடம்: யாழ் மத்திய கல்லூரி மைதானம்.
2. கொக்குவில் இந்துக் கல்லூரி **எதிர்** சென். ஜோன்ஸ் கல்லூரி.
   இடம்: கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானம்.
3. வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி **எதிர்** மானிப்பாய் இந்துக் கல்லூரி.
   இடம்: வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானம்.

**17 வயதுப்பிரிவு**

1. கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் **எதிர்** யாழ். இந்துக் கல்லூரி.
   இடம்: கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மைதானம்.
2. சென். ஜோன்ஸ் கல்லூரி **எதிர்** சென். பற்றிக்ஸ் கல்லூரி.
   இடம்: சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானம்.
3. ஸ்கந்தவரோதயக் கல்லூரி **எதிர்** மகாஜனக் கல்லூரி.
   இடம்: ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானம்.

**18 - 06 - 89**

**17 வயதுப் பிரிவு**

1. மானிப்பாய் இந்துக் கல்லூரி **எதிர்** யாழ். மத்திய கல்லூரி.
   இடம்: யாழ். மத்திய கல்லூரி மைதானம்.

(எ - 6)

## சொற்சிலம்பம் இல: 101

**சரியான விடைகள்:**

**இடமிருந்து வலம்:**

1. அன்னதானம் 4. மல் 5. சரவணன் 6. சுலோகம் 7. மதி 9. வந்தனை 10. சரம் 11. ஓம் 12. பசி 15. மலை 16, சன்னியாசி.

**மேலிருந்து கீழ்:**

1. அருச்சுனன் 2. தாவரம் 3. கல் 4. மன்மதன் 5. சகவாசம் 8. தினை 9. வம்பன் 11. ஓலை 13. சினிமா 14. சசி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org